# தமிழ்நாடு அரசு அலுவலர்

# ஒன்றியம்

## மாநில மாநாட்டு சிறப்பு மலர்

## 1981

JL
V211,88
N81
94370

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்

## 48-வது மாநில மாநாடு-சென்னை

**7-2-81**

## மாநில மாநாட்டு சிறப்பு மலர்

84370

# நுழைவாயில்

இனிய உள்ளங்களே !

வணக்கம். தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் 48-வது மாநில மாநாடு சென்னை மாநகரில் நடைபெறுவதையொட்டி நமது ஒன்றியத்தின் அதிகார பூர்வமான திங்கள் இதழ் ' தமிழ்நாடு பொது ஊழியன் ' அளிக்கும் சிறப்பு மலர் உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்த சிறப்பு மலரை மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து வெளியிட துணை நின்ற அன்பு நண்பர்களுக்கெல்லாம் எங்களது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்—நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் அறுபதாண்டுகளாக இம்மாநிலத்தில் பீடு நடை போட்டு பெருமித உலா வருகிறது. மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக இந்த இயக்கம் எத்தனையோ சோதனைகளுக்கிடையில் வளர்ந்து வருகிறது. 22 ஆண்டுகளாக இந்த இயக்கத்துக்கென ஒரு ஏட்டைத் தொடர்ந்து நடத்தும் தனிப் பெருமை நமது அமைப்புக்கு மட்டுமே உரியது.

அத்தகைய இயக்கக் கொடியின் கீழ் ஒன்று கூடும் முன்னணிவீரர்களை வாழ்த்தி வரவேற்று அவர் தம் தூய பணி தொடர இந்த மலரை உங்கள் திருமுன் படைக்கின்றோம்.

கடந்த மாநில மாநாட்டில் நம்மோடு இருந்து, நமது நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு தோன்றாத் துணையாக இருந்த முன்னாள் துணைத் தலைவர் திரு. வி. ஆர். கோபாலகிருஷ்ணன் இன்று நம்மிடையே இல்லை. இயற்கை அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டது. பதினைந்தாண்டு காலமாக இந்த இயக்கத்திற்காக அல்லும் பகலும் உழைத்த அருமை நண்பர் வி. ஆர். ஜியின் நினைவை இந்த நேரத்தில் நெஞ்சிலே நிறுத்திக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு ஜனவரி 27-ம் நாள் புதுக்கோட்டையில் மறைந்த முன்னாள் மத்திய செயற்குழு உறுப்பினர் எம். சேதுராமன் ஆற்றிய தொண்டு அளப்பரியது. தொழிற் சங்க உரிமையை நாம் பெற வேண்டுமென்பதற்காக 1957-ல் முதன் முதலாக கையெழுத் திட்டு போர்ப்பரணி பாடத் தொடங்கிய எழுவரில் ஒருவர் அவர். வி.ஆர். ஜியிலிருந்துசேதுராமன் வரை தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே ! அத்தகைய அருமைச் செல்வங்களின் நினைவிற்கு, அன்புத் தலைவர்களின் ஆற்றலுக்கு இந்த மலரைக் காணிக் கையாக்குகின்றோம்.

" இரண்டு தவணை அகவிலைப் படியையும் வர இருக்கின்ற அந்த செலவுத் திட்டத்தில் நாவலர் அறிவிப்பாரா ?

ஊதியக் குழு குறைபாடுகளை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள் மாண்பு மிகு முதல்வர் போக்கி விடுவாரா?''

இப்படிப்பட்ட கேள்விகள் இன்றைய தினம் அரசு அலுவலர்களில் எங்குகெங் பார்த்தாலும் பேசப்படுகின்றன. மண்ணெண்ணையும் அரிசியும் வாங்க நியாய விலைக் கடைகளிலே காத்து நிற்கின்ற அடித்தள ஊழியர்கள்—கையிலே கொண்டு வந்த கால் வயிற்றுச் சிற்றுண்டியைச் சாப்பிட்டு விட்டு மரத்தடி காற்றையாவது உண்டு மகிழலாம் என ஓய்வெடுக்கும் மகளிர் அனைவர் உள்ளத்திலும் இந்தக் குரல், இந்த ஒலி இதயத்தின் அடித்தளத்தில் இருந்து பீறிடுகின்ற சோக உணர்வுடன் வெளி வருகின்றது.

யாரை யார் நொந்துகொள்வது? நாம் இல்லாமையோடு, போதாமையோடு, வாழ்க்கைச் சுமையோடு, வறுமைத்தவிப்போடு போராடுகின்றோம். மாநில அரசுகளோ அதிக வருமானம் தேவையென்று, மத்திய வரி வசூலில் நிறைய மான்யம் தேவையென்று, மாநில சுயாட்சி தேவையென்று, ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு தேவையென்று, போராடுகிறார்கள். ஒரு போராட்டத்தைத் தாங்கள் நடத்துவதைக் காரணம் காட்டி அந்த ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகளை, உரிமைகளை மாநில அரசு மறுப்பதற்கில்லை. அதை வலியுறுத்துவதும் நம்முடைய மாநாட்டின் நோக்கம்.

இந்தியாவில் ஐம்பது பேருக்கு ஒருவர் அரசு ஊழியராகவோ அரசு சார் ஊழியராகவோ இருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்கள் 35-83 லட்சம், மாநில அரசு ஊழியர்கள் 45-16 லட்சம் அரசு சார் நிறுவனங்களை சேர்ந்தவர்கள் 16-28 லட்சம், உள்ளாட்சி ஊழியர்கள் 19-55 லட்சம். இத்தப் பெரும் படையில் ஒரு பிரிவினராகிய நாங் உள்ள உறுதியோடு ஒன்றுபட்டால் எத்தனையோ கோரிக்கைகளில் இன்னும் நல்ல வெற்றி பெறலாம். அந்த உள்ள உறுதியை—உருக்குபோன்ற ஒற்றுமையை உரு வாக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் காணப் பாதை அமைப்பதுதான் சென்னையில் நடைபெறும் மாநாட்டின் நோக்கம்.

நம்முடைய உணர்வு பெருக்கெடுத்தோடுமானால் நிதிப் பற்றாக்குறை என்ற மாய் மால மணல் திட்டுகளையெல்லாம் அடித்துக்கொண்டு இலட்சியப் பேராழியை அடையக் கூடிய வல்லமை நமக்கு உண்டு. அதை உணர — உணர்த்துவிக்க அணி அணியாகத் திரண்டு வரும் அன்பு உள்ளங்களே! உங்கட்கு இந்த இனிய, எளிய மலரைக் காணிக்கை யாக்குகிறோம்.

—''மலர்க்குழு''

## அறிஞர் அண்ணா கூறியது

''அரசு ஊழியர்களின் குறைகளை நீக்க நாங்கள் அக்கறை காட்டுவோம்''

அவர்கள் வீடுகளில் என்ன தொல்லைகளை அனுபவிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நானே எழுத்தராகவும் பணியாற்றியிருக்கிறேன். அதன் மூலம் அந்த நிலையை என்னால் உணர முடியும்.

தலைவலிக்குப் பலவகை மருந்துகள் உண்டு. அதைத் தடவும் பாணியும் பல உண்டு. தடவுகிறவர்கள் தடவினால் தலைவலி தானாகப் பறந்துவிடும். மென்மையாகத் தேய்த்து விடுவதே எங்கள் முறையாகும்.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்

# 48-வது மாநில மாநாடு

# குழுக்கள்

## மாநாட்டு இட ஏற்பாடு, பந்தல், மின் அமைப்புக்குழு

1. திரு எம். புண்ணியகோடி (மாநில பொருளாளர்)
2. ,, ப. கண்ணப்பன் (சென்னை மாவட்ட செயலர்)
3. ,, த. கருப்புசாமி (மாநில துணைத்தலைவர்)
4. ,, சேஷாத்திரி (பொதுப்பணிதுறை)
5. ,, க. பகவான்சிங் (மாநில பொதுச்செயலாளர் மோட்டார் வாகன பராமரிப்புத்துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கம்)

## வரவேற்புக்குழு

1. திரு வி. ரா. பழனியாண்டி (மாநில துணைத்தலைவர்)
2. ,, எம். கண்ணன் (பிரச்சாரச் செயலர்)
3. ,, இரா. நவநீதகிருஷ்ணன் (அமைப்புச் செயலர்)
4. ,, பி. கே. முத்துகிருஷ்ணன் (சிறுவர் சீர்திருத்தப்பள்ளி சங்கத் தலைவர்)
5. ,, பாட்சா (கூட்டுறவுத்துறை)
6. ,, ஆர். முத்துகிருஷ்ணன் (மீன் வளத்துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கம்)
7. ,, ஆர். செல்வகுமாரவேலு (டிரில்லிங் பிரிவு ஊழியர் சங்கத் தலைவர்)
8. ,, பி. அப்துல் முத்தலீப் (சமூக நலத்துறை சங்கப் பொதுச்செயலாளர்)
9. ,, எஸ். ராஜேந்திரன் (பால் வழங்குத் துறை சங்கத் தலைவர்)
10. ,, தல். ரவிசெல்வம் (தொழில் வணிகத்துறை நிலைப் பணியாளர்கள் சங்கத் தலைவர்)
11. ,, வி. வேதாச்சலம் (பயிற்சித்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம்)
12. ,, என். தியாகராசன் (தேர்வுகள் இயக்கக சங்கத் தலைவர்)

மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகிகள்.

## மலர்க்குழு

1. திரு பி. குருராஜன் (கல்வித்துறை)
2. ,, சு. விரசேகரன் (காவல்துறை)
3. ,, வே. சங்கர நாராயணன் (மின் ஆய்வுத்துறை)

## பிரதிநிதிகள் உபசரிப்புக்குழு

1. திரு கே. கலியபெருமாள் (தலைமை நிலையச் செயலாளர்)
2. ,, சூடாமணி | கல்வித்துறை
3. ,, தியாகராசன் |
4. ,, அனந்த நாராயணன் | சென்னை மாவட்ட துணைச் செயலர்.
5. ,, பாண்டியன் |
6. ,, கே. டி. ராஜன் (பிரச்சாரச் செயலர்)
7. ,, வி. சுப்பிரமணியம் (மத்திய செயற்குழு உறுப்பினர்)
8. ,, ஆர். மனோகரன் (விவர வகை மேம்பாட்டு நிலையம்)
9. திருமதி அனுசுயா சுந்தரலிங்கம் (மகளிர் அணி)
10. ,, ஏ. கே. குப்பாபாய் ( ,, )
11. ,, ஏ. ஆர். குற்ஸ்டி ( ,, )

## தீர்மான ஆய்வுக்குழு

1. திரு ஜி. எபநேசர் (பொதுச் செயலாளர்)
2. ,, எம். ஆர் அப்பன் (மத்திய செயற்குழு உறுப்பினர்)
3. ,, க. வெ. சுப்பிரமணியம் (நகரமைப்புத்துறை)
4. ,, நியுமன் நவமணி கால் நடைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத் தலைவர்)
5. ,, த. இராமசாமி (மாவட்ட இணைச் செயலர்)
6. ,, பி இரத்தினம் (தொழில் வணிகத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத் தலைவர்)
7. ,, வெங்கட்ராமன் | கல்வித்துறை
8. ,, சூடாமணி |
9. ,, சாயிராம | மருத்துவத்துறை
10. ,, அம்ஜத் மொகைதீன் |
11. ,, ம. இலக்குமணப் பெருமாள் (விவர வகை மேம்பாட்டு நிலையம்)
12. ,, த. ரா கண்ணன் (மின் ஆய்வுத்துறை)
13. ,, சந்திரசேகரன் (பொதுபபணித துறை அமைச்சுப்பணியாளர்கள் சங்கத் துணைத் தலைவர்)

## பிரச்சாரக்குழு

1. திரு கே. டி. ராஜன் (மாவட்ட பிரச்சாரச் செயலாளர்)
2. ,, மணி (தொழிலாளர் நலத்துறை)
3. ,, அ. தர்மலிங்கம் (நில அளவுத் துறை)
4. ,, ஸ்ரீதரன் (மாவட்ட துணைச் செயலர்)
5. ,, நியுமன் நவமணி (மத்திய செயற்குழு உறுப்பினர்
6. ,, ஜெயமணி (மத்திய செயற்குழு உறுப்பினர்)
7. ,, வெங்கட கிருஷ்ணன் (மீன் வளத்துறை)
8. ,, செல்லசாமி (மாவட்ட துணைச் செயலர்)
9. ,, து. இராமசாமி (சர்க்கரைத் துறை)
10. ,, சங்கர் (மருத்துவத் துறை)
11. ,, சந்திரகுமார் (நில அளவுத் துறை)
12. ,, சந்திரன் (தொழில் நுட்பத் துறை)
13. ,, கோ. சிவலிங்கம் | விவர வகை மேம் பாட்டு நிலையம்
14. ,, பெ. மாசிலாமணி |
15. திருமதி அனுசுயா சுந்தரலிங்கம் (பத்திர பதிவுத் துறை)

## தொண்டர் அணித் தலைவர்கள்

1. திரு கே. ஆர். பூபதி (சென்னை மாவட்ட துணைத் தலைவர்)
2. ,, த. இராமசாமி (மாவட்ட துணைச் செயலர்)
3. ,, சௌந்தரராசன் ( ,, )
4. ,, பிலோமின் ராஜ் (சீர்திருத்தப் பள்ளித்துறை)
5. ,, தாமஸ் எடிசன் (கல்வித் துறை)
6. ,, மாரிமுத்து (கால் நடைத் துறை)

## அலுவலகப் பொறுப்பு

1. திரு கே. ஆர். சுப்பிரமணியம் (நில அளவுத் துறை)
2. ,, து. பி. பாலகுருப் ( ,, )
3. ,, எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி (பொதுப்பணித் துறை)

——oOo——

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

January 12, 1981

Dear Shri Siva Ilango,


I thank you for your letter dated 2nd January, 1981 inviting me to inaugurate the 48th Annual State Conference of the Tamil Nadu Govt. Officials Union at Madras on 7th February 1981.

I am sorry owing to my busy shedule here it is not possible for me to leave Delhi on that day. I, however, send my best wishes for the success of the Conference.

Yours sincerely,

*(M. Hidayatullah)*

## இந்திய குடியரசுத் தலைவர்



திரு. சஞ்சீவரெட்டி அவர்கள்

## பாரதப் பிரதமர்



திருமதி இந்திராகாந்தி அவர்கள்

## தமிழக ஆளுநருடன் மாநில நிர்வாகிகள்



திருவாளர்கள் மேன்மை தங்கிய

க. கலியபெருமாள், (தலைமை நிலைய செயலர்) சிவ. இளங்கோ (மாநிலத் தலைவர்) தமிழக ஆளுநர் சாதிக்அலி

ஜி. எபநேசர், (பொதுச் செயலர்) எம். புண்ணியகோடி (பொருளாளர்)




மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்
தமிழக முதல்வர்

## தமிழக அமைச்சரவை



மாண்புமிகு நாவலர்
இரா நெடுஞ்செழியன் M.A.
(நிதி அமைச்சர்)



மாண்புமிகு எஸ். ராமச்சந்திரன்
(மின்துறை அமைச்சர்)



மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி
(ஊரகத் தொழில் அமைச்சர்)



மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)




மாண்புமிகு ஆர் எம். வீரப்பன்
(அறநிலயத்துறை அமைச்சர்)




மாண்புமிகு செ. அரங்கநாயகம்
(கல்வித்துறை அமைச்சர்)




மாண்புமிகு கே. காளிமுத்து
(வேளாண்மைத் துறை அமைச்சர்)




மாண்புமிகு குழந்தைவேலு
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)



மாண்புமிகு மா. முத்துச்சாமி
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)




மாண்புமிகு திருநாவுக்கரசு
(தொழில்துறை அமைச்சர்)




மாண்புமிகு H.V. ஹண்டே
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)



மாண்புமிகு கோமதி சீனிவாசன்
(சமூக நலத்துறை அமைச்சர்)




மாண்புமிகு கே. ராஜாமுகம்மது
(நீர்பாசனத் துறை அமைச்சர்)




மாண்புமிகு விஜயசாரதி
(ஆதிதிராவிட நலத்துறை)



மாண்புமிகு S. N. ராஜேந்திரன்
பொதுப்பணித்துறை அமைச்சர்)



மாண்புமிகு எஸ். ராகவானந்தம்
(தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)




மாண்புமிகு பொன்னையன்
(கூட்டுறவுத்துறை அமைச்சர்)



திரு. வி. கார்த்திகேயன்
ஐ.ஏ.எஸ்,
(தலைமைச் செயலர்)



டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி




மாநிலத் தலைவர் திரு. சிவ. இளங்கோ

தியாக நெருப்பில் புடமிட்ட தங்கம்
சிறைசெல்லத் தயங்கா வீரப்போர்ச் சிங்கம்


—மலர்க் குழு



எம். புண்ணிய கோடி
(மாநிலஒன்றியப் பொருளாளர்)



இர. நவநீத கிருஷ்ணன்
(மாநில அமைப்பு செயலர்)




க. கலிய பெருமாள்
(தலைமை நிலையச் செயலர்)




வீரா பழனியாண்டி
துணைத் தலைவர் (வெளியூர்)



[illegible]. கருப்பசாமி
[மாநிலத் துணைத் தலைவர் (நகரம்)]



திரு. G. எபநேசர்
(மாநில பொதுச்செயலர்)




எம். கண்ணன்
(மாநில பிரச்சாரச் செயலர்)




ப. கண்ணப்பன்
(சென்னை மாவட்டச் செயலர்)




கே ஆர். பூபதி
(சென்னை
மாவட்டத் துணைத் தலைவர்)




K. T. ராஜன்
(சென்னை மாவட்ட
பிரசாரச் செயலர்)




P குருராஜன்
(கல்வித்துறை)
மலர்க்குழு




த. இராமசாமி
சென்னை மாவட்ட துணைச்செயலர்)




திரு. சுப்பிரமணியம்
மத்திய செயற்குழு உறுப்பினர்



வே. சங்கரநாராயணன்
(மின் ஆய்வுத்துறை)
மலர்க்குழு



சு. வீரசேகரன்
(காவல்துறை)
மலர்க்குழு



மாயவரம் வட்டக்கிளை நிர்வாகிகள்

## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் தஞ்சை மாவட்ட நிர்வாகிகள்




உட்கார்ந்திருப்பவர்கள்:

ஜே. துரைசிங்கம், மத்திய செயற்குழு உறுப்பினர், இரா. இராமதாஸ், செயலர்.
கோ. நாராயணசாமி, தலைவர், சொ. வேலாயுதம், துணைத் தலைவர்.
கு. கந்தசாமி, பிரச்சாரச் செயலர்.

பின்வரிசை:

க. பாலசுப்பிரமணியம், அமைப்புச் செயலர், மு. இராமகிருஷ்ணன், பொருளாளர்.
எஸ். இராமலிங்கம், இணைச் செயலர்.

## தென் ஆற்காடு மாவட்டக்கிளை நிர்வாகிகள்




உட்கார்ந்திருப்பவர்கள் :

அ. வேலுசாமி, (பிரச்சாரச் செயலர்). சு. அறிவுக்கரசு (தலைவர்) டி. திரவியம். (துணைத் தலைவர்). ஜே. கோபாலகிருஷ்ணன் பி.ஏ., (செயலர்).

பின்வரிசை :


ஆர். கந்தவேல், இணைச் செயலர். ப. விசுவநாதன், பெருளாளர்.

## " மணப்பாறை வட்டக்கிளை நிர்வாகிகள் "



து. செ. சீனிவாசன், இணைச்செயலர். நெ. கோவிந்தராசன், பொருளாளர்.
இரா. பரமசிவம், செயலர். வ. பார்த்தசாரதி, தலைவர்-மாநில செயற்குழு உறுப்பினர்.
செ. இராசதுரை, துணைத்தலைவர், கு. மணக்காவு.

## சீர்காழி வட்டக் கிளை நிர்வாகிகள்




ஆர். கல்யாண சுந்தரம், பொருளாளர். ஜே. துரைசிங்கம், தலைவர்.
பி.வி. சோமசுந்தரம், துணைத்தலைவர். எஸ். எம். ஜெகதீசன், செயலர்.

## மதுரை மாவட்ட நிர்வாகிகள்




பார்தசாரதி (முன்னாள்தலைவர்) தினகரன் (அமைப்புச் செயலர்)
கோபால்சாமி (துணைத்தலைவர்). சந்திரசேகரன் (தலைவர்).
ராமசாமி (செயலர்). அகமது பேய்க் (பொருளாளர்)
எஸ். டி. இளங்கோ (பிரச்சாரச் செயலர்). முத்துபெரியசாமி (ம. செ. கு. உறுப்பினர்).

## புதுக்கோட்டை மாவட்டக்கிளை நிர்வாகிகள்



உட்கார்ந்திருப்போர் :

வி. ராமதாஸ் (துணைத்தலைவர்), அந்தோணிசாமி (பிரச்சாரச் செயலர்)

செ. தனபால் (தலைவர்). கே. எம். எஸ். சையத்அலி (செயலர்). எஸ். முத்துக்கிருஷ்ணன்.

நிற்போர் :

பட்டேல் செல்வராஜ் (பொருளாளர்). சண்முகசுந்தரம் (இணைச் செயலர்).

## வட ஆற்காடு மாவட்டக்கிளை நிர்வாகிகள்



உட்கார்ந்திருப்போர் :

வேலாயுதம் (செயலர்), கே. கங்காதரன் (தலைவர்), நாகேஸ்வரன் (துணைத்தலைவர்)


வெ. ஜெ. ஸ்ரீதரன் (துணைத்தலைவர்)

நின்றிருப்போர் :

என். கந்தசாமி (அமைப்புச் செயலர்) ஏ. ஆர். ஜெயபால் (பொருளாளர்)

கே ஆர். நடேசன் (அரிஜன நலத்துறை)

## "தர்மபுரி மாவட்டக்கிளை நிர்வாகிகள்"




உட்கார்ந்திருப்பவர்கள் :

எஸ். சாமுவேல் ஜெயராஜ் (துணைத் தலைவர்). ஏ. ரெங்கநாதன் (செயலர்)
ஏ. அப்துல்சுபகான் (தலைவர்). கே. நாகசுப்பிரமணியம் (அமைப்புச் செயலர்).

பின்வரிசை :

கே. செகந்நாதன் (பொருளாளர்). எம். கந்தசாமி (துணைத் தலைவர்)
கே. என். கிருஷ்ண செட்டி (இணைச்செயலர்)

## "சேலம் மாவட்டக்கிளை நிர்வாகிகள்"




எம். எம். இஸமாயில
(செயலாளர்)




[illegible]. அங்கையன்
([illegible]மைப்புச் செயலர்)



ஏ. சதாசிவம்
இ[illegible]ணச் செயலர்




ஆர். சக்திவேல்
(பொருளாளர்)



பி. சுப்பிரமணியம்
(பிரச்சாரச் செயலர்)



ஆர். ஜெயபாலன்
(துணைத்தலைவர்)




சு. இளஞ்செழியன்
(துணைத் தலைவர்)

## "முன்னணி வீரர்கள்"



சுப. சீதாராமன்
(முன்னாள் பொதுச் செயலர்)



P. முத்து பெரியசாமி
(மதுரை மாவட்ட
ம. செ. உறுப்பினர்)




பவானி கருத்தரங்கில் வட்டக்கிளைத் தலைவர் ஆறுமுகத்திற்கு மாநில தலைவர் சிவ. இளங்கோ மாலை அணிவிக்கிறார்.



எம். முருகன்
(ஒட்டன் சத்திரம் இணைச் செயலர்)



பி. கோபால்சாமி
(மதுரை மாவட்டத் துணைத் தலைவர்)



பன்னீர் செல்வம
(வேதாரண்யம் கிளைச் செயலர்)


"செங்கை மாவட்டக்கிளை நிர்வாகிகள்"



எஸ். பைசுதீன், பி. காம்.,
(பொருளாளர்)




ஆர். கே. காந்திராசன்
(பிரச்சாரச் செயலர்)




கே. வி. சொக்கலிங்கம்
துணைத் தலைவர் (நகர்)




எஸ். நாராயணன்
(தலைவர்)



பெ. தாண்டவராயன்
(செங்கை மாவட்ட செயலாளர்)




இ. த. ஏழுமலை
துணைத் தலைவர் (புறநகர்)



இர. வரதன்
(இணைச் செயலர்)

## ஆலங்குடி வட்டக்கிளை நிர்வாகிகள்



உட்கார்ந்திருப்பவர்கள் :

பி. முருகன், பொருளாளர். G. சுப்பிரமணியம், துணைத் தலைவர்
C. சுப்பிரமணியம், தலைவர். து. ராமகிருஷ்ணன், இ. செயலர்.

பின்வரிசை :

ஆ. ஆ. கோபாலகிருஷ்ணன், செயலர். K. முத்துகிருஷ்ணன், இணைச் செயலர்.

கா. இராசா முகமது,
பி.ஏ., பி.எல்.,
நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

நாள் 20—1—81

**வாழ்த்துச் செய்தி**

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் 48-வது மாநில மாநாடு நடைபெறுவது குறித்து மெத்த மகிழ்ச்சி. இம்மாநாட்டில் நான் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

இம்மாநாட்டினையொட்டி சிறப்பு மலர் வெளியிடும் செய்தியும் அறிந்தேன். மாநாடு இனிது நடந்தேறவும், சிறப்பு மலர் செவ்வனே அமைந்திடவும் என் உளங்கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

**(கா. இராசாமுகமது)**

---

எஸ். திருநாவுக்கரசு,
தொழில் அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009


நாள் 21—1—81

**வாழ்த்துச் செய்தி**

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் 48-வது மாநில மாநாடு அடுத்த மாதம் சென்னையில் நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அரசு அலுவலர்கள் அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். இம்மாநாடு பயனுள்ள முறையில் நடக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**(எஸ். திருநாவுக்கரசு)**

## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய 48-வது மாநில மாநாட்டில்



## தலைமை நிலைய செயலாளர் திரு க. கலியபெருமாள்

### அவர்களின் வரவேற்புரை

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய 48 வது மாநில சிறப்பு மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியின் கூட்டத் தலைவரும், அரசு அலுவலர் ஒன்றிய மாநில துணைத் தலைவருமாகிய பெரியவர் திரு. த. கருப்பசாமி அவர்களே, தமிழ்நாடு அரசு கடை நிலை ஊழியர்கள் சங்கத் தலைவர் திரு ஜி. துளசிங்கம் அவர்களே. ஊர்தி ஓட்டுநர் சங்கத் தலைவர் திரு. கி. சுப்பிரமணியம் அவர்களே, நகராட்சி சுகாதார மேற்பார்வையாளர்கள் சங்கத் தலைவர் திரு இ. ஜெயராமன் அவர்களே, பட்டதாரி ஆசிரியர் கழகத் தலைவர் திரு. பி என். பழனிச்சாமி அவர்களே. சென்னை மாநகராட்சி அலுவலர் சங்க பொதுச் செயலர் திரு. பி. ரெங்கனாதன் அவர்களே. முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத் தலைவர் திரு. அ. பாலதண்டபாணி அவர்களே, மாநகராட்சி அலுவலர் கூட்டமைப்பின் தலைவர் திரு பூபாலன் அவர்களே, ஏனைய தோழமை மற்றும் இணைப்புச் சங்க நிர்வாகிகளே: பெரியோர்களே, தாய்மார்களே, அன்பு இதயங்களாம அருமை சகோதர சகோதரிகளே ஒன்றுபட்ட இயக்கத்தின் மூலந்தான் உரிமைகளைத்தட்டிக் கேட்டு பெறமுடியும் என்று ஓடோடி வந்திருக்கின்ற உங்களது உள்ள உணர்வுகளை பாராட்டி வருக, வருக என்று சிரந்தாழ்த்தி கரங்கூப்பி வணங்கி மகிச்சியுடன் வரவேற்கின்றேன்.

1976ம் ஆண்டு கோவையில் நடைபெற்ற மாநாட்டிற்குப் பிறகு இன்றைய தினம் நாம் இங்கு உரிமைக் குரல் கொடுக்கக் கொள்கைக் கொடியேந்தி ஒன்று கூடி இருக்கின்றோம். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடியிருப்பதுபோல நல்ல பல சங்கங்களின் வாயிலாகத்தான் நமது சமுதாயத்திற்கு மட்டுமல்ல பொதுமக்களுக்கும் பெரும் பெரும் காரியங்களை சாதித்தல் கூடும் என்று ஒன்று கூடி இருக்கின்றோம். தங்கட்கிருக்கும் பல்வேறு சங்கடங்கள், இன்னல்கள், இடர்பாடுகளை எல்லாம் பொருட்படுத்தாமல் பொது நலனே தன்னலம் என்று பலநூறு மைல்களுக்கு அப்பாலிருந்து வருகை புரிந்திருக்கின்ற உங்களது பொதுநல நோக்கை, தியாக உணர்வை, தன்னலம் கருதாத் தன்மையைப் பாராட்டி போற்றி, உங்களை எல்லாம் வரவேற்பதிலே மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

விலைவாசி விஷம்போல ஏறுகிறதே! தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம் எப்போது கிடைக்கும் என்று ஏக்கப் பெருமூச்சுடன் ஒன்று கூடி இருக்கின்றோம். 1—9—80 முதல் ஒரு பஞ்சப்படி உயர்வும் 1—12—80-ல் மற்றொரு பஞ்சப்படி உயர்வும் வழங்கவேண்டியுள்ளதே. அவ்வறிவிப்பை இம் மாநாடு நிறைவு பெறும்போதாவது பெற்று செல்ல மாட்டோமா என்ற உள்ளக் கிடக்கையுடன் ஒன்றுகூடி இருக்கின்றோம். நம்முடைய நீண்ட நெடுங்கால கோரிக்கைகளான ஓய்வு பெற்ற அரசு ஊழியர் பிள்ளைகளில் ஒருவருக்கேனும் அரசுப் பணி கிடைப்பதற்கான வழிவகைக் காண மாட்டோமா என்று திரண்டிருக்கின்றோம். மாதந்தோறும் மருத்துவப்படி வழங்கும் கோரிக்கை இப்போதாவது ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையில் ஓடோடி வந்திருக்கின்றோம். வேளாண்துறை, கல்வித்துறை, காவல் துறை போன்ற பல்வேறு துறைகளில் சுமக்க முடியாத வேலைப் பளுவால் அவதியுற்றுக் கொண்டிருக்கும் அலுவலகப் பணியாளர்களுக்கு வேலைப்பளுவிற்கேற்ற கூடுதல் பணியாளர்கள் விரைவில் நியமிக்கப் பெறுவதன் மூலம், உழைத்து, உழைத்து ஓடாகிக் கொண்டிருக்கும் பணியாளர்கட்கு விடுதலை கிடைக்காதா? என்ற எண்ணங்களுடன் எழுச்சி மிகு மாநாட்டிற்கு வருகை தந்திருக்கின்றோம். மத்திய அரசு ஊழியர்கட்கும், ஆந்திரா, மேற்குவங்கம், கேரளா, கர்னாடகா போன்ற மாநில அரசு ஊழியர்கட்கும் நமக்கும் அடித்தள ஊழியர் நிலையிலேயே அடிப்படை ஊதியத்தில் ரூ. 70/ வரை வித்தியாசம் உள்ளதே. அதைக் களைவதற்கு இம்மாநாட்டில் வழி வகை கண்டாக வேண்டும் என்ற அவாவுடன் வருகைத் தந்திருக்கின்றோம்.

அரசு ஊழியர்களுக்கு சலுகை என்று பத்தாண்டு பணி முடித்தவர்களுக்குத் தேர்வுநிலை என்ற அறிவிப்பை வழங்கிவிட்டு அதனால் யாருக்கும் பணப்பலனாக ஒரு ஊதிய உயர்வுகூட கிடைக்காத ஏமாற்றநிலை ஒரு புறம், பதவி உயர்விற்கான குறிப்பிட்டுள்ள தேர்வுகளில் தேர்வு பெற்றால்தான் தேர்வுநிலை என்று இளநிலை உதவியாளர்கள் போன்ற இனங்கட்கு நிபந்தனைகள் மறுபுறம், இவ்வாறான போலி ஆணைகளை உடைத்தெறிவதற்காக நாம் இன்றைய தினம் இங்கே அணிவகுத்து நிற்கின்றோம். ஆங்கிலேயர் காலத்தில் ஆக்கப்பட்ட அடிமைத்தனங்களை உள்ளடக்கிய அரசு ஊழியர் நடத்தை விதிகளை தூக்கியெறிந்து அரசு ஊழியர் சமுதாயம் விடுதலைப் பெறும் மாநாடாக இம்மாநாடு அமையவேண்டும் என்று

சென்னை மாநகர் நோக்கிப் படையெடுத்து வந்திருக்கிறோம். அரசு ஊழியர் குடியிருப்பிற்கு வாடகை பெறும் விஷயத்தில் அரசு ஒரு தெளிவான கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுவதற்காக இங்கே அலை, அலையாய்க் கூடி இருக்கின்றோம். அரசு உதவி பெறும் பள்ளிகட்கு அரசாங்கத்தில் இருந்து மானியம் வழங்கும்போது, அடிப்படை ஊதியத்துடன் பஞ்சப்படியை இணைக்கும் ஊதியக்குழு வரும்போதெல்லாம், மானியம் வழங்கும் சதவிகிதம் குறைக்கப்பட்டு முதலாவது ஊதியக் குழுவின்போது 15% வழங்கப்பெற்ற மானியம் தற்போது 4% ஆக வழங்கப் பெறுகின்றது. எனவே, அரசு நிதியிலிருந்து செலவு செய்யும்போது பின்பற்றப்படும் அதே கொள்கை அரசு ஊழியர்களிடமிருந்து வாடகை வசூலிக்கும்போதும் பின்பற்றப் படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இம்மாநாட்டில் பங்கேற்றிருக்கிறோம். கருவூல கணக்குத்துறை ஊழியர்களை, அவர்களது உரிமைகோரி போராடியதற்காக அவர்கள் போராடிய நாட்களை ஊதியம் இல்லா விடுப்பாக அறிவித்ததும், அவர்களை இடம் மாறுதல் செய்து பழி வாங்கியிருப்பதும் போன்ற பழிவாங்கும் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும் என்பதற்காக ஆர்த்தெழுந்து வந்திருக்கிறோம்.

தமிழ் நாடு அரசு அண்மையில் 24,000 கிராம அலுவலர்களைப் பணி நீக்கம் செய்து அப்பொறுப்பு ஏற்க தேர்வாணைக்குழுவால் பணியாளர்களை தேர்ந்தெடுக்க வழிவகை செய்துதனது கொள்கையை தெளிவுபடுத்தியுள்ளது. தமிழக முதல்வர் அவர்கள் சீனியாரிட்டி முறையை எங்கும் எதிலும் நடைமுறைப் படுத்த இலட்சியம் கொண்டவர் எனினும் கல்வித்துறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் ஒருதலைபட்சமான போக்கால், இருபெரும் சமுதாயமான சர்விஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசு ஊழியர்களான 'ஏ' பிரிவினருடன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் கூட தேர்ந்து எடுக்கப்படாத 'பி' பிரிவு அலுவலகப் பணியாளர்களை இணைக்கும் பொழுது, அடிப்படை விதிகள் 130 புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் நியமன விஷயத்தில் சர்வீஸ் கமிஷன் தேர்வு முறைக்கு அளிக்கப்பெற்றுள்ள முக்கியத்துவம், சர்வீஸ் கமிஷன் மூலம் நியமிக்கப்பட்ட கல்வித்துறை பணியாளர்களுக்கு அளிக்கப்படாததுடன், அவர்களின் அடிப்படை பணி உரிமை பெரிதும் பாதிக்கப்படும் வகையில் அரசு ஆணையிட்டு இருப்பது முரண்பாடான கொள்கையாகும். 'பி' பிரிவு ஜூனியர்களின் கீழ் 'ஏ' பிரிவு சீனியர்கள் ஆயிரக் கணக்கானோர் பணியாற்றி வருகின்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளதையும் சர்வீஸ் விதிகளில் மற்ற துறைகட்கும் பரவி பாதிக்கக் கூடிய மோசமான முன்னுதாரணமாக்கி யுள்ளதும் ஆன அவல நிலையை அகற்றிடவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்து இம்மாநாட்டை நம்முடைய பொதுநலத் தொண்டன்—அரசு ஊழியர்கள் பணி யிலிருக்கும்போது இறந்தால் பத்தாயிரம், ஈட்டிய விடுப்பை சரண்செய்து அதற்குரிய ஊதியம் பெறுதல், இறந்த அரசு ஊழியரின் சடலத்தை அரசு செலவில் சொந்த ஊருக்கு எடுத்துச்செல்லல், அரசு ஊழியர்களைக் கொத்தடிமைகளாக ஆக்கி, அடக்கி ஆள்வதற்குக் கருவியாகப் பயன்படுத்திய இரகசிய குறிப்பேட்டு முறையை ஒழித்தல், ஒய்வூதிய விதி, களைத் தளர்த்தி, இலகுவாக ஒய்வூதியம் பெற ஆணைகளைப் பெற்றதுடன் ஒய்வூதியங்களை உயர்த்திபெற்றல் போன்ற அரசு ஊழியர் ஆசிரியர் மற்றும் உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் மனம்குளிர பல்வேறு கோரிக்கையை பெற்றளித்தத் தன் னிகரில்லாத் தலைவர் திரு சிவ. இளங்கோ அவர்களது தலைமையில் கூடியுள்ளோம்.

இம்மாநாட்டின் நோக்கம் நிறைவேற, நம்முடைய பொதுக் கோரிக்கைகளில் நாம் வெற்றிக் கனியை ஈட்டிட தோழமை மற்றும் இணைப்புச் சங்க நிர்வாகிகளும், தானைத் தலைவரும் பொதுமக்கள் பிரதிநிதிகளும். வழங்கும் அறிவுரைகளை நாளை மாநாடு முடியும்வரை அமைதியுடன் இருந்து கேட்டு நமது தலைவர் இடும் ஆணைகளை சிரமேற்கொண்டு செயற்படுத்த தயாராகுங்கள் என்று வேண்டி மீண்டும் உங்கள் அனைவரையும் மனமார வரவேற்று, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்,

நன்றி,

**க. கலியபெருமாள்**
தலைமைநிலையச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம். சென்னை-5

—oOo—

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்



**48-வது மாநில மாநாடு, சென்னை**

நாள் 1981-பிப்ரவரி 7—8—9

※

7-2-'81காலை நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்ற
மாநிலத் துணைத்தலைவர்

**திரு. த. கருப்பசாமி**

அவர்களின் தலைமை உரை.

சிறப்பு மிக்க இந்த மாநாட்டிற்கு வருகை தந்துள்ள பெரியோர்களே! நண்பர்களே! சகோதரிகளே!

தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் 48-வது மாநில மாநாடு இன்று சீரோடும், சிறப்போடும் தொடங்கி உள்ளது. இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பதிலே நான் பெருமைகொள்கிறேன். இந்த இயக்கத்தோடு முப்பதாண்டு காலமாகத் தொடர்பு கொண்டவன் என்ற முறையில் தென்காசி, தூத்துக்குடி, ராணிப் பேட்டை போன்ற கிளைகளில் தலைவனாக இருந்து பணியாற்றியவன் என்ற முறையில் ஏழாண்டுகள் மத்திய செயற் குழு உறுப்பினராகவும், ஐந்தாண்டுகள் அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் இருந்தவன் என்ற முறையில் எனக்கு மாநிலத் துணைத்தலைவனாகும் வாய்ப்பு கிடைத்தது. அந்த முறையில் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்கும் நான் சில கருத்துக்களை உங்கள் முன் சொல்ல விரும்புகிறேன்:

நம்முடைய 48வது மாநில மாநாட்டில் பல்வேறு கோரிக்கைகளை நாம் வைக்க இருக்கிறோம்.

(1) அகவிலைப்படி வழங்கவேண்டும் (2) ஊதிய விகிதங்களை உயர்த்தவேண்டும் (3) போனஸ் வழங்கவேண்டும். (4) தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பெற வேண்டும். (5) பழிவாங்கும் நடவடிக்கைகள் கைவிடப்படவேண்டும். (6) தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்யவேண்டும்: (7) விடுப்பு காலப் பயண சலுகையை வழங்கவேண்டும். (8) சரண் விடுப்பிற்கு முன்பு வழங்கிய படிகளை திரும்ப வழங்கவேண்டும் (9) தேர்வு நிலைக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப் பெறல்வேண்டும். (10) ஓய்வு பெறுவோர்க்குப் பத்தாயிரம் வழங்கவேண்டும் முதலிய பல்வேறு பொதுக் கோரிக்கையெல்லாம் இந்த மாநாட்டில் வற்புறுத்த இருக்கிறோம். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நமது தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய உறுப்பினர்கட்கு மட்டுமே உரிய கோரிக்கைகள் அல்ல. தமிழ்நாட்டிலே உள்ள நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்—ஆசிரியர் அமைப்புகளுக்குப் பொதுவான கோரிக்கைகள். எனவே இந்தப் பொதுக்கோரிக்கைகளைப் பெறுவதற்கு எல்லா சங்கங்களும் சேர்ந்து ஒன்றுபட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஆனால் அவ்வாறு மராட்டியம் போல் — ஆந்திராப்போல் எல்லோரும் ஒன்றுபட்டு வருகிறார்களா என்றால் ஆறாண்டுகளாக நமது ஒன்றியம் அதற்கான வழிவகை கண்டாலும். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நமது மாநாட்டில் கலந்துகொள்ளும் தோழமைச் சங்கத் தலைவர்கள் அனைவரும் இதனை எண்ணிப்பார்த்து மேலும் மேலும் தீவிரமாக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தில் இணைந்துள்ள பல்வேறு சங்கங்களின் நியாயமான கோரிக்கையைத் தீர்ப்பதில் அரசு காலதாமதம் செய்து வருவதைத் தவிர்க்க வேண்டும் என்பதை நான் எடுத்துச் சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளிலும் ஏறக்குறைய ஆறாயிரம் பதிவுறு எழுத்தர்கள் இருக்கிறார்கள்; 1967-க்கு முன்னால் 40 வயது நிறைந்த பதிவறை எழுத்தர்கள் அனைவருக்கும் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு அளிக்க ஆணை இருந்தது. அதனை ரத்து செய்தது மிகக் கொடுமையானது. பதிவுரு எழுத்தர்கள் ஊதிய விகிதமும் மிகப் பரிதாபகரமானது. சமீபத்தில் பதிவுரு எழுத்தர்கள் உண்ணாவிரதம் இருக்க முன் வந்தபோதுதான் பதவி உயர்வுக்கு இருந்த தடையை ஓரளவு நீக்கி 10 சதவித பதிவுரு எழுத்தர்களுக்குப் பதவி உயர்வு தர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் யானைப் பசிக்கு சோளப்பொரி என்பது போலத்தான் இது; பதிவறை எழுத்தர் கோரிக்கைகளில் நமது அரசு மனிதாபிமான உணர்வுடன் செயல்பட வேண்டும்.

அதேபோல் மருத்துவத்துறையில் செவிலிய உதவியாளர்களும் — வேளாண் துறையில் செயல்விளக்க உதவியாளர்களும் "சுப்பீரியர் சர்விஸ் என ஆக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் அவர்களுக்குரிய நியாயமான ஊதியங்கள் தரப்படவில்லை. இது வரையிலும் ஊதியக்குழு முரண்பாடுகளைப் போக்கும் அறிக்கையை அமுலாக்கும் போது இவர்களுடைய குறைகள் நீக்கப்படவில்லையென்றால் நிச்சயம் தலைவரின் அனுமதியோடும்-மத்திய செயற்குழுவின் ஒப்புதலோடும் நான் போராட்டத்தில் கலந்து கொள்வேன். என்னைப் பின்பற்றி ஏராளமான அரசு ஊழியர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுதும் பணியாற்றும் பாலசேவிகாக்களின் நிலை குறித்து பலமுறை அமைச்சர்கள் அனுதாபத்துடன் பேசியிருந்தாலும்—அவர்தம் நிலையை மேம்படுத்துவதற்கான தெளிவான அரசு ஆணைகளை இந்த அரசு பிறப்பிக்கவில்லை என்பதையும் வருத்தத்தோடு இந்த மாநாட்டில் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

துணைச் செவிலியர் மகப்பேறு உதவியாளர்களில் ஒன்றியப் பணியாளர் அரசுப் பணியாளர் என்ற பாகுபாட்டு நிலையினை மாற்றி அனைவரையும்-அரசுப் பணியாளர்களாக மாற்றி ஆணை வழங்கவும் இந்த மாநாட்டின் மூலம் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நிலைப பயணப்படியில்கூட அரசுத் தரப்புக்கு ரூ. 25 எனவும், ஒன்றியத் தரப்பு என்றால் ரூ. 20 எனவும் வழங்கப்படுவது என்ன நீதி?

துணைச் செவிலியர் மகப்பேறு உதவியாளர்கட்கு பதவி உயர்வு இல்லை. பணிமூப்பின் அடிப்படையில் பத்துபேருக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர் பதவி உருவாக்கிவிடுவதும் அவசியமான ஒன்று என்பதை இந்த மாநாட்டின் மூலம் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.


பொதுவாக இத்தகைய கோரிக்கைகளையும் வேண்டுகோள்களையும் இத்தகைய மாநாடுகளில் தெரிவிப்பது வழக்கம், வாடிக்கை. ஆள்வோர் இதனை ஆதரவோடு பரிசீலித்து அனுதாபத்தோடு முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

அரசு அலுவலர்களை சமுதாயத்தின் முக்கிய பிரிவாக எண்ணிப்பார்த்து அவர்கள் நிலை உயர எந்த ஒரு நல்ல அரசும் ஆவன செய்ய வேண்டும். இந்த அரசும் இதனை ஏற்று எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

வாதாடிப் பெறுவதில் நம்பிக்கை உள்ளவர்கள்தான் நாங்கள். ஆனால் காலம் கடத்தப்படுமானால் போராடும் உறுதியும் எங்களுக்கு உண்டு என்று கூறி என் உரையை முடிக்கிறேன்,

**வெல்க நம் ஒற்றுமை!**

# தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியம்



## 48-வது மாநில மாநாடு.

தேதி 8—2—81

இடம் : பெரியார் திடல், சென்னை.

மாநில ஒன்றியப் பொருளாளர்

**எம். புண்ணியகோடி** நிகழ்த்திய

வரவேற்புரை

தமிழ்நாடு அரசு அலுவலர்களின் மாநிலத் தலைவர்-மாநாட்டுத் தலைவர்-திரு சிவ இளங்கோ அவர்களே! சேலத்திலே நடைபெற்ற நமது 45-வது மாநில மாநாட்டிலே தமிழ்நாடு அரசு ஊழியர்களின் அடிமை விலங்கை அகற்றிய வரும், அரசு ஊழியர்கள் இறந்தால் ரூ 10, 000 - குடும்ப நல நிதியாக வழங்கி இந்திய துணைக்கண்டத்திலேயே முன்னோடி முதல்வரென புகழப்படுபவரும்- தமிழினக் காவலராக உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலென, நம்பிக்கை நாயகரென ஞாலம் போற்றும்- டாக்டர் கலைஞர் அவர்களே! இந்திய பாராளுமன்றத்தின் துணைத் தலைவர் மாண்புமிகு ஜீ. லட்சுமணன் அவர்களே! இந்திய தேசிய காங்கிரசின்- தமிழக மேலவை உறுப்பினர் உயர்திரு ராம மூர்த்தி அவர்களே! இந்திய முஸ்லீம் லீகின் ஒப்பில்லா தலைவர்- பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு ஏ. கே. அபதுல் சமது அவர்களே! இந்திய தேசிய காங்கிரஸ் அ) தமிழ்நாடு தலைவர் வழக்கறிஞர்- திருமதி டி, என் . அனந்தநாயகி. அவர்களே! காந்தி காமராஜ் காங்கிரசின் தமிழ்நாடு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு குமரி அனந்தன அவர்களே! இந்திய மார்க்கிஸ்டு கட்சியின் தொழிற்சங்க தலைவர் உயர்திரு. வி. பி. சித்தன் அவர்களே! பாரதீய ஜன்தா கட்சியின் முன்னணி வீரர் கவியரசன் அவர்களே! தொழிற்சங்கத் தலைவர்களே! தோழமைச் சங்க பொறுப்பாளர்களே! ஒன்றியத்தின் மாநில நிருவாகிகளே! அனைத்து வட்டங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கில் வந்துள்ள நிருவாகிகளே! முன்னோடிகளே! செயல்வீரர்களே! இணைப்பு சங்கங்களின் பொறுப்பாளர்களே பாசமிகு பார்வையாளர்களே பெரியோர்களே! சகோதரிகளே! சிறப்பழைப்பாளர்களே! பத்திரிகை நிருபர்களே! பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் திடலில் நடைபெறும் நமது ஒன்றியத்தின் 48—வது மாநில மாநாட்டிற்கு வருக! வருக! என உங்கள் எல்லோரையும் அன்புடன் வரவேற்கின்றேன். ஆண்டவரும் இங்கே அதிசயிக்க பல்லாயிரக்கணக்கில் பரிவோடும் பாசத்தோடும் கூடியுள்ள உங்களைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். பெருமைப்படுகிறோம். பாராட்டுகிறோம்.

1968-ம் ஆண்டு நமது ஒன்றியத்தின் 44-வது மாநில மாநாடு சென்னையில் இதே பெரியார் திடலில் — அறிஞர் அண்ணா முதல்வராகயிருநதபோது சீரும் சிறப்புமாக நடைபெற்றதை நீங்கள் நன்கறிவீர்கள். அறிஞர் அண்ணா அந்த மாநாட்டிற்கு வர இயலாமல் போனபோது அப்போது சிறு சேமிபபு திட்டத்தின் துணைத் தலைவராகயிருந்த இன்றைய மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் அன்று அம் மாநாட்டிற்கு வருகை தந்து - அண்ணா சாரபில் பேசி பெருமைபடுத்தினார். அதே ஒன்றியம், இன்று சென்னையில், அதே பெரியார் திடலில் நடத்தும் நமது 48-வது மாநில மாநாட்டிற்கு மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். வர வேண்டுமென்பதற்காகவும், அவரது வசதிக்காக மூன்று மாதங்களாகத் தள்ளி வைக்கப்பட்டிருந்த மாநில மாநாடு – சென்னையில் சட்ட மன்ற கூட்டம் நடைபெறும்போது நடத்துவது சாலச் சிறந்தது என பிப்ரவரி 7, 8, தேதிகளில் நடைபெறுகின்றன.

காமவீரர் காமராசர் - - முதல்வராக இருந்தபோது 1954, 62, 63, ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நமது ஒன்றிய மாநில மாநாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கின்றார். பெரியவர் எம். பக்தவச்சலனார் முதல்வராக இருந்தபோது 1964—65ம் ஆண்டுகளில் நடைபெற்ற நமது மாநாடுகளில் கலந்து கொண்டு பெருமைபடுத்தியுள்ளார். இன்று நம்மிடையே வந்துள்ள முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், 1972 74 ஆகிய ஆண்டுகளில் நடந்த நமது ஒன்றிய மாநில மாநாடுகளில் கலந்து கொண்டு—வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்புகள் செய்ததை நம் இனத்தார் வாழ்நாள் முழுவதும் வாழ்த்தி வருகின்றனர்.

அது போலவே, இன்னாள் முதல்வரும் முன்னாள் முதல்வர்கள் போன்று, நமது மாநில மாநாட்டிற்கு வருவார் என்று நாமெல்லாம் நம்பியிருக்கிறோம், எதிர்பார்த்து இருக்கிறோம்.

நாட்டிலுள்ள உழைக்கும் மக்களில் அரசு ஊழியர்கள் கண்போன்றவர்கள். நாட்டில் நடைபெறும் ஆட்சிக்கு அரசு ஊழியர்கள் ஆணி வேர் போன்றவர்கள். கண் பாதிக்கப் பட்டால் நிலைமை என்ன ஆகும்? ஆணி வேர் பாதிக்கப்பட்டால் மரமே ஆட்டம் கொடுக்காதா? ஆகவே, நாட்டில் அனைத்துப் பிரிவினரும் நலமுடன் வாழ நல்லாட்சி நிலைபெற்று நடந்திட, அரசு ஊழியர்கள் நலிவில்லாமல், தன்னிறைவோடு அலுவலகங்களில் பணியாற்ற வேண்டியது மிக்க அவசியமானது.

தனியார் கடைகளில் வேலை செய்யும் தொழிலாளிக்கு, விவசாயத் தொழிலாளிக்கு, "இவ்வளவு கூலி" கொடுக்க வேண்டும் என ஆணையிடும் முதல்வர் புரட்சித் தலைவர் ஓராண்டு பதவியிலிருந்த சட்ட மன்ற / மேலவை உறுப்பினர்களுக்கு "ஓய்வூதியம்" கொடுத்துள்ள முதல்வர் பொன்மனச் செம்மல்-ஒழுங்காக உற்சாகமாக வேலை செய்ய மலிவு விலையில் உணவுப் பொருள்களை காவலர்களுக்கு மட்டும் வழங்கியுள்ள முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் – நமது மாநாட்டுக்கு வருகை தந்து நமது குறைகளையும் கோரிக்கைகளையும் பரிவுடன் கேட்டால் முக்கியமாக —

இன்றைய விலைவாசி ஏற்றத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப போக்க-அரசினர் குடியிருபபுகளுக்கு அநியாய வீட்டு வாடகையை குறைக்க— ஒய்வு பெறும்போது ரூபாய் 10.000 கொடுத்துதவ—ஊழியர்கள் விரோத போக்கிறகும், பழி வாங்கும் நடவடிக்கைகளுக்கும் பரிகாரம் காண—வழிவகை ஏற்படும் என்று எதிர்பார்த்து வந்திருக்கின்றீர்கள்.

மேலும் தமிழ்நாட்டில் பஸ் கட்டணத்தை உயர்த்த, பால்விலையை உயர்த்த மின்சார கட்டணத்தை உயர்த்த அண்டை மாநிலங்களை உதாரணம் காட்டும் நமது முதல்வருக்கு அதே மாநில அரசு ஊழியர்கள் அனுபவித்து வரும்—விடுப்பு கால பயணச் சலுகை, உயர்ந்த ஊதியம், ஓணம், துர்க்கா பூசைகளுக்கு கொடுப்பது போன்றஅலவன்ஸ் தொழிற் சங்க உரிமைகள். முதலியவைகளை உதாரணம் காட்டி அவைகளை நம் முதல்வரிடமிருந்து பெறலாம் என்ற நம்பிக்கையோடு வந்து இருக்கின்றீர்கள். நம்மிடையே இருக்கின்ற சுயநலக்காரர்களால்! துரோகிகளால்! நாலந்தர அரசியல் வாதிகளால்! நமது நியாயமான கோரிக்கைகளைப் பெற்றிட காலதாமதமாவதை பலர் உணருகின்றனர் நமது ஒன்றியத்தின் மாநிலத்தலைவர்— திரு சிவ. இளங்கோ நமது மாண்புமிகு முதல்வரையும், அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும், பலமுறை சந்தித்து, நமது குறைகளைப் போக்கிட கோரிக்கைகளை நிறைவேற்றிட வற்புறுத்தி வருகின்றார். ஆனால் அனைத்து அரசு அலுவலர்களிடத்திலே ஏற்படுகின்ற எழுச்சி;வர்க்க வுணர்வு; ஒன்றுமை, கட்டுப்பாடுதான் ஆட்சியாளருக்கு நியாயத்தை விரைவில் உணர்த்தும்— அலட்சியக்காரர்களின் ஆணவத்தை அடக்கும்—பழி வாங்குவோருக்கு பாடம் புகட்டும் நம் உரிமைக் குரலுக்கும் வலுவூட்டும்—நீதி கிடைக்கும். கோரிக்கைகளும் விரைவில் நிறைவேறும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் – எண்ணியர்
திண்ணியராகப் பெறின்"—எனக் கூறி

**மீண்டும் உங்கள் அனைவரையும் வருக! வருக! என அன்போடு வரவேற்கிறேன்.**

# தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை



48-வது மாநில மாநாடு சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற போது

**மாநிலத் தலைவர் சிவ. இளங்கோ**

8–2–81 அன்று ஆற்றிய

## தலைமையுரை

தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சிறப்புமிக்க இந்த மாநில மாநாட்டைத் தொடக்கி வைக்க வந்திருக்கும் கர்னாடக மாநில அரசு அலுவலர் ஒன்றியத்தின் தலைவரும், அனைத்திந்திய மாநில அரசு ஊழியர் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான திரு கேசவமூர்த்தி அவர்களே! ஆந்திர மாநிலத்தில் அறப்போராட் டங்கள் பல நடத்தி வெற்றி கண்ட அம்மாநில ஒன்றிய சங்கத்தலைவர் அவர்களே! தமிழ் நாடு முழுதும் இருந்து திரண்டு வந்துள்ள அன்புசால் அரசு ஊழியர்களே! பெரியோர்களே! நண்பர்களே! சகோதரிகளே!

மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட அரசு அலுவலர்களின் முன்னேற்றத்துக்கும், ஏழரை லட்சம் ஊழியர்களின் பொதுக்கோரிக்கைகளுக்காகவும் பாடுபடும் இயக்கத்தின் தலைவனாகக் கடந்த பத்தாண்டுகளாகத் தொடர்ந்து பொறுப்பினை ஏற்று வரும் நான் தலைமை தாங்கும் நான்காவது மாநில மாநாடு இது. சேலம் மாநாட்டில் சாரட்டு வண்டியில் என்னை அமரவைத்து ஊர்வலம் நடத்திய அருமைத் தலைவர் குப்புசாமி இன்று நம்மிடையே இல்லை; தஞ்சை மாநாட்டின் போது பாசத்தோடு, பரிவோடு எல்லா நிகழ்ச்சிகளிலும் நம்முடன் இருந்த வி. ஆர். ஜி. இன்று இங்கு இல்லை. கோவை மாநாட்டில் கொள்கை முடிவுகள் எடுக்க அருந்துணையாய் இருந்த புதுக்கோட்டை சேதுராமனும் சென்ற மாதம் இயற்கை எய்தினர். இவ்வாறு எத்தனையோ தலைவர்கள் மறைந்த கீரப்பாளையம் பூவராகவன் போன்ற முன்னணி வீரர்கள் கண்ணீர் சிந்தி வளர்த்த இயக்கம், துறை தோறும், துறை தோறும் துரோகிகள் தோன்றினாலும், கருகாமல், மேலும் மேலும் வளர்ந்து வருகிறது என்பதைத்தான் காலம் நமக்குக் கூறுகிறது.

அதுவும் கோவையிலே கூடிய 1976 செப்டம்பருக்கு பின்னால் இந்த நான் காண்டுகளில் எத்தனையோ இன்னலுக்கும், தொல்லைக்கும் ஆளானாலும், அதை யெல்லாம் தாங்கிக்கொண்டு நம்மோடு நடைபோடும் வீரமறவர்களைப் பார்த்து மெய் சிலிர்த்துப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த நான்காண்டுகளிலே தான் உண்மையான தொழிற்சங்க ஏட்டின் பால பாடங்களை சிறப்பாக நாம் படித்திருக்கிறோம் என்றால் மிகையல்ல. 31 ஆண்டு காலத்துக்குப்பின்னால் 14 நாட்கள் மகத்தான வேலை நிறுத்தத்தை நடத்திக்காட்டி நிலைத்த புகழை இந்த இயக்கத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிறோம். வேலூர், பாளையங்கோட்டை, திருச்சி சிறைச்சாலைகளில் எல்லாம் 5 முதல் 12 நாட்கள் வரை பத்தாயிரத்திற்கு மேற்பட்ட நம்முடைய தோழர்கள் சமுதாய நலனுக்காக தியாக வேள்வி கண்டார்கள்.

பாதயாத்திரையா, காலவரம்பற்ற உண்ணாவிரதமா, எதற்கும் தயார் என்று கூறக்கூடிய படை வீரர் பட்டாளத்தை திருத்தணியிலிருந்து தென்குமரி வரை நம்மில் உருவாக்க முடிந்திருக்கிறது. ஆக அரிமா நோக்கில் கோவையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் இருந்து இப்போது சென்னையில் கூடியுள்ள இந்த நாள் வரை திரும்பிப் பார்த்தால் தெளிவு தெரிகிறது; தியாகம் புலப்படுகிறது; திசையெலாம் இயக்க உணர்வு அரும்பி இருப்பதை ஆழமாக உணர முடிகிறது. அந்த மகிழ்ச்சியோடு இந்த மாநாட்டின் தலைமை உரையை நிகழ்த்துவதிலே நான் பெருமை கொள்கிறேன்.

என். ஜி. ஓ. க்களின் பொது கோரிக்கைகட்காக மட்டுமல்ல, பல்வேறு இலாக்கா சங்கங்களின் பிரிவுவாரியான கிளர்ச்சிகளும் வெற்றி பெற்ற வரலாற்றை இந்தக் கால கட்டத்தில் நாம் காண முடிந்தது. ஆனால் கடைசியாக இரண்டு மாதங்களுககு முன்னால் நடந்த கருவூலத்துறை போராட்டத்தில் நமது சகோதரர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், பழிவாங்கப்பட்டுள்ளார்கள் என்பதுவும் நமக்கு புரிகிறது. ஆனால் அவர்களின் உணர்வுகளை அழித்து ஒழித்து விட்டதாக யாராவது கருதுவார்களானால் அந்த

நினைப்புக்கு விரைவில் சாவு மணி அடிக்க ஒரு பட்டாளம் புறப்படும் என்பதையும் எனது உரையில் சூசகமாக ஆள்வோருக்கும், அதிகார வர்க்கத்துக்கும் தெரிவிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

நமக்குத் தரப் பெற வேண்டிய இரு அகவிலைப்படி உயர்வுகளைப்பற்றிக் குரல் கொடுக்க, கோரிக்கை விடுக்க, அதை விரைவில் பெறுவதற்கான வழி வகைகாண இந்த மாநாட்டில் தெளிவான திட்டங்கள் தீட்டப்பெற உள்ளன. 1979ம் ஆண்டில் ஏப்ரலிலும், அக்டோபரிலும், நாம் பெற்ற அகவிலைப்படி உயர்வு போராடிப்பெற்றதென்பதை யாரும் மறந்து விட முடியாது. அதுபோல் 1980ல் மாறிய சூழ்நிலையில் நிர்ப்பந்தங்களின் விளைவாக பெரிய போராட்டமின்றி நான்கு அகவிலைப்படி உயர்வுகளைப் பெற்றோம். கடைசியாக 1.7-80 முதல் நாம் பெற்ற அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு ஊழியர்க்கு எந்தத் தேதியில் கிடைத்ததோ அதே தேதியில் இருந்து கிடைத்தது 33 ஆண்டுகளாக இல்லாத நிலை அது. அந்த இனிய நிலை செப்டம்பரிலும், டிசம்பரிலும் தொடர்வதற்கு ஏன் ஆள்வோர் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது புரியவில்லை. வர இருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்தில் அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டாலும் நடுவரை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நாளில் இருந்து நாமும் பெறுவதற்கு தேவைப்பட்டால் களம் காண தயாராயிருக்கிறோம் என்பதை இந்த மாநாட்டில் உறுதியெடுத்துக் கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். விலைவாசியைக் கட்டுப்படுத்திட அரசால் இயலுமானால் நாம் அகவிலைப்படி உயர்வு தேடப்போவதில்லை. ஆனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாத போது—அதனால் ஏற்படும் பாதகங்களில் இருந்து நம்மை நாம் ஓரளவு பாதுகாத்துக் கொள்ள அகவிலைப்படி உயர்வு இன்றியமையாதது. எனினும் அண்மைய சட்டப் பேரவைகளின் கூட்டுக் கூட்டத்தில் இத்தகைய அகவிலைப்படி உயர்வுகளினால் தான் விலைவாசி கூடுகிறது. என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கும் தொனியைப் பார்க்கும்போது நாம் கவலையும் அச்சமும் கொள்ள வேண்டியவர்களாகிறோம் அந்தக் கவலையும் அச்சத்தையும் போக்கி அகவிலைப்படி உயர்வுகளை மிக விரைவில் முன் தேதியிட்டு வழங்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

## ஊதியக் குழு குறைபாடுகள்

மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை 1-4-78 முதல் அமுல்படுத்தப்பட்டது. அதில் எத்தனையோ குறைபாடுகள்! அவற்றையெல்லாம் சுட்டிக் காட்டியபோது-எடுத்து விளக்கிய போது உடனடி நடவடிக்கைகள் எதுவும் அரசு தரப்பில் மேற் கொள்ளாததனால் தான் 1979 - அக்டோபரில் பெரும்பான்மை சங்கங்கள் ஒன்று சேர்ந்து குறைபாடுகள் நிவர்த்திப்புக்குழு அமைக்க வேண்டுமென்றும் அரசை வலியுறுத்தினோம். அதன் விளைவாக அந்த மாதம் குழு அமைக்கப்பட்டது. ஆனால் 16 மாதங்களுக்கு மேல் கடந்துவிட்டபின்னரும் குழுவின் அறிக்கையை வெளியிட்டு, ஊழியர் சங்க பிரதிநிதிகளிடம் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்தாமல் இருப்பது வேதனை தருகிறது 1972-ல் இத்தகைய ஒருகுழு (சபாநாயகம் குழு) அமைக்கப்பட்டபோது குழுவின் தலைவரும் தனது அறிக்கையை இறுதியாக்குவதற்கு முன்னால் நமது ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தனது உத்தேச அறிக்கையை வாசித்துக் காட்டி நாம் கூறிய திருத்தங்களில் இரண்டை ஏற்றுக்கொண்டார். பின்னர் அறிக்கை அன்றைய அமைச்சரவையின் பரிசீலனைக்குவந்த போது அன்றிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களும் நாம் விடுத்த கோரிக்கைளில் 20-க்கு மேற்பட்டவற்றை ஏற்றுக் கொண்டார். ஏறக்குறைய ஆறு மாதங்களில் 1972-ஆம் ஆண்டில் அந்தப் பணிமுடிக்கப்பட்டது. இன்றைய வேதனையான நிலை என்ன?

சரண் விடுப்பின் போது கடந்த 10 ஆண்டு காலத்துக்கு மேல் நாம் பெற்று வந்தபடிகளை மூன்றாவது ஊதியக்குழு முடிவுகளுக்குப்பிறகு பெறமுடியவில்லை. தேர்வுநிலை உருவாக்கப்பட்டதே தவிர தேறுதல் தரும் வகையில் அது அமைந்துள்ளதா? என்றால் இல்லை. உதவியாளர் தேர்வு நிலை பெறும் போது கண்காணிப்பாளர் ஊதிய விகிதம் வழங்குவதுதான் முறையானது. அதை மறுப்பதில் நியாயம் இருக்க முடியாது. தேர்வு நிலை பெறுகிறவர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தர வேண்டுமென்பதும் நம்முடைய கோரிக்கை.

அமைச்சுப் பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருந்தாளுநர், செவிலிய உதவியாளர், துணைச் செவிலியர், வேளாண்துறை செயல் விளக்க உதவியாளர், நில அளவுத் துறையில் உள்ள முதல் நிலை வரைவாளர் முதலிய பல்வேறு பகுதி அரசு அலுவலர்களும் மூன்றாவது ஊதியக்குழு முடிவுகளில் அதிருப்தி அடைந்துள்ளனர். சம வேலைக்கு சம ஊதியம்என்பதுதுணைவேளாண்மைஅலுவலர்முதலிய பிரிவினர்பிரச்சனையில் பின் பற்றப்படவில்லை. சென்னைக்கீடாக செங்கை மாவட்ட முழுமைக்கும் நகர ஈட்டுப்படி வழங்கவேண்டும். என்ற நீண்டநாள் கோரிக்கை நிறைவு செய்யப்படவில்லை. மாவட்டத் தலைநகரங்களில் பணியாற்றுவோருக்கு நகர ஈட்டுப்படி கோரிக்கை மறுக்கப்படுகிறது. மேலே சொன்ன கோரிக்கைகளையெல்லாம் தீர்மானமாக நிறைவேற்றிவேண்டுகோளாக விடுத்து விண்ணப்பமாகத்தந்து—ஊர்வலங்களிலே முழக்கமிட்டபின்னரும் உதாசீனம் செய்து வருகின்ற நிலையை எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொள்ள முடியும் கேள்வி கேட்டு சலிப்பு பெற்றவர்கள் மேல் நடவடிக்கை தொடர்வதற்காகக் கூடியுள்ள மாநாடு தான் இந்த மாநில மாநாடு.

அண்மையில் உத்திரபிரதேச மாநிலத்திலும் ஊதியக்குழு முடிவுகள் வெளிவந்துள்ளன. அதிருப்தியின் வீச்சுகள் அந்த மாநிலத்தில் அங்கிங்கெனாதபடி வெடித்துச் சிதறிய வண்ணம் உள்ளது. வேகப்படவில்லை ஆட்சியாளர், கோபப்படவில்லை அமைச்சர் பெருமக்கள். அந்த ஊழியர்கள் நடத்தும் கண்டனப் பேரணிகளிலேயே முதல்வரும், மற்ற அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு அமைதிப்படுத்தி ஆவனசெய்வதாக உறுதி அளிக்கிறார்கள். கண்டனப் பேரணிகளிலேயே கலந்து கொள்கிற காட்சி அங்கே! மாலையிட்டு மரியாதை செய்து கோரிக்கைகளைத் தரமுன்வரும் போது அத்தகைய மாநில மாநாடுகளுக்கு மூன்றாண்டுக்கு ஒருமுறை கூட வரத்தயக்கம் காட்டுகிறபோக்கு இங்கே இதைப் பார்க்கிறபோது வாதாடியதுபோதும்; போராடத் தொடங்குவோம் என்று பூபாளம் இசைக்கின்ற முன்னணி வீரர்களைத் தடுத்து நிறுத்துகிற தைரியம் எந்தத் தடைச் சட்டத்திற்கும் இருக்க முடியாது என்று சூளுரைக்கின்ற மாவீரர் பட்டாளம் தான் இங்கே கூடியுள்ளது. எனவே நமதுமாநில அரசு உடனடியாக ஊதியக்குழுகுறைபாடுகளை பற்றி அலுவலர் சங்கங்களுடன் கலந்து பேசிவிரைவான முடிவை எடுக்க வேண்டுகிறேன்.

## ஒய்வுபெற்றால் பத்தாயிரம்

1974ம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கையை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மாதம்தோறும் ஒரு சிறு தொகையை ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்து கொண்டு ஓய்வுபெறும் போது ரூ 10 ஆயிரம் அளிக்கவேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை ஏதோ புதியகோரிக்கை போல குழு அமைத்து பரிசீலிப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்தமாதம் கூறியதை நமது அமைப்புகள் ஏற்றுக்கொள்ளவில்லை அமைத்த குழுக்கள் இவைதந்த அறிக்கைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறபோது புதிய குழு பொருளையும், நோக்கத்தையும் விரயமாக்குமே தவிர எதிர் பார்க்கும் பலனைத்தராது.

''பற்றுக்குறை நிதி நிர்வாக முறைகளினால் மத்தியதர வகுப்பினர் அழிகிறார்கள். மாதாந்திர வருமான முள்ளவர்களின் சேமிப்புகள் மறைந்து விடுகின்றன- ருபாயின் மதிப்பு அதிகமாக இருக்கும்போது எல். ஐ. சிக்கு ப்ராவிடண்பண்டுக்கு பணம் கட்டுகிறார்கள், அவர்கள் பணம் திரும்ப இவர்களுக்குக் கிடைக்கும்போது பணத்தின் மதிப்பு மிகவும் குறைந்து போன நிலையில் அது கிட்டுவதால் இவர்கள் நஷ்டமடைகிறார்கள். இதில் மிகவும் ஏமாற்றப் படுபவர்கள் பென்ஷன் வாங்குபவர்கள்தான்'' என்று மிகப்பெரிய பொருளாதார நிபுணர் திரு எம். ஆர். பய் கூறியிருப்பதைப் பார்க்கும்போது ஓய்வுபெறும் போது பத்தாயிரம் என்ற நம்முடைய கோரிக்கைக்கு இன்னும் வலு ஏற்படுகிறது. ஆளும் கட்சியின் தேர்தல் வாக்குறுதியிலே கூட இந்தக் கோரிக்கையை கொள்கை அளவு ஒத்திருந்தும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதனை விரைவில் அரசு ஏற்றுக் கொண்டால் தானாகவே ஓய்வு பெறுவோர் உட்பட அனைவருக்கும் விரிவுபடுத்தினால் பல்லாயிரக் கணக்கானமக்கள் ஓய்வு பெறுவார்கள். அதை விடுத்து இந்த அரசின் சாதனை என்று அப்பத்திய போதுத் தேர்தலின்போது கூட விளம்பரப் படுத்தப்பட்ட ஓய்வுபெறும் வயது உயர்வைக் குறைக்க வேண்டுமென்கிற எண்ணம் தேவையற்றது. அதன் மூலமாக எந்த அளவு வேலையில்லா திண்டாட்டத்தைக் குறைக்க முடியும் என்றுகாத கருதுகிறதோ அதனை ஓய்வுபெறும் அனைவர்க்கும் பத்தாயிரம் அளிப்பதன் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதை அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

போனஸ் என்பது லாபத்திலே பங்கு என்று கருதப்பட்டகாலம் ஒன்றிருந்தது. ஆனால் நியாய ஊதியத்தையோ, வாழ்க்கை ஊதியத்தையோ: ஏன் தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்தையோ தரத் தயாராக இல்லாதசூழ்நிலையில் 'Deffered wage' தான் போனஸ் என்ற தத்துவத்தை எல்லாக் கட்சி உறுப்பினர்களும் நாடாளுமன்றங்களிலும் சட்டமன்றங்களிலும் பேசிய பின்னர் போனஸ் என்பது மாநில அரசு ஊழியர்களுக்கு அவசியான ஒன்று என்பதை உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மாநில அரசு ஊழியர்களுக்குப் போனஸ்கொடுக்க சட்டத்தில் இடம் இல்லை என்ற காரணத்தினால்தான் Exgratia Payment என்ற பெயரில் மேற்கு வங்க-கேரள-ஆந்திர திரிபுரா மாநில அரசுகள் ரூ. 150/-ம் ரூ. 100/-ம் தர முன் வந்துள்ளன. 1946ல் உயர்திரு. பிரகாசம் அவர்கள் நமது மாநில முதலமைச்சராக இருந்தபோது ஒருமாத ஊதியத்தை இவ்வாறு வழங்கியிருக்கிறார் இதை ஏன் மறுபடியும் ஆண்டுதோறும் அமுல் படுத்தக் கூடாது என்பதை அன்போடும், உரிமையோடும் நமது மாநில முதல்வரிடம் கேட்கக் கடமைப் பட்டுள்ளோம். இந்தியாவிலேயே முதன் முதலாக அரசு ஊழியர் இறந்தால் அவர் குடும்பத்திற்கு ரூ: 10 ஆயிரம் வழங்க ஆணையிட்டது 1974ல் இந்த மாநில முதல்வராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் தான். எனவே போனஸ் பிரச்சனையிலும் எல்லா மாநில அரசு ஊழியர்கட்கும் வழி காட்டுவதுபோல் ஒரு மாத ஊதியத்தை வழங்க மாண்புமிகு நமது தமிழக முதல்வர் உயர்திரு எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

## உரிமைக் குரல் :

மாநில அரசு ஊழியர்களுக்குத் தொழிற்சங்க உரிமை வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை மேற்குவங்க அரசின் சில முன் உதாரணங்களால் தீவிரம் பெற்றுள்ளது என்பதை இம்மாநாட்டில் பிரகடனப்படுத்த வேண்டியுள்ளது. காவலர்களுக்கு சங்கம் அமைக்க வழிவகை கண்டபிறகு மாநில அரசு அலுவலர்கட்குத் தொழிற்சங்க உரிமை அளிப்பதில் தயக்கம் காட்டுவது தேவையற்றது.

அரசு ஊழியர் நடத்தை விதிகளும் காலத்திற்கொவ்வாத பழைய பாணியிலேயே பத்தாம் பசலித்தன்மையுடன்தான் இருக்கின்றன. இவைகளை மாற்றி அமைக்க—வெளிப் படுத்த அரசு முன் வராவிட்டால் அது ஏட்டு சுரைக்காயாகவே மாறிவிடும்.

இங்கே உள்ள நடத்தை விதிகள் மட்டுமல்ல. அகில இந்திய அளவில் அரசியல் சட்ட விதிமுறைகளிலேயே நம்மைக் கொடுமைப்படுத்துகிற, இழிவு படுத்துகிற விதி 310—மற்றும் 311 (2) சி. போன்றவற்றை நீக்கிடவும் அனைத்திந்திய மாநில ஊழியர் கூட்டமைப்புடன் இணைந்து பாடுபட்டுவருகிறோம். தேவையானால் விரைவில் நாடாளு மன்றத்தின் முன்பு புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்திடவும் நாம்தயாராய் இருக்கிறோம் :

நமது மாநிலத்தைப் பொறுத்தவரை கருவூலத்துறை ஊழியர்களின் நவம்பர் மாத வேலை நிறுத்த காலத்தை ஈட்டிய விடுப்பாகக் கருதி அரசு போடாததும், கூட்டுறவு நடுநிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் தஞ்சை, மாவட்டத் தலைவர் ஆகியோரின் தற்காலிக வேலை நீக்கத் தவறான ஆணைகளை ரத்து செய்யாமலிருப்பதும். சிறைத் துறை. பால் வழங்கு துறை நண்பர்களையும் வட ஆற்காடு மாவட்ட வருவாய்த்துறை சங்கத் தோழர்களையும் காரணமின்றி கைது செய்து, பொய் வழக்கு போட்டிருப்பதையும் இந்த மாநாட்டின் மூலமாகக் கண்டிக்க கடமைப்பட்டுள்ளோம்.

## நியாய வாடகை :

அரசினர் குடியிருப்புகளுக்கான நியாய வாடகை நிர்ணயிக்கிற பிரச்சனையிலும் அரசின்தரப்பில் காட்டப்படும் மெத்தனப் போக்கு நமக்கெல்லாம் எரிச்சலூட்டுகிறது. மேற்குவங்க, உத்தரபிரதேச மாநிலங்களின் யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு ஆணை பிறப்பிக்கிறார்கள். புதுடில்லியில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் தரும் வீட்டு வாடகையை இங்கே இருக்கிற கண்காணிப்பாளர்கள் தரவேண்டியுள்ளது. அண்ணாசாலை அரசினர் குடியிருப்பு, பட்டிணப்பாக்கம் போன்ற இடங்களில் வீடுகட்டப்பட்ட தொகையெல்லாம் நாங்கள் வாடகையாகக் கொடுத்து எத்தனையோ ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனினும் வட்டிக்கடைக்காரன் போல மாநில அரசு இந்தப் பிரச்சனையை அணுகும் முறை மாற்றப்படவேண்டும்.

## மலிவுவிலையில் உணவுப் பொருட்கள்

காவல் துறைகளைப் பணியாளர்களுக்கும் தீயணைப்புத் துறை களப்பணியாளர் களுக்கும் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் தர அரசு திட்டமிட்டு செயல்படுத்து மதை வாழ்த்தி—வரவேற்கும் நாங்கள் அதே அடிப்படையில் கடைநிலை ஊழியர்கள் ஊர்தி ஓட்டுநர்கள், காவல்துறை வானொலி அலுவலர் முதற்கொண்டு படிப்படியாக எல்லா அரசு அலுவலர்கட்கும் விரிவுபடுத்திட வேண்டுமென்பதை இம்மாநாட்டின் வாயி லாக அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னையிலிருந்து வேளாண் பொறியியல் துறையையும், நெடுஞ்சாலைத்துறையின் சில அலுவலகங்களையும் வெளியூருக்கு அகற்றுதல், தொல்லை பலவற்றை உருவாக்கும் மறுபடியும் மாற்றுதல் உத்தரவு என்ற தொல்லை, பல் வேறுபட்ட பணியாளர்கள் மத்தியில் மிரட்சியை ஏற்படுத்தி வருகிறது. இவற்றையெல்லாம் தவிர்க்க மாண்புமிகு முதலமைச்சர் வழிவகை செய்ய வேண்டும்

தமிழகத்தில் உள்ள நத்தம் அனைத்தையும் சர்வே செய்ய மாவட்டத்திற்கு ஒரு தனி யூனிட் நிறுவுதல், காவல்துறையில் புதிதாக நியமிக்கப்படும் காவலர்களுக்கு ஏற்ப அமைச்சுப் பணியாளர்களை அதிகப்படுத்துதல், பொதுப் பணித்துறையில் டிவிஷனல் அக்கவுண்டண்ட் பதவிகளை நமது மாநில ஆளுகையின் கீழ் கொண்டு வருதல், பத்திர பதிவுத்துறை பகுதி எழுத்தர் அனைவரையும் இளநிலை உதவியாளராக்குதல் முதலிய கோரிக்கைகளை இந்த மாநாட்டின் மூலமாக மறுபடியும் அரசுக்கு நினைவூட்டுகிறோம்.

தொழுநோய்த் தடுப்புப் பணியாளர், மண்வளப் பாதுகாப்பு உதவியாளர் போன்ற பகுதியினருக்கு அமைச்சர்களுக்கு உயர் அதிகாரிகளும், அமைச்சர்களும் கொடுத்த உறுதி மொழிகள் மதித்துக் காப்பாற்றப்பட்டு அரசு ஆணைகளாக வெளிவரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறோம். மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றும் பிலிம் ஆப்ரேட்டர்கள் கிராமப் பகுதிகளில் பெரிய உபகரணங்களை எடுத்துக் கொண்டு செல்லும்போது வாகன வசதியின்றி அல்லற்படுகிறார்கள். அரசு விபரவகை மேம்பாட்டு நிலையத்தில்,

எண்ணற்றோர் பணிவரன் முறை செய்யப்படாமல் பல ஆண்டுகளாக இருந்து வருவதும் பரி சீலனைக்குரியது. இதையெல்லாம் இந்த மாநாட்டின் மூலமாக வேண்டுகோள் விடுப்பது பயன்தரும் என்று கருதுகிறோம்.

## அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் குழு

இக்குழுவில் இடம்பெற்றுள்ள ஊழியர் தரப்பு பிரதிநிதிகள் 11 பேரில் எண்மர் நமது ஒன்றியத்தைச் சார்ந்தவர்கள். அரசு அலுவலர் மறைந்தால் அவர் தம் பிள்ளைகட்கு கட்டாயமாக வேலை தரும் திட்டம் போன்றவை, இந்தக் குழுவின் மூலம் தான் நாம் பெற்றோம், திருமணக்கடனை ஐயாயிரமாக உயர்த்த வேண்டுமென்று சங்கத்தில் நமது பிரதிநிதிகள் 11 பேரும், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும் சேர்ந்து பரிந்துரை செய்த முடிவை அரசால் ஏற்று ஆணைபிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்வதுடன்—கூட்டு ஆலோசனைக் குழுவில் எல்லாத் துறையினருக்கும் இடமளிக்கவும் வேண்டுகிறோம்.

நாளுக்குநாள் விலைவாசி உயர்ந்து வரும் இன்றைய காலச் சூழலில் வீடுகட்டும் கடன் தொகையை அதிகமாக்கி விண்ணப்பித்தவர்களுக்கு நீதி வழங்க வேண்டுகிறோம் கடன் கொடுத்தும் பணம் கிடைக்காத நிலை கடன் வாங்கியும் பட்டினி போலவே உள்ளது. அரசு இதில் விரைவு காட்ட வேண்டியது அவசியம்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் போதகர்களுக்குப் பதவி உயர்வு வந்தது, ஆனால் முதுநிலை அடிப்படையில் அது அமையவில்லை. ஆனால் பயிற்சித்துறையும் (D.E.T.) உள்ள அமைச்சுப் பணியாளர்கட்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் சுவற்றில் எழுதும் முறையைக் கைவிட்டதனால் ஏற்பட்டிருக்கும் நிம்மதி நீடிக்க வேண்டும். ஊரக வளர்ச்சித்துறையில் ஒரு பணி விதி விரைந்து அமுல் நடத்தப்பெற வேண்டும். செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்தில் பணியாற்று வோர், மருத்துவமனை சமையற் பணியாளர், மனநோய் மருத்துவமனை சமூக நல ஊழியர் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப் பெறல் வேண்டும், மின் ஆய்வுத் துறையில் பணியாளர் களின் தேக்கநிலை போக்கப் பெற்று பதவி உயர்வு தரப் பெறல் வேண்டும் என்ற கோரிக்கைகள்.

அன்புள்ள நண்பர்களே !

இயக்க உணர்வு என்பது ஒரு மந்திரச் சொல். மாய மாலச் சொல் அல்ல. மயக்கம் தரும் சொல் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அந்த மயக்கத்திலே கூட நிதானம் உண்டு.

அப்படிப்பட்ட இயக்க உணர்வோடு படைதிரண்டு வந்து உரிமைக்குரல் எழுப்பும் பாசறையை உறுதியாக்க வந்திருக்கும் தளகர்த்தர்கள் தான் நீங்கள்.

அகவிலைப்படி உடனே கிடைக்கு மென்றோ ஓய்வு பெற்றால் பத்தாயிரம் இதே மேடையில், அறிவிக்கப்படும் என்றோ, போனசைப் பற்றி இங்கேயே. இப்போதே பச்சைக்கொடி காட்டப்படும் என்று நம்பி வந்தவர்கள் யாருமல்ல. ஆனால் இயக்கம் வலிவோடு இருந்தால், இன உணர்வோடு தீர்க்கப்பட்டால் நன்மைகள் எல்லாம் நம்மை நாடி ஓடி வரும் என்பதை உணர்ந்த பெரு மக்கள் தான் நீங்கள்.

உங்களிடம் தலைமை உரை என்ற பெயரால் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டேன். போராட வேண்டும் பொதுக் கோரிக்கைகளுக்காக என்கிற மன உறுதியைக் குலைக்காமல் இருக்க இந்த மாநாடு நமக்கு உதவட்டும். தாழ்வுமனப்பான்மையையும் அடங்கிக் கிடக்க வேண்டும் என்கிற எண்ணத்தையும் வளர்த்து இருந்த பழைய அமைப்பு மறைந்தது புதுயுகம் பிறந்தது மணம் பரப்புகிறது என்ற இனிய நாதத்தை இந்த மாநாடு நமக்கு எழுப்பட்டும். கடந்த பல ஆண்டுகளில் பெற முடியாத உரிமைகளை உணர்வுகளை இந்த ஆண்டு பெறுவோம் வளர் [illegible] கூறி என் உரையை முடிக்கிறேன்.

84 370

# காற்று வீசாதோ?

கவிஞர்: ப. வே. இராமசாமி
உதவியாளர்: கோட்டாட்சியர் அலுவலகம்
சிவகெங்கை

தாக்குப் பிடிக்க
முடியா வாறு
பண்டம் விலைகள்
ஏறிப் போனதே! —வீடு
நாறிப் போனதே!

பாக்கு வெத்தலே
போடும் முன்னே
காப்பி குடிச்சா
சம்பளம் தாங்கலே! —நாங்க
கிம்பளம் வாங்கலே!

சாக்குப் போல்
உழைச்சு உழைச்சு
சல்ல டையாய்
மெலிஞ்சு போனமே —அட
நலிஞ்சு போனமே!

சீக்குப் பாக்க
மருத்துவப் படியைச்
சேத்துக் குடுத்தா
தேஞ்சு போகுமா? —சர்க்கார்
ஒஞ்சு போகுமா??

ஆக்கிப் பொங்கி
எறக்கிப் பாத்து
ஆற வைச்சா
சோறு பத்தலே —ஒரு
கூறும் பத்தலே!



தூக்கி வந்து
அள்ளி எடுத்துப்
பந்தி வைச்சா
வயிறு நிறையலே! —அட
பசியுங் குறையலே!

யார்க்கு முதலில்
என்ன தரணும்
என்று சரியா
ஒண்ணும் புரியலே —ஒரு
முறையும் தெரியலே!

மேற்கே தெக்கே
அடிக்கிற காத்து
மாறி எப்போ
வீசும் தெரியலே —இந்த
தேசம் அறியலே!

# Fresh Study of Pay Report

"THE HINDU"

A Hornet's nest has been raised by the publication of the recommendations of the Pay Commission for the State Government employees in Uttar Pradesh. Agitations in the form of rallies, wearing black band and a day's token strike have been reported from different parts of the State.

The Chief Minister, Mr, Viswanath Pratap Singh, admitted that the discontent among the employees is widespread. In keeping with the new political norms, he addressed a massive protest rally of the State employees, teachers' of aided schools and local bodies' employees in Lucknow on December 24.

A number of other Ministers addressed similar protest rallies of their departmental staff and promised their moral support.

The State Government has been overwhelmed by a spate of representations made against the scales suggested by the Pay Commission and its recommendations on house rent and other allowances. Over 300 representations have been received from employees' associations.

A committee of senior officials headed by the State's Chief Secretary has been set up to suggest modifications, It may take two months to submit its report.

U.P. had 6.73 lakh State employees last year and another 4.69 lakh employees in the aided educational and technical institutions.

The Pay Commission has recommended a 1:10·3 ratio between the minimum pay in the lowest scale and the maximum in the highest scale against the present ratio of 1:17.

Against the lowest scale of Rs, 165-215. the Commission has recommended a scale of Rs. 290–390 with a selection grade of 330–425 for 30 per cent of posts like those of peons, watchmen and sweepers.

Drivers who are now in the scale of Rs. 175-250 have been recommended Rs. 325-495 with a selection grade of Rs. 405-540 for 30 per cent of the posts.

With a view to increasing their career prospects. reservations for class four employees in the ministerial services has been raised to 15 per cent.

For the employees in the lowest grade, it has recommended that only 7·5 per cent of the pay should be charged as house rent if they are allotted Government accommodation.

Ministerial cadres have been recommended a new scale of Rs. 430-685 instead of the present Rs. 230-385. For section-in-charges, a new scale of Rs. 622-940 has been suggested.

As much as 35 per cent of the posts of lower division assistants in the Secretariat and Board of Revenue have been recommended to be filled by ministerial hands of subordinate offices on the basis of a limited examination. Twentyfive per cent posts of lower division assistants of the Secretariat will be reserved for the promotion of typists and other functionaries working in the Secretariat.

The Commission has recommended higher scales for Secretariat employees compared to their counterparts in other departments. This has caused resentment among the ministerial employees who are demanding equal pay for equal work.

The Commission has recommended a minimum of Rs. 770-1,600 for district-level officials. But such officials belonging to agriculture, animal husbandary or district sugarcane development office are to be fixed in the Rs. 850-1,720 grade. It has suggested the creation of specialist posts in irrigation, PWD and medical and health who would not be saddled with administrative responsibilities An incentive allowance of Rs. 150 has been recommended for allopathic doctors who serve in the rural areas or small towns.

Against the existing highest selection grade of Rs 2,250-100-2,750 the Commission has proposed a new grade of Rs. 2,700-3,000.

For engineers-in-chief of PWD and irrigation departments, the highest grade of Rs. 2,700-3.000 has been recommended. The same grade has been recommended for chief engineers also. Engineers-in-chief would also be entitled to a special pay of Rs. 250 in addition. The Director of Agriculture has been placed in the Rs, 2,700-3,000 grade.

Substantial upgradation has been recommended for assistant engineers executive engineers and superintending engineers. The grades recommended are Rs. 1,000-1,900, Rs. 1,420-2,275 and Rs 2.050 and respectively for the new specialist grade and Rs. 850-1720 Rs. 1,250-2,050 and Rs. 1,840,2400 respectively or others.

For the medical health department, the following are the grades: Ordinary grade specialists [Rs 930-1,840, senior grade specialists Rs, 1,360-2,125, consultants Rs. 1,660-2,300 and special grade consulstants Rs. 2.700-3,000 Medical College principals are to get a fixed Rs. 3,000. Lecturers, readers (assistant professors) and ' professors have been fixed in the grades of Rs, ,000-1,900, Rs. 1,420-2,275 and Rs. 1,900-2,600.

For primary school teachers, grades Rs. 320-460, Rs. 340-510 and Rs. 375-565 have been recommended for non-matric trained teachers, matric trained teachers and headmasters respectively.

Junior high school headmasters and high school headmasters have been put in the grade of Rs. 430-700 and Rs. 7,70-1,600 respectively.

The Commission has desired that its recommendations may be enforced with effect from July first 1979 and the dearness allowance admissible on that date has been included in the recommended pay scales.

The grant of dearness allowance on the Centre's pattern has been advised thereafter. A major sore point for the employees is the recommendation on house rent allowance. The Commission had wanted that employees would be required to submit house rent receipts, a practice discontinued when Mr. H.N. Bahuguna was the Chief Minister.

The present Chief Minister, Mr. V.P. Singh had to promise status quo ante at the employees rally to assuage ruffled feelings.

The Commission has made various recommendations on leave encashment, travelling allowance, daily allowance and uniform allowance,

The total additional financial burden in respect of State employees would be Rs. 39·80 crores Besides a further Rs. 25·50 crores will have to be incurred in implementing the recommendations for employees and teachers of aided schools and technical institutions.

Special Correspondent
*From Lucknow*
1—2—81

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்

**48-வது மாநில மாநாடு, சென்னை**

**7, 8, 9—பிப்ரவரி 1981**

## மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் பொதுத் தீர்மானங்கள்

### சம்பள விகித அமைப்பும் எண்ணிக்கையும்

1. தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியம், 3-வது சம்பளக்குழுவிற்குக் கொடுத்த அறிக்கையில், அடிப்படை ஊழியரின் ஆரம்பச் சம்பளம் மிகப்பெரிய அதிகாரியின் சம்பள விகிதத்தின் இறுதி நிலைக்கு 1:10 என்ற விகிதத்தில் அமைக்கப் படவேண்டும் என்று கேட்டிருந்தது. தேவை அடிப்படையில் குறைந்த பட்ச ஊதியம் (Need based minimum wage) என்ற அடிப்படையில் விலைவாசிப்புள்ளி 32) ஆக இருந்தபோது ஒரு அடிப்படை அரசு ஊழியருக்கு ஆரம்ப சம்பளம் ரூ. 400 என்றும் அதிக பட்ச ஊதியம் ரூ. 4000 என்றும் கேட்டிருந்தோம், ஆயினும் 3-வது ஊதியக்குழு அடிப்படை ஊழியருக்கான ஆரம்ப சம்பளத்தை கேட்டிருந்த ரூ. 400 க்குப் பதிலாக ரூ. 250 என்றும், சம்பள விகிதங்களில் அதிக பட்ச விகிதத்தை ரூ. 4000-க்குப் பதிலாக ரூ. 2500 என்றும் சிபாரிசு செய்து அரசாணையும் வந்துவிட்டது. விலைவாசி புள்ளி 325 ஆக 1977 ஜூலை மாத நிலையில் ரூ. 400 அடித்தள ஊழியருக்கு ஆரம்ப விகிதமாகக் கேட்கப்பட்டது.

புள்ளி விவரத்துடன் கூடிய ஒன்றியத்தின் வேண்டுகோளினை 3-வது ஊதியக்குழு ஏற்காத காரணத்தால், அலுவலர்களிடையே திருப்தியின்மையும் நியாயமான கோரிக்கையினை அரசு புறக்கணித்துவிட்டது என்ற எண்ணமும் உதித்துவிட்டது. மேலும் ஊதியக்குழு 20 சம்பள விகிதங்களை ஏற்படுத்தி பின்னர் வேறு காரணங்களுக்காக 21-வது சம்பள விகிதத்தையும் ஏற்படுத்திவிட்டது. இதன் காரணமாக ஒவ்வொரு பகுதி ஊழியர்களும் தங்கள் சம்பள விகிதங்களை மேல் நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள், 15 விகிதங்களாக அமைக்கப்பட்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது.

எனவே, ஏற்கனவே இந்த ஒன்றியம் கேட்டிருந்தபடி, கீழே உள்ள 15 சம்பள விகிதங்களையும் விலைவாசிப்புள்ளி 325 ஆக இருந்தபோது சிபாரிசு செய்ததாகையால், அவற்றுக்குப்பிறகுள்ள விலைவாசி உயர்வுக்கு உரிய அகவிலைப்படியினையும் உடனடியாக வழங்குமாறு தமிழக அரசினை மாநில மாநாடு கேட்டுக்கொள்கிறது.

1. 400–20–500–25–600–30–750
2. 460–20–500–25–600–30–750–40–790
3. 525–25–600–30–750–50–800
4. 600–30–750–40–950
5. 750–40–950–50–1200
6. 950–50–1200–60–1500
7. 1200–60–1500–75–1800
8. 1500–75–1800–90–2250
9. 1800–90–2250–125–2500
10. 2250–125–2750
11. 2500–125–3000
12. 2750–125–3000–150–3300
13. 3000–150–3600
14. 3300–150–3600–200–3800
15. 3600–200–4000

## 2. ஊதியக்குழு குறைபாடுகளை நீக்கும் குழு

3-வது ஊதியக்குழுவின் பரிந்துரையின் மீது அரசு வழங்கிய ஆணைகளில் உள்ள குறைபாடுகளை இந்த சங்கம் அரசுக்கு எடுத்துரைத்து அவற்றைக்களைந்திட ஒரு குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்காததால். 14 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் நடத்தியது. 5000 பேர்கள் கைது செய்யப்பட்டபிறகு அரசாங்கம் அரசு அலுவலர் ஒன்றியத்துடன பேச்சு வார்த்தை நடத்தி குறைபாடுகளை களைய ஒருவர் குழுவை திரு சி.வி. பணிக்கர் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் ஏற்படுத்தியது. இத்தக்குழு ஏற்பட்டு 1½ ஆண்டு காலமாகியும் அது தனது அறிக்கையை அரசிடம் பல மாதங்களுக்கு முன்பே கொடுத்துவிட்ட போதிலும் அரசு அதன் மீது இதுகாறும் ஆணை வழங்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

இத்தகைய காலம் தாழ்த்தி வரும் போக்கால், இந்தக் குழுவின் அறிக்கையினைத் தொடர்ந்து குறைகள் களையப்படும் என்ற நம்பிக்கை குறைந்து வருவதுடன் சோர்வு மனப்பான்மையினை ஏற்படுத்தியுள்ளது. எனவே இனியும் காலம் தாழ்த்தாது உடனடியாக குறைகளையும், ஆணையினை வழங்கும்படி அரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## 3. மருத்துவ வசதிகள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் அறிவித்திருக்கும் மருத்துவப்படி இதுவரை வழங்கப்படவில்லை. 3-ம் ஊதியக்குழு அரசு மருத்துவர்கள் பரிந்துரைக்கும் எந்த மருந்தும் கிடைக்கும் வகையில் சிறு மருந்தகங்களை (Dispenseing Points) வசதியான இடங்களில் அமைக்கவேண்டும் என்றும், இந்த சிறு மருந்தகங்கள் அரசினர் மருந்தகங்களினின்றும் போதுமான அளவில் மருந்தகங்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும ஒரு யோசனை வெளியிட்டது. இரண்டு ஆண்டுகளாகியும், அரசு இது பற்றி ஒரு முடிவுக்கு வரவில்லை, அரசு ஊழியர்களின் உடல் நலம் காத்தல் அவசர அவசியமான ஒன்று என்பதால், தற்போதுள்ள மருத்துவ செலவை திரும்பம் பெறும் ஏற்பாடு எல்லாப் பகுதி அலுவலர்களுக்கும் கிடைக்கும் வகையில் மேற்கு வங்கம், பீகார் முதலிய மாநிலங்களில் உள்ள முறையினைக் கையாளவும், நோயுற்றவர்களுக்கு அரசு மருத்துவமனையில் இலவச வைத்தியம் கொடுப்பதுடன், நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அரசு அலுவலர் ஒவ்வொருவருக்கும் மாதாமாதம் ரூ. 50 மருத்துவப்படியாக வழங்க இம்மாநாடு அரசினைக் கேட்டுக் கொள்கிறது.

## 4. அகவிலைப் படி

விலைவாசியின் ஏற்றம், குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகின்றது. இந்த விலைவாசி ஏற்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்களின் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே போகின்றது. அலுவலர்களது ஊதியத்தையோ, அகவிலைப்படியினையோ உயர்த்துவதால்தான் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்கிற தமிழக அரசின் வாதத்தை அரசு ஊழியர்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

மத்திய மாநில அரசுகளின் வரிக்கொள்கை. பற்றாக்குறை 'பட்ஜெட்' மறைமுக வரியின் சுமை, ரூபாய் நோட்டுகள் அளவின்றி வெளியிடுவது, கள்ளப் பணத்தின் ஆதிக்கம், இலாப வேட்டைக்கு தடையில்லாதது. தனவந்தர்களின் வியாபார முதலீட்டுக்காக கோடிக்கணக்கான ரூபாய் அரசு மாநிலம் வழங்குவது, இவை போன்ற பொருளாதாரக் கொள்கையினால்தான் விலைவாசி விஷம் போல் ஏறிவருவதும், அதன் விளைவால், உழைப்பாளி மக்களின் உண்மை ஊதியத்தின் மதிப்பு (The value of Real wage) நாள்தோறும் தேய்ந்து குறைந்து வருவதும் மறுக்கமுடியாத உண்மையாகும். தேய்ந்து வரும் ஊதியத்தின மதிப்பை ஈடுகட்டவே அரசு ஊழியர்கள் அகவிலைப்படி கேட்டு வருகிறார்கள். வருவாயை உயர்த்திக் கொள்ளவோ, தங்கள் தகுதியை முன்னை விட புதிதாக வளர்த்துக் கொள்ளவோ அரசு ஊழியர்கள் அகவிலைப்படி கேட்கவில்லை. வீழ்ந்து வரும் ஊதியத்தின் மதிப்பை மீட்கவே குறைந்த பட்சம் உள்ள பழைய நிலையையாவது காப்பாற்றிக்கொள்ளவே அகவிலைப்படி கேட்டுவருகிறார்கள், அரசு விலைவாசி உயர்வைக்கட்டுப்படுத்தாத வரையில், அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை வழங்க வேண்டுவது அரசின் கடமையேயாகும்.

ஏறும் விலைப் புள்ளிக்கு முழு அளவில் ஈடுகட்டும் (Full Nutralisation) அகவிலைப்படியை அரசு வழங்க வேண்டும் என்பதுதான் அரசு ஊழியர்களின் நெடுநாளைய கோரிக்கையாகும், இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முன் வராத மாநில அரசு குறைந்தபட்சம் மத்திய அரசு ஊழியர்கள் அகவிலைப்படி பெறுகின்ற போதெல்லாம் தன் ஊழியர்களுக்கும் அதற்கீடான அகவிலைப்படியை அதே தேதியிலிருந்தாவது கொடுக்கவேண்டும். தமிழகத்தில் 1969 வரை இந்த நிலை நீடித்து வந்தது. ஓரிரு மாதங்கள் தள்ளிப்போனாலும் அகவிலைப்படியை சமமாகப் பெற்று வந்தார்கள். அதன் பிறகுதான் அரசு அகவிலைப்படி வழங்குவதில் காலம் தாழ்த்தியது, அகவிலைப்படியில் உச்ச வரம்பினையும் ஏற்படுத்தியது.

மற்ற மாநிலங்களில், குறிப்பாக அண்டை மாநிலங்களில் மாநில அரசு ஊழியர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஈடான அகவிலைப்படியை அதே தேதியில் பெற்று வருகிறார்கள். ஆனால் தமிழக அரசு வழங்கவில்லை:

மத்திய அரசு ஊழியர்கள் பெற்ற இரண்டு அகவிலைப்படியை தமிழக அரசும் தன் ஊழியர்களுக்கு 1-9-80 முதல் ஒருஅகவிலைப்படியும் 1-12-80 முதல் மற்றொரு அகவிலைப்படிகளையும் உடனடியாக தரவேண்டும் அகவிலைப்படியையும் ஆக இரண்டு என்பதோடு. எதிர்காலத்திலும், இத்தக்கொள்கையைக் கைவிடாது அரசு தன கடமையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்றும், அகவிலைப்படியில் உள்ள உச்ச வரம்பினை நீக்கிட வேண்டும் என்றும், (D A Committee) அகவிலைப்படிக்குழு பரிந்துரை செய்தது போல விலைவாசிப் புள்ளி ஏறும்போதெல்லாம் (Automatically) தாமாகவே யாதொரு விளம்பரமுமின்றி வழங்கவேண்டும் என்று அரசினை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## 5. தமிழக அரசின் பழிவாங்கும் போக்கு

பொருளாதார நெருக்கடியால் உந்தப் பட்டு, விலைவாசி உயர்வுகளைத் தடுக்க முடியாத நிலையில் அதை ஈடுகட்டப் போதுமான அகவிலைப் படி வழங்கப்படாமை முதலிய வாழ்க்கையைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்காக கோரிக்கை விடுத்து, மகஜர்கள் எழுதி, தீர்மானங்கள் போட்டு அரசு செவிசாய்க்காத நிலை தோன்றும்போது அரசு ஊழியர்கள் போராட முன் வருகின்றனர். சில சமயங்களில் அரசு தரப்பில் உள்ளவர்களின் ஆணவப் போக்கால் இவை துரிதப்படுத்தப்படுகின்றன: பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளும் சூழ்லைகள் ஏற்பட்ட கால கட்டங்களில் கூட அரசு பிடிவாதமாக போராட்டங்களை ஒடுக்க முயல்வதைப் பார்க்கிறோம்:

காடம்பாறை நீரேற்று மின் திட்ட தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக உண்ணா விரதம் இருந்ததையே அரசு ஒரு சவாலாக ஏற்று அவர்களுக்குச் சிறை தண்டனை வழங்கிற்று. ஆர்பாட்டம் செய்த 200 தொழிலாளர்களைச் சிறைப்படுத்தியது இது காடம்பாறை நீரேற்று மின் திட்ட கான்ட்ராக்டருக்கே சாதகமாக அமைந்தது.

வடாற்காடு மாவட்ட குடிநீர் வடிக்கால் வாரிய ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காக உண்ணாவிரதமிருந்ததருக்காக 6 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் 8 பேர் தற்காலிகாகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

மதுரை காமராஜ் பல்கலை கழக ஆசிரியர்கள், போராட்டத்தில் சமரசம் ஏற்பட்ட பின்னரும் மன்னிப்புக்கடிதம் எழுதிக் கொடுத்தாலே விடுதலை செய்யப்படுவார்கள் என்ற ஊழியர் விரோதப் போக்கை அரசு தரப்பில் கடைபிடித்தனர்.

இளம் மருத்துவர்கள் போராட்டத்தின்போதும், அதை தொடர்ந்து நடைபெற்ற மருத்துவக்கல்லூரி மாணவர்களின் போராட்டத்தின்போதும் அரசு. ஊழியர் விரோதப் போக்கினையே கடைப்பிடித்தது: மாணவர்களின் விடுதியையே மூடிவிட்டு அவர்களை அறைகளில் கூட தங்க அனுமதிக்காமல் வெளியே அனுப்பி பழிவாங்கும் தன்மையை பகிரங்கப்படுத்தியது, அவர்களில் கல்லூரிக்குத் திருபுவதாக முடிவெடுத்த பிறகும் மன்னிப்புக் கடிதம் எழுதிக்கொடுத்தாலே கல்லூரி திறக்கப்படும் என்றும் அறிவித்து பழிவாங்கும் படலத்தைத் தொடர்ந்தது.

அண்ணாமலை பல்கலைக் கழக ஊழியர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் அவர்களை சிறைபடுத்தி வருகிறது.

மதுரை மாவட்ட கருவூல அதிகாரியின் அராஜகப்போக்கினைக் கண்டித்து அவர்களது சங்கம் எடுத்த நடவடிக்கையின் காரணமாக பழிவாங்கப்பட்டனர். அரசு ஊழியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணாமல் அதிகாரிகளின் தவறான தகவல்களையே நம்பி பழிவாங்கும் நடவடிக்கையைத் தொடர்ந்ததால். இந்த இயக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. அவர்கள் கடின சித்தத்துடன் போராட நிர்பந்திக்கப்பட்டனர்.

ஊழியர்கள், 15, 20 நாட்கள் சிறைபடுத்துப்பட்டனர். போலீஸ் வழக்குகள் போடப்பட்டன. ஊழியர்களிடம் மன்னிப்புக்கடிதம் கோரப்பட்டது. பலர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். ஊதியம் மறுக்கப்பட்டது; ஆண்டு ஊதியம் உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. பதவி உயர்வு மறுக்கப்பட்டது. முன்னணியில் இருந்தவர்கள் ஒரு கோடியிலிருந்து மறுகோடியிலிருந்து மாற்றப்பட்டனர். நூற்றுக் கணக்கானவர்கள் மீது அலுவலகத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. வேலை நிறுத்த காலத்தை இதர தரப்பு ஊழியர்களுக்கு உத்தரவிட்டதுபோல் அல்லாமல், சம்பளம் இல்லை என்ற மிகக்கடுமையான உத்தரவு பிறபிக்கப் பட்டது. போலீஸ் போட்ட வழக்குகளில் மிகப்பலரை நீதிமன்றம் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்த பிறகும் அரசு ஊழியர்கள் மீது உள்ள வழக்கைத் திரும்பப் பெறாமல், நடத்தி அவர்களை தொல்லைப் படுத்தி வருகிறது.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக மன்னிப்புக்கடிதம் எழுதி வாங்குவது அநாகரீகம் என்று முதன் முதலாக முதலமைச்சராகப் பதவி ஏற்றபோது சொன்ன முதலமைச்சரின் நிர்வாகத்தில், எந்தத்தரப்பில் போராடினாலும் அவர்களை மன்னிப்பு எழுதிக் கொடுக்கச்சொல்வது, அரசு ஊழியர்களின் மன வேக்காட்டை அதிகமாக்கி தருகிறது. இத்தகைய புழுக்கத்தை நீக்குவது நிர்வாக நலனை முன்னிட்டு, அரசு தன் கடமையைக் கருத வேண்டும் என்றும், கருவூலத்துறை ஊழியர்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் உடனடியாகக் கை விட வேண்டும் என்றும், இம்மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது. இதே போல பால்வள நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்! பல்கலைக் கழக ஊழியர்கள்! கிறைத்துறை ஊழியர்கள் கிராம அதிகாரிகள் மற்றும் இதர அரசு, உடனடியாகக் கைவிட்டு, அரசு - அரசு ஊழியர்களிடையே சுமூகமான நல்லுறவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## 6. போனஸ்

இந்திய முழுவதுமுள்ள மாநில அரசு ஊழியர்கள் போனஸ் வேண்டும் என்பதை ஒரு முக்கிய கோரிக்கையாக வைத்துப்போராடி வருகின்றனர், தனியார் நிறுவனங்களில் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும்கூட போனசை வழங்கிவிட்டு, மாநில அரசு ஊழியர்களுக்கு மட்டும் போனஸ் மறுப்பதென்பது நியாயத்திற்குப் புறம்பானதாகும்; மாநில அரசு ஊழியர்களுக்கும் தங்களின் உழைப்பை தந்து ஊதியம் பெறுகின்றனர். அவர்களுடைய உழைப்பும் இந்த நாட்டில் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகிறது.

தொழிலாளிக்கும், பல பகுதி உழைப்பாளிக்கும் இன்று போனஸ் சட்ட உரிமைப் பெற்றிருப்பது முதலாளிகளின் தயவினால் கிடைத்ததல்ல. உழைப்பாளி மக்கள் பல வருடங்களாக போராடிப்பெற்ற ஒன்றாகும். நீதிமன்றங்களிலும் அரசினர் நியமித்த விசாரணைக்குழுவுக்கும் போனஸ் கொடுக்க வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கியிருக்கின்றன.

"இலாபம் இருந்தாலும் இல்லையென்றாலும், தொழிலாளர்கள் போனஸ் பெற உரிமையுடையவர்கள்" என்று மத்திய அரசு ஒப்புக்கொண்ட பிறகு அரசு ஊழியர்களுக்கும் போனஸ் பெற உரிமைபெற்றவர்களாகவே ஆகிறார்கள்.

வாழ்க்கை ஊதியமோ (Rivising Wage) நியாய ஊதியமோ (Fair Wage) இன்னும் சொல்லப்போனால் தேவையின் அடிப்படையில் குறைந்த பட்ச ஊதியமோ (Need based minimum wage) கிடைக்காதவரை, கிடைத்திருக்க வேண்டிய ஊதியத்திற்கும், வாங்குகின்ற ஊதியத்திற்கும் இடையில் துண்டு விழுவதை ஈடுகட்டுவது போனஸ், என்று நீதி மன்ற தீர்ப்புகள் சொல்லுகின்றபோது, அரசு ஊழியர்கள் "போனஸ்" பெற எல்லா வகையிலும் தகுதி பெறுபவர்களே. இந்த ஊதிய இடைவெளியை நிரப்பவே போனஸ் கொடுக்க வேண்டுமென்பதால்

போனஸ் வழங்கப்படா ஊதியம், அமுல் படுத்தாது தள்ளி வைத்துள்ள ஊதியம் பறிக்கப்பட்ட ஊதியம் (Defered/wage) என்று வழங்கப்படுகிறது. 12 மாத உழைப்புக்கு கிடைக்க வேண்டிய ஊதியத்தை நிறைவு செய்யும் 13-வது மாத ஊதியமாக போனஸ் கருதப்படுகிறது. எனவேதான் மாநில அரசு ஊழியர்கள், "போனஸ்" என்பது பரிசல்ல, பறிக்கப்பட்ட ஊதியமே" என்று வலியுறுத்துகின்றனர்.

தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு குறைந்த பட்சமாக ஒரு மாத ஊதியத்தையாவது (Exgratia) தொகையாக உடனடியாக வழங்க வேண்டுமென இம் மாநாட்டின் மூலம் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது. மேற்கு வங்கத்தில் திரிபுராவில். கேரளாவில்; அண்மையில் ஆந்திராவில் அரசு அழியர்கள் பெறும் (Exgratia) தொகையினை மிஞ்சும் அளவிற்கு காலம் கடந்து கொடுத்தாலும் அலுவலர்கள் மனம் மகிழக் கொடுத்தோம் என்கிற பெருமையோடு ஒரு மாத ஊதியத்தை (Exgratia) தொகையாக வழங்கி இதர மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றும் புகழினை உருவாக்கிட இம்மாநாட்டில் மூலமாக தமிழக அரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## பொது செலவின முன்பணம்

அரசு அலுவலர்கள், விழா முன் பணம், கதர் கைத்தறி முன் பணம் முன் பணங்கள் பெறுகின்றனர். இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒவ்வொரு அலுவலருக்கும் ஒரு ஆண்டுக்கு மொத்தமாக பொது செலவின முன் பணம் (General Purpose Advance) என்ற பெயரில் ரூ. 2000 வழங்கி 10 மாதங்களில் பிடித்துக் கொள்ளுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இதனால் 3-4 முன்பணங்களுக்காக ஒவ்வொரு தடவையும், பட்டியலிடுவது போன்ற அலுவலக வேலைகளும் குறையும்- அதோடு அலுவலர்கள் எப்போது தேவைப்படுகிறதோ அப்போதுமட்டும் ஒரேதவணையிலோ அல்லது பாதிபாதியாக 2 தவணைகளிலோ வாங்கிக்கொள்ள அனுமதித்தால், அவசியம்ஏற்படுகிற போது, பொது செலவு முன்பணம் அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். ஏற்கனவே மேலே குறிப்பிட்ட இனங்களில் முன் பணம் வாங்கியிருந்தால் அதைக் கழித்துக் கொண்டு 3-வது சம்பளக்குழு பரிந்துரை செய்திருப்பதுபோல, சேமிப்பு நிதியினின்றும் வழங்கும் முன்பணம், சைக்கிள்–ஸ்கூட்டர்-கார் முன்பணம், திருமண முன்பணம், வீடு கட்டும் முன்பணம் மற்றும் வெப்ப உடை முன்பணங்கள் தவிர்த்து இதர முன்பணங்களுக்குள் பதிலாக இந்த பொதுச் செலவு முன்பணம் வழங்க இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## தமிழ்நாடு அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பிற்கு கல்விச்சலுகை

தமிழ்நாடு அரசு தமிழகத்தில் உள்ள சிறுவர்கள். சிறுமிகள் அனைவரும் குறைந்த பட்சம் உயர்நிலைக்கல்வியாவது பெற்றவர்களாக திகழ வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் முதல் கட்டமாக உயர்நிலைக் கல்விப் படிப்பு இறுதிக் கட்டமான 10-வது வகுப்புவரையிலும் பின்னர் புகுமுக வகுப்பு வரையிலும் இலவசக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.

தற்பொழுது தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி விரிவாக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தின் திறனாய்வு தொழிலாய்வுக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டை தமிழக மாணவர்கள் எய்த அடிகோலியுள்ளது, எனினும் அரசு அலுவலர்களின் பிள்ளைகள் அவர்கள் பெறும் ஊதியம் விலைவாசி உயர்வை ஈடுகட்டும் அளவுக்கு இல்லாத காரணத்தால் பட்டப்படிப்பு படிக்க இயலாதவர்களாகவோ படிக்க வைத்தால் அதன் காரணமாக கடன்பட்டு அதை அடைக்க முடியாதவர்களாகவோ அவதிப் படுகின்றனர், காமராஜர் காலத்தில், இலவச கல்வித் திட்டம் கொண்டுவந்த நேரத்தில், உயர்நிலைக்கல்வி முடித்தாலே வேலை கிடைக்கும் என்ற நிலைமாறி, பட்டப்படிப்பைத் தாண்டினால் கூட வேலை கிடைப்பது தற்போது அரிதாயிருக்கிறது

சில பிரிவினருக்குக் கொடுக்கப்படும் ½ கட்டணச்சலுகைகளை, வருமான அடிப்படையில் வருவாய் அதிகாரிகள் கொடுக்கும் சான்றின் அடிப்படையில் பெற வேண்டியிருக்கிறது. அரசாங்க ஊழியர் அல்லாதவர்கள் தங்கள் வருமானத்தை மறைத்து குறைத்துக்காட்டி சான்று பெற்று இந்தச் சலுகைகளை அனுபவிக்க முடிகிறது. அரசு ஊழியர்கள் உண்மையான வருமானத்தைக்காட்டுவதால் பல சலுகைகள் பெற முடியவில்லை. எனவே, பொது மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் உள்ள இந்த வேறுபாட்டினை அரசு உணர்ந்து, அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பட்டப்படிப்பு முடியும் வரை கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம் முதலியவற்றிற்கு விலககளித்து, அரசு ஊழியர்களின் பிள்ளைகளும் வருங்காலத்தில் ஏனைய பகுல் மக்களோடு இணைந்து சமநிலையில் மின்னேற வழி வகுக்க இம்மாநாடு தமிழக அரசினைக் கேட்டுக் கொள்கிறது.

## அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 தொகை வழங்குதல்

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் பணி புரிந்து வருகையில் உயிர் நீத்தால் அவர்கள் குடும்பத்திற்கு அரசு 1975-ம் ஆண்டு முதல் ஒரு ரூபாயை மாதாமாதம் பிடித்துக் கொண்டு ரூ. 10,000 தொகை வழங்கி வருகிறது.

இதேபோல அரசு அலுவலர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர்களுக்கு ரூ. 10,000 வழங்க வேண்டுமென்றும் கோரிக்கையை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் 1975 முதல் அரசாங்கத்திடம் வைத்து வலியுறுத்தி வருகிறது.

25, 30 ஆண்டு காலம் பணிபுரிந்த ஒரு அரசு அலுவலர் அவ்வப் போது ஏறிவரும் விலைவாசிக்கு ஏற்ப அவர்களது ஊதியத்தை உயர்த்திக்கொடுக்காத காரணத்தால் அதை ஈடுகட்ட வேறு வழியின்றி எவ்வகையாலும் கடன்பட்டு, அலுவலர் கூட்டுறவு வங்கியில் பெறும் கடன், திருமணம், வீடுகட்டும் முன் பணம் முதலிய கடன்கள் பொது சேமிப்பு நிதியினின்றும் கடன் பெறுகின்ற இவர்கள் ஓய்வு பெறும்போது சேமிப்பு நிதி இருப்பு அற்ப சொற்பமாகவே இருக்கும் பாக்கியுள்ள கடன்களுக்காக பணிக்கொடை (Gratuity) யினின்றும் பிடித்துக் கொண்டது போக, கணிசமான அளவுக்கு ஏதும் மிஞ்சுவதில்லை எனவேதான் ஓய்வு பெறுவதைவிட பணியிலிருக்கும் போதே இறந்து விடுவது குடும்பத்துக்கேனும் பயனுள்ளதாக இருக்கும் என்ற எண்ணம் அலுவலர்களிடையே வளர்ந்து வருகிறது. ஓய்வு பெறும் வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அரசு அலுவர்களும் வருங்காலம் பொருளாதாரத் தொல்லைகள் குறைந்ததாக இருக்கும் என்ற எண்ணத்துடன், உற்சாகமாகப் பணியாற்றும் வகையில், ஒரு குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் சம்பளத்தினின்றும் பிடித்துக் கொண்டு அவர்கள் ஓய்வும் பெறும்போது இன்னும் எத்தனை ஆண்டுகள் பணியில் இருப்பீர்கள், என்று ல்ாப நஷ்டக்கணக்குப் போடாமல், இதை அலுவலர் நலத்திட்டமாக ஏற்று ரூ 10.000/-வழங்க் தகுந்த ஆணையினை காலம் தாழ்த்தாது பிறப்பிக்க தமிழக அரசினை இந்த மாநில மாநாடு வேண்டுகிறது.

## தொழிற் சங்க உரிமை:

இந்திய நாட்டை அந்நியர்கள் ஆண்டு கொண்டிருந்த போது இந்திய மக்களை அடிமைகளாக வைத்திட நிர்வாக முறை தேவைப்பட்டது. அந்த நிர்வாகத்தில் அடக்கு முறை அமைப்பின் ஒரு பகுதியாக அரசு ஊழியர்களும் அடிமைகளாய் வைக்கப்பட்டிருந்தார்கள். மக்களிடமிருந்து, தொழிலாளிகளிடமிருந்து அரசு ஊழியர்களைப் பிரித்து அவர்களைத் தொழிலாளர்களுக்கும் மேலான ஒரு பிரிவினராக எண்ணும் வகையில் ஒரு பிரமையை வைத்திருந்த காரணத்தால் அரசு ஊழியர்கள் தங்களை தொழிலாளர்களிலிருந்து வேறு பட்டவர்களாகக் கருதி வந்த காலம் உண்டு. ஆயினும் நாளாவட்டத்தில் இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகு, மத்திய அரசு ஊழியர்களில் ஒரு பெரும் பிரிவினர், ரயில்வே, தபால் தந்தி முதலிய துறையைச் சேர்ந்தவர்கள் இந்த மாடையினின்றும் விடுபட்டு, தங்களைத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியாகவே ஆக்கிக் கொண்டதன் விளைவாக அவர்களும் தொழிற்சங்க உரிமைகளைப் பெற முடிந்தது.

இவ்வாறு தொழிற் சங்க உரிமை பெற்றதன் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை அநேகமாக பேசித்தீர்த்துக்கொள்ள முடிகிறது, அவர்களுக்காக முழு நேரமும் உழைப்பவர்கள் தொழிற்சங்க உரிமையோடு நிர்வாகத்துடன் வாதாட முடிகிறது இதன் விளைவாக சில்லறைப் போராட்டங்கள் தவிர்க்கப்படுகின்றன, பல கட்டப் பேச்சு வார்த்தைகளும் பயனவிக்காவிட்டால்தான் போராட்டத்தில் இறங்க முடிகிறது, இதனால் ஊழியர்களும், அரசு நிர்வாகமும் இதன் மொத்த விலைவாக பொது மக்களும் நன்மையடைகின்றனர்,

தொழிற் சங்க உரிமைகள் வழங்கப்பட்டால் திடீர் வேலை நிறுத்தங்கள் முதலியவை சாதாரணமாக நிகழ்வது கிடையாது. அத்தகைய போராட்டம் அவசியமெனப்பட்டாலும் சட்ட ரீதியாக நிர்வாகத்துக்கு அரசுக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அத்தகைய நிலை தோன்றும்போது பல பிரச்சினை அவசர அவசியத்தை உணர்ந்து நிர்வாகம் தீர்த்து விட முடியும்.

இந்த அடிப்படையில், மேற்கு வங்கு அரசு வழங்கியிருக்கும் தொழிற்சங்க உரிமைகளை தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என இம்மாநாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

## அரசு ஊழியர் நடத்தை விதிகள்

"அரசு ஊழியர் நடத்தை விதிகள்" இந்த நாட்டை அடிமை நாடாக வைத்திருந்த அன்னிய ஏகாதிபத்தியம் உருவாக்கி வெளியேறும்போது எடுத்துச் செல்லாமல் விட்டுவிட்டுப்போன என அடிமைச் சாசனமாகும். இந்திய மக்கள் விடுதலைக்காகப் போராடிய காலத்தில் அந்த மக்கள் வெள்ளத்தோடு அரசு ஊழியர்கள் கலந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களால் பிரித்து வைப்பதற்காக ஏற்படுத்திய ஒரு முறையே நடத்தை விதிகள்.

இந்த நடத்தை விதிகளில் ஒரு அரசு ஊழியர் ரேடியோ வாங்கினால் கூட கணக்குக் காட்டவேண்டும் என்றும் அரசு ஊழியர்களின் மனைவி மக்களையும் கட்டுப்படுத்தும் விதிகள் இருக்கின்றன என்பதையும், நியாயமான குறைகளுக்காக ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது. சங்கத்துக்காக முன் அனுமதியின்றி நன்கொடை வசூலிக்கக்கூடாது. அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றி மக்களிடம் பேசக்கூடாது, ஒரு அரசியல் கட்சியின் தேர்தல் சின்னம் அரசு ஊழியர் வீட்டுச் சுவரில் இருந்தால்கூட அதற்கு அரசு ஊழியர் பொறுப்பு என்று சொல்லும் அளவுக்குச் சில கட்டுப்பாடுகள் மலிந்து இருக்கின்றன. இன்று மாணவராக இருந்து நாளை அலுவலராக வரக்கூடியவர்களெல்லாம் இதில் அக்கரை காட்ட வேண்டிய ஒரு அவசியம் தோன்றியிருக்கிறது.

நாட்டின் நலனை மனதிற் கொண்டு அரசு வகுக்கும் திட்டங்களை அமல் செய்பவர்கள் அரசு ஊழியர்கள், விடுதலை பெற்ற ஒரு நாட்டின் குடிமகன் என்ற உணர்வு அரசு ஊழியர்களுக்கு சற்று அதிகமாகவே இருக்கிறது. விடுதலைப் போராட்ட காலங்களில் மாணவர் பருவத்திலேனும் கலந்துகொண்டவர்களே இன்று அலுவலகங்களில் மிகுதியாக உள்ளனர், அல்லது அந்தப் பாரம்பரியத்தில் வந்த வாரிசுகள் பணி புரிகின்றனர்.எனவே, அரசு போடும் திட்டங்களை நடத்துவதில் முன்னனியில் நிச்சயமாக இருப்பார்கள். எனவே ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற இந்த அடிமைச் சாசனத்தை சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகத்தில் என்றோ செல்லாததாக்கி இருக்கவேண்டும்,

இதை நன்கு உணர்ந்தே கேரள அரசு நடத்தை விதிகளைத் தளர்த்தியிருக்கிறது. மேற்கு வங்க அரசு நடத்தை விதிகள் என்ற பேரையே எடுத்துவிட்டு (West Behgal Serviccs, Duties, rights and obligation of Govt. employees rules 1980)

என்று ஜனநாயகப் பெயர் சூட்டியிருக்கிறது. இதன் விளைவாக, அரசு ஊழியர்கள் நாட்டின் மக்கள் என்ற உரிமையோடு அரசுக்கு திட்டங்களை நிறைவேற்றுவதில் முழு ஆதரவு நல்கி வருவதையும், அரசுக்கும் அரசு அலுவலர்களுக்குமிடையில் சுமுகமான உறவு நிலவுவதையும், கண்கூடாகக் காணமுடிகிறது. இத்தகைய நிலை தமிழகத்திலும் உருவாகும் வண்ணம் மேற்கு வங்கத்தைப்போல, நடத்தை விதிகளை அடியோடு மாற்றி, மக்கள் ஜனநாயகம் மலரச் செய்ய அரசினை இந்த மாநாடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

## தொழில்வரி விலக்களித்தல்

அரசு அலுவலர்களிடத்தில் வசூலிக்கும் தொழில்வரி அண்மைக் காலத்தில் தாங்கமுடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டது. சென்னை மாநகராட்சியின் விகிதங்கள் மிக அதிகமாக உள்ள தேவைஅடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியமே வழங்கப்படாத நிலையில் அரசு அலுவலர்களிடம் தொழில்வரி பிடித்தம் செய்வதை உடனடியாக விலக்களித்து நிறுத்தி வைக்குமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## விடுப்பு கால பயண சலுகை

மத்திய அரசு அதன் ஊழியர்களுக்குக் கொடுத்திருப்பது போல மாநில அரசு ஊழியர்களுக்கும் விடுப்பு கால பயணச் சலுகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையினை 2-வது ஊதியக்குழுவிற்கே எமது ஒன்றியம் கொடுத்திருந்தது. எனினும் இதுகாறும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை,

1976-ல் கர்நாடக அரசாங்கம் நியமித்த ஊதியக்குழுவின் தலைவர் நீதிபதி ஏ. நாராயணபாய் அவர்கள் "மாநில அரசு ஊழியர்களுக்கு ஒருமுறையேனும் இந்தியாவில் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அல்லது புனித தலங்களுக்கு போய்வரவும், அதோடு சொந்த ஊருக்குப் போய் வரவும், பயணச்சலுகை வழங்கவேண்டும்" என்று குறிப்பிட்டதை மனதிற்கொண்டு, மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுத்திருப்பதுபோல மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆண்டுக்கொருமுறை குடும்பத்துடன் சொந்த ஊருக்குப் போய்வரவும், 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவில் உள்ள எந்த இடத்துக்கும் போய் வரவும் விடுப்பு காலப் பயணச் சலுகையினை வழங்கிட வேண்டுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## 20 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு தனி சம்பள விகிதம்

3-வது ஊதியக்குழுவின் சிபாரிசின்படி ஒரே பதவியில் 10 ஆண்டுகள் இருப்பவர்களுக்கு அவர்கள் வாங்கும் சம்பள விகிதத்துக்கு அடுத்த சம்பள விகிதத்தில் சம்பள நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டது. ஏற்கனவே அத்தகைய ஊழியர்கள் பல அவர் முன்பு பழைய சம்பள விகிதத்தில் அநேகமாக உச்சநிலைச் சம்பளம் வாங்கி வந்த காரணத்தால் "மேல் சம்பள நிலையில்" ஊதியத்தை நிர்ணயிக்கும்போது கிடைத்த உயர்வு மிகச் சொற்பமானதாக இருந்ததால் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது.

பல அரசு ஊழியர்கள் அரசு அலுவலக பணியில் சேர்ந்த நாள் முதல் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருந்தால், அவர்களுக்கு தற்போது எந்த சம்பள விகிதத்தில் இருக்கிறார்களோ அதற்கு அடுத்த மேல்நிலை சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டுமென இந்த மாநாடு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

## 'பள்ளிக்கல்வித் துறை"

கல்வித்துறையில் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு இணைப்பு ஆணையால் தமிழ்நாடு தேர்வாணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வரும் 6000க்கும் மேற்பட்ட முறையான 'ஏ' பிரிவு அலுவலகப் பணியாளர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலங்கூட சேர்ந்தெடுக்கப்பெறாத குறைந்த ஊதியம் உள்ள 'பி' பிரிவு பணியாளர்களின் கீழ் பணிபுரியும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

டெல்லி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மாற்றுக் கொள்கை வகுப்பதன் மூலம் தக்க தீர்வு காணும் வகையில் தமிழகஅரசு உடனடி நடவடிக்கை எடுத்து, 'ஏ' பிரிவு அலுவலகப்பணியாளர்களின் நலன் காக்குமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது

## "திருமண முன்பணம்"

தற்சமயம் திருமண முன்பணமாக பெண்களுக்கு ரூ. 2000-ம் ஆண்களுக்கு ரூ 1000 வழங்கப்படுகிறது இது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும் இப்போதுள்ள விலைவாசி உயர்வில் இந்தத் தொகையால் திருமணச்செலவுகள் ஒரு பகுதியைக் கூட, எவ்வளவு சிக்கனமாக இருந்தாலும் சரிக்கட்ட முடிவதில்லை. இந்தத் தொகை 10 ஆண்டுகட்குமுன் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாதலால், ஆண்.பெண் என்ற வேறுபாடின்றி இந்தத் தொகையை ரூ. 5000/.மாக உயர்த்த இந்த மாநாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது:

## அரசு குடியிருப்பு வீடுகளுக்கு நியாய வாடகை

அரசு குடியிருப்பில் வசிக்கும் அரசு அலுவர்லகளுக்கு தற்போது சம்பளத்தில் 10% வாடகையாக வாங்குவதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப் படியினையும் சம்பளத்திலிருந்து பிடித்து விடுகின்றனர்.

மேற்கு வங்கத்திலும். உத்திரபிரதேசத்திலும், முறையே 5%ம் 7½%ம் என்ற விகிதத்திலேயே வசூலிக்கிறார்கள் எனத் தெரிகிறது. எனவே இதையெல்லாம் ஆராய்ந்து, ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு நியாயமான வாடகையை நிர்ணயிக்கும்படியாக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## "மலிவு விலையில் அத்யாவசியப்பெருள்கள் வழஙகுவது"

அண்மையில் காவலர்களுக்கும், பின்னர் தீயணைப்புப்படையில் இருப்பவர்களுக்கும் இன்ஸ்பெக்டர்கள் வரையான பதவிகளில் இருப்பவர்களுக்கும், மலிவு விலையில் அத்தியாவசிய ப் பெருள்களை வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை, எந்தக் காரணங்களுக்காக காவலர்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசியப்பொருள்கள் வழங்கப்படுகிறதோ, அதே காரணங்களுக்காக இதர அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே நியாயமாகத தெரிகிறது.

10 மணிக்கு அலுவலகம் என்றாலும் அதிகாலையிலேயே எழுந்த குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு. குடும்பப்பெண் என்ற வகையில் இதர வீட்டு வேலைகளையும் செய்து விட்டு அலுவலகத்திற்கு புறப்படும் முன்பு மண்ணெண்ணெய் காகவும். அரிசிக்காகவும், இதர உணவு எண்ணெய்கள், சீனி முதலியவற்றிற்காகவும் 'க்யூ' வில் நின்றும் நியாய விலைக்குக் கிடைக்காமல் அவதிபபடும் பெண் அரசு ஊழியர்கள் எண்ணற்றவர்கள். வேலைக்கு போகும் ஆண்களுக்கும், அவர்கள் மனைவியர் எங்காவது பணிபுரிந்து குறைந்த அளவிலாவது ஊதியம் பெற வேண்டிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கும் இதே சிரமங்கள் இருந்து வருகின்றன,

எனவே அரசு குடியிருப்புகளிலும், அரசு அலுவலகங்கள் பெருவாரிய,ரக உள்ள வளைவுகளிலும், அத்யாவசிய பண்டங்களான, அரிசி, உணவு எண்ணெய் பருப்பு வகை, சீனி, மண்ணெண்ணை போன்ற பொருள்களை மலிவு விலையில் வழங்க அரசு ஆவன செய்ய இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## "ஒன்றியத்தின் அமைப்பு முறையும் முன்னேற்றமும் அரசின் சங்க விரோத நடவடிக்கைகளும்"

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் 1920-ல் நிறுவப்பட்ட மிகப்பழமையான ஒரு சங்கமாகும். அரசு 1924-ம் ஆண்டில் இதற்கு அங்கீகாரம் வழங்கி உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து பிரசுரிக்கப்பட்டு வந்த "Public Servant" என்ற நூலில் இந்த சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் இருப்பதிலிருந்து இதன் தொன்மையையும் முக்கியத்துவத்தையும் அறியலாம். பொருளாதார நிலைகளினால் உந்தப்பட்டு 1947-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதி தொடர்ந்து 7 நாட்கள் வேலை நிறுத்தத்தில் இச் சங்கம் ஈடுபட்டது. ஆகஸ்டு மாதம் இந்தியா விடுதலை பெற்றது. மதிப்பிற்குரிய ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் காங்கிரஸ் மந்திரி சபையின் பிரதம மந்திரியாக இருந்தார்கள். (அப்போது பிரதம மந்திரி என்றுதான் அழைப்பது வழக்கம்). அகவிலைப்படி கேட்டு, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைதது வேலை நிறுத்தம் செய்த போது, புதிதாக பதவியேற்றிருந்த காங்கிரஸ் அரசாங்கம், வெள்ளைக்காரர் காலத்தில் போராடி சுதந்திரம் வந்த 3 மாத காலத்திற்குள் போராடியதால் தேசத்தின் விரோதிகள் என்று கருதியதுண்டு. தினசரி பேரன்ற காங்கிரஸ் பத்திரிகைகள் மிகக்கடுமையாக விமரிசனம் செய்ததும் உண்மைதான், ஆயினும் ஓமந்தூராரோ அல்லது அவருக்குப்பின்னர் பதவி ஏற்ற குமாரசாமி ராஜாவோ அரசு ஊழியர்களை பிரித்து வைக்க வேண்டும், போட்டி சங்கம் ஒனறை தேசியக் கட்சியின் மீது பற்றுள்ளவர்கள் மல்லாயிரக்கணக்கில் அப்போது அரசு அநுவலகங்களில் இருந்தபோதும், நிறுவ வேண்டும் என்று கருதியதில்லை. அந்த அரசு நினைத்திருந்தால் அப்போது இருந்த நிலையில் என். ஜி. ஓ. சங்கத்துக்கு எதிராக ஒரு சங்கத்தை பெரிய அளவிலேயே ஆரம்பித்திருக்க முடியும்.

அதன் பிறகு காமராஜர் முதலமைச்சராக வந்தபிறகு கூட சில கட்டங்களில் தனிப்பட்ட சிலரின் பேச்சுகளின் கடுமையை உணர்ந்த சிலர்; ஒரு போட்டி சங்கத்தை உருவாக்க வேண்டும் என்று யோசனை சொன்னபோது கூட பெருந்தன்மையோடும், அரசு ஊழியர்களை பிரித்து வைப்பது நிர்வாகத்துக்கே நல்லதல்ல என்ற காரணத்தாலும் அதை ஏற்கவில்லை.

கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1974-ம் 1975-ம் முதன் முறையாக கோட்டை நோக்கி ஊர்வலமாகச் சென்ற போதும் பின்னர் கோட்டை முன் உண்ணாவிரதம் என்று அறிவித்த போதும் மனத்தாங்கலோடு இருந்தாரே தவிர. இந்த சங்கத்தை உடைக்க ஒரு போட்டி சங்கத்தை நிறுவ முன் வரவில்லை.

ஆனால் 1978-ம் ஆண்டில் அப்போதிருந்த அரசாங்கம் நம்முடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண மறுத்ததோடு பேச்சு வார்த்தை நடத்தவும் முன் வராததால், ஒரு வேலை நிறுத்தப்போராட்டம் வெடித்த போதும், பேச்சு வார்த்தை நடத்த முன் வராதது மட்டுமின்றி ஒரு பொம்மைச் சங்கத்தை உண்டாக்கி அவர்களோடும் பேசி முடிவெடுக்க வேண்டும் என்று கூறும் அளவுக்கு முதலமைச்சர் அவர்களின் சங்க விரோதப் போக்கினை பார்த்து 3 லட்சம் அரசு ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்ட காலங்களில் நமது ஊழியர்களைத் தாக்கினாலும் சட்டமன்றத்தில் பிரச்சனை எழுப்பப்பட்டபோது எதிர்கட்சி தலைவர் என். ஜி. ஓ. க்களுக்கும் நண்பர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று கூறியதும். சட்டசபையிலேயே கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்திரா காங்கிரஸ், ஜனதா, முஸ்லீம் லீக் முதலிய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நமக்காக சட்டசபையிலே வாதாடியதாலும், தொழிற்சங்க வாதிகளின்

ஆதரவும், மத்திய அரசாங்க ஊழியர்களின் சங்கங்கள், வங்கி, எல். ஐ. சி. ஊழியர்கள் முதலிய அனைத்துத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவும் இருந்த காரணத்தால் இந்த அரசின் ஊழியர் விரோதப்போக்கினையும். ஊழியர்களை பிளவுபடுத்த போட்டிச் சங்கம் அமைத்ததையும் கண்டு உள்ளம் தளராமல் உறுதியோடு இருப்பது மட்டுமன்றி 1979-ம் ஆண்டிலும் பல போரட்டங்களை நடத்தி எண்ணற்ற ஊழியர்களை சிறைக்கு அனுப்பி தயாகங்கள் பல செய்து போராட்ட உணர்வுகளை இந்தச் சங்கம் வளர்த்துக் கொண்டது.

பல்வேறு அரசியல் கருத்துக்களை உடையவர்கள் இந்த. ஒன்றியத்தில் இருந்தாலும் பாரம்பரியம் மிக்க இந்த ஒன்றியத்தில் சங்க உணர்வோடு அலுவலர்களின் நலனையே பிரதானமாக வைத்து, விட்டுக்கொடுக்காமல் தியாகங்களைச் செய்யத் தயங்காமலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள். கடைநிலை ஊழியர்கள், ஊர்தி ஓட்டுனர், சுகாதாரப் பணியாளர்கள், ஊராட்சி-மாநகாராட்சி ஊழியர்கள் முதலிய அரசு கஜானாவில் சம்பளம் வாங்கும் அத்தனை பகுதி ஊழியர்களையும் ஒரே அணியில் திரட்டி ஒரு ஒன்று பட்ட போராட்டத்தை நடத்தும் திறனும் உறுதியும் படைத்த கூட்டமைப்புப் போன்று இயங்கும் தன்மையுடையதாக இருபபதால்தான் இவ்வளவு கடுமையான ஊழியர் விரோத அரசாங்கத்தன் முன் நமது கொடியை தூக்கிப் பிடிதது நிற்க முடிகிறது.

விவசாயிகள் சங்கத்தைப் பிளவுபடுத்தியதைப்போல், டி. ஐ, சைக்கிள்ஸ்-ல் பிளவு உண்டாக்கியதைப் போல. கிராம அதிகாரிகளிடையே கூட பிரிவு மனப்பான்மையை சிருஷ்டித்தது போலவேதான் இந்த அரசு நமது ஒன்றியத்தைச் சேர்ந்த பல உறுபபினர்களையும் பிரித்துப் பிளவு படுத்த போட்டிச் சங்கத்தை உண்டாக்குவதையும், தமிழகத்தின் வர்க்க பேதமுள்ள தொழிலாளர்களின் ஆதரவு இருக்கின்ற காரணத்தால் நம்மால் நிமிர்ந்து நிற்க முடிந்தது.

இந்நிலையில், சங்கத்தில் ஈடுபாடுடைய முன்னனிக் தோழர்கள் சில கால கட்டங்களில் விலகி இருந்தவர்களையும் நாம் அனைத்துக் கொண்டிருப்பதுடன் இன்னும் சற்று விலகி இருப்பவர்களையும் ஊழியர் விரோத சக்திகளை உதிர்த்துப் போராடுவதற்காக நம்முடைய அணியில் வந்து சேரும்படியும், இதை ஒரு நல்ல தொழிற்சங்கமாக போர்ந்திறமிக்க உறுதியான அமைப்பாக ஆக்க அதில் அங்கம் கொள்ளுமாறும் இந்த மாநாடு தோழமையுணர்வுடன் அழைக்கிறது.

அதே நேரத்தில், தொழிற் சங்க உணர்வுகளை மதித்து அரசு ஊழியர்களுடன் பிரச்சினைகளைப் பற்றி பேச்சு வார்த்தை நடத்தி பாரம்பரியம் மிக்க இந்த ஒன்றியத்துக்கு போட்டி சங்கங்கள் அமைப்பதை ஆதரிபபதை விட்டு விட்டு, போராட்டங்களை தவிர்க்கவும், கசப்புணர்ச்சிகள் வராதவாறும், கோரிக்கைகளின் தன்மையை வைத்து முடிவெடுக்கும்படியும் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

# Govt Proved Wrong

**Kasmir Times**

The State Government's dramatic act of releasing one of the two D A instalments, so far unduly with held by it, and its loud promise to sympathetically consider other demands also. only a day before the employees were to observe a day's token stike, was not likely to humour the non-gazetted government employees, and it did't, but it did prove the efficacy of trade union stuggles, as means to compel the authorities to see reason. Government's propaganda, through all the media at its command, that "representatives" of some non existent employees's body had called off the strike in view of such assurances had only proved a trite ploy, the authorities use as a saving grace, in their similar predica- ment. The complete stop-work one day stike on 8th January, in offices, schools and other government institutions, throughout the State, and massive demon- strations at a number of places, proved the calculations of the Government wrong beyond any shadow of doubt. That strike was successful despite several repressive measures adopted by the Government to disrupt it, including intimidation through police and arrests of some employeees' leaders and frantic search for those who went underground, further belied its claim that it had won over the employees after granting them certain concessions. The puppet organisation it tried to make use of proved a poor substitute for the representative organisation led by Mr. Abdul Majid Khan.

If the Government has released an instalment of D A, it can hardly claim any credit for it. since it was obvious to all and sundry that the imminent token strike was at the back of this delayed action on its part. The stalemate on two other major issues i. e. completi n of Pay Commission's report and reinstatement of dismissed leaders of Employees Federation, still continues. Government's plan to bring about radical changes in Service Rules to impose its arbitrary decisions in matters of recruitment, in utter disregard of seniority of departmental cadre, has greatly piqued the old hands who look for a better future through departmental promotions. Apart from these burning issues, there are various day to-day problems that need solution. But, above all, it is the anti-employees attitude of the Government that is the major stumbling block in the way of amicable solution. The Governmet" should thank its own arrogance for growing hostility and resistence of the employees.

"EDITORIAL" Dt, 9-1-81.

**O. P. SHARMA,**
Ist P.A. to Minister
Tel. No. 372475.

MINISTER OF STATE, HOME
INDIA
NEW DELHI
Dated: 29—1—81

Dear Shri Ebenezer,

Thank you for your letter dated 24 January, 1981 inviting my Minister Shri yogendra Makwana on the 48 th Annual State Conference of Tamilnadu Govt. Officials Union on 7th and 8th February 1981 at Madras. As my Minister will be on tour on those days, he regrets his inability to attend the conference, however he sends his good wishes for the success of the same.

With regards,

Yours sincerely,
O. P. SHARMA

---

*P. V. KRISHNAMOORTHY,*
Special Assistant to Minister
of Petroleum, Chemicals & Fertilizers

GOVERNMENT OF INDIA,
NEW DELHI.
January 29, 1981

Dear Sir,

I am desired to acknowledge your letter of 24 th January, 1981. The Minister will be outside India till the 8 th February and is unable to accept your invitation to attend the 48th Annual State Conference of your Union. However, the Minister has desired me to convey his very warm wishes for the success of your Conference.

Yours faithfully,
(P. V. KRISHNAMOORTHY)

---

**AUROBINDA GHOSE,**
General Secretary.

CALCUTTA
4-2-8.

wish conference grand success convey warm geetings to delegates

AUROBINDA GHOSE.
General Secretary,
All India State Govt. Employees Federation

---

*ABDUL MAJEETKHAN*

*JAMMU*

Wishing the Function Every Success

ABDULMAJEETH KHAN,
JAMMU KASHMIR
GOVT. EMPLOYEES FEDERATION,

## ஒற்றுமை காப்போம்.

வெள்ளைக் 'காலர்' தோழர்களே,
உள்ள நிலைமை புரிகிறதா?
உள்ளம் திறந்து சொல்லுகிறேன்,
உங்கள் தீர்ப்பைச் சொல்லிடுவீர்!

ஓயா துழைக்கும் கடிகாரம்,
ஒருநாள் நிற்கும் பழுதாகி
பின்னால் ஓடும் சரியாகி,
கண்ணால் காணும் உண்மையிது!

நாளும் உழைத்துப் பழுதாகி
நாடி நரம்புகள் தளர்வாகி
நாமும் ஓய்வோம் வயதாகி
நடமாடும் உயிர்ப் பிணமாகி!


நம்மால் ஆகா தெதுவுண்டு?
நம்மை யல்லா தெதுவுண்டு?
இன்பம் என்றும் கண்டதுண்டா?
இன்னல் தவிர வேறுண்டா?

இருந்தும் நம்மில் குறையென்ன?
என்றே கொஞ்சம் சிந்திப்போம்,
இன்றே அதனைப் போக்கிடவே,
ஒன்ருய்க் கூடி முடிவெடுப்போம்.

ஒற்றை ஒற்றைக் குச்சிகளாய்
ஒற்றுமை யின்றி இருப்பதனால்
பிரித்து முறிக்கப் பார்க்கின்ருர்
பிளவு படுத்த நினைக்கின்ருர்.

அத்தனை குச்சியும் ஒன்ருகி
அருமையான தொரு கட்டாகி
அழுத்தமாக நாம் இணைந்திருப்போம்
அசைக்க முடியுமா பார்த்திடுவோம்!

(ஆக்கியோன்)
**K. T. ராஜகோபாலன்**
துணை வட்டாட்சியர் & செயற்குழு உறுப்பினர்
ஆலங்குடி வட்டக்கிளை புதுக்கோட்டை மாவட்டம்



## கருவூலத்துறை ஊழியர் அமைப்புகளின் எதிர்காலம்

**இர. நவநீதகிருஷ்ணன்**
[மாநில அமைப்புச்செயலர்]

தமிழ்நாடு அரசு அலுவலர் இயக்கத்தில் முன்னிடம் வகிக்கின்ற துறைகளுள் ஒன்று கருவூலக் கணக்குத்துறை என். ஜி. ஓ. இயக்கத்தின் எந்தப் போராட்டமானாலும் முதல் வரிசையில் நிற்பதற்கு கருவூலததுறை ஊழியர்கள் பின்வாங்க மாட்டார்கள். அத்தகைய ஒரு அமைப்பை கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நடைபெற்ற போராட்டத்தின்போது சீர்குலைக்க அதிகாரவர்க்கம் முயற்சித்திருக்கிறது. அந்த அதிகாரவர்க்கம் இன்று தற்காலிக வெற்றி பெற்றிருக்கலாம். ஆனல் யதேச்சதிகார சக்திகளின் தற்காலிக வெற்றி என்றும் நிலைத்ததில்லை.

—1978 என். ஜி. ஓ. வேலைநிறுத்தத்தின்போது வேலை நிறுத்த நாட்களை எவ்வாறு ஆணையிட்டார்களோ
1979ல் காவல்துறையில் வேலைநிறுத்தநாட்கள் எப்படிக் கணக்கெடுக்கப்பட்டதோ

—பின்னர் தலைமைச்செயலக போராட்டத்தின்போது 1980ல் எவ்வாறு உத்திரவிடப் பட்டதோ அதற்கெல்லாம் மாருக கருவூலத்துறை ஊழியர் போராட்டத்தில் மட்டும் கடுமையான நிலை எடுக்கபெறக்காரணம் என்ன என்று நல்லவர்களே கட்கிருர்கள். தாயினும் சாலப்பரிந்தூட்டி அன்பு காட்ட வேண்டிய முதலமைச்சர் இவர்களை மாத்திரம் மாற்ருந்தாய் மனப்பான்மையோடு கருதுவது ஏன் என்பது எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இது கருவூலத்துறையோடு முடிந்துவிடவில்லை என்பது அண்மையில் பிறப்பிக்கப் பட்ட அவசரச்சட்டத்தின் மூலம் உணர்த்தப்படுகிறது.

கருவூலத்துறையில் சம்பளமில்லாமல் மூவாயிரம் ஊழியர்கள் கண்ணீர் வடித்ததோடு நிலைமை அமைதியாகயில்லை. நூற்றுக்கணக்கானவர்களுக்கு மாற்றுதல் உத்தரவு ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்க்கு குற்றபபத்திரிக்கை! பலபேருக்கு வேலை இழக்கும் அபாயம்! சிலர் மீது பொய் வழக்குகள்!

இம் என்ருல் சிறைவாசம்! அம் என்ருல் வனவாசம்! என சொல்லுவார்களே அதுபோல சித்ரவதைக் கொடுமைகள் தொடர்கதையாகின்றன. கருவூலத்துறை ஊழியர் அமைப்புகளை சீர்குலைக்கும் இந்த முயற்சியில் அதிகார வர்க்கம் வெற்றி பெருமல் தடுக்க நமது மாநாடு முடிந்த உடன் எல்லா அமைப்புகளும் ஒன்று கூட வேண்டும். நிச்சயம் அருமைச் சகோதரர்கள் இந்த உணர்வுகளைப் புரிந்து கொள்வார்கள், துணைசெய்வார்கள் முன்னணியில் நிற்பார்கள் என்று நம்புகிறேன்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அணுகுண்டு வீசப்பட்டு மண்ணேடு மண்ணுக தகர்த்தெறியப்பட்ட நாடுதான் ஜப்பான். ஆனல் அழித்து ஒழிக்கப்பட்ட, மிதித்துத் துவைக்கப்பட்ட அந்த நாடு 15; 20 ஆண்டுகளில் துள்ளியெழுந்து, தோள்தட்டி உலகிலேயே மிகச் சிறந்த உன்னத நாடாக தொழில்மயத்தில் அமெரிக்காவுக்குப் போட்டியிடும் அற்புதநாடாக விளங்கியது விளங்குகிறது.

எனவே கருவூலத்துறையின் சங்கங்களை-வர்க்க உணர்வை-ஊழியர் ஒற்றுமையை அடக்கி ஒடுக்கி விட்டதாக யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம் என்று அன்போடு ஆனல் உறுதியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

EXTRACTS FROM THE SPEECH OF

# Dr. A. Ramasami Muthalyar D.C.L. (Oxon)

Vice-Chancellor, Travancore University

(Published in MADRAS PUBLIC SERVANT of January, 1955)

I have often wondered what is the difference in the work, which a superintendent does as a 'Non-Gazetted Officer' and the work, which the Under-Secretary or a Deputy Secretary of a Government does, I have gone through thousands of files of the State Governments and Central Governments and my experience is that an Upper Division Clerk and the Superintendent not only examine all the precedents, not only put up facts but give sufficient notes and even lead to the conclusion, where the examination of the file leads in. And how often have I found merely the initials of the Under Secretary (Applause), the Deputy Secretary and even the Secretary.


Mr. President there was a time, when the servants of the Centra Government in every State had the same salaries, the same scales and the same allowances as the servants of Local State. That was a logical arrangement. That was an arrangement which was according to the needs of the people in that area. I am not complaining of the rise in the salary of the Central Government. I do not want it to be brought down. But that disparity as you described, Mr. President, seems to me a very great injustice. I am not an irresponsible speaker, gentlemen, and I do not want to make any embarrassment With reserve and doeration, I suggest to the authorities in this State that at least the dearness allowance should be brought into to the same line and in the same scale as that of the Central Government and that the question of revising the pay so that it may have parity with the Central Government servants, may be examined leisurely.

You have yourselves used the phrase middle-class, and I take courage to repeat that phrase middle-class, at a time, when people talk of a classless society, which exists nowhere in the world. There are associations and associations which agitate for the workers. There are members of Parliament who repeatedly agitate for workers, the industrial labour, the plantation labour and the agricultural labour. I wish them joy of their agitation. I wish them succes in all their legitimate demands. But may I add, that in presenting the legitimate demands for the works, in so far as their emoluments are concerned, so far as their allowances based on the standard of living are concerned, while I wish them all success, I trust that these leaders will also remember the maxim that "the workers must be worthy of his hire that he must do the work that expected of him"; that he must turn out that amount of work which he was doing in the past and everybody will then agree that his emoluments and wages should be comparable to what will make him to lead a decent life, a life free from anxieties. How often have you heard any speaker talk of your conditions, of the dreadful disparity that sets on you and of the fact that your unable to train your children properly and of the meagre income on which you have to subsist. The politicians who are running the Government to day must, under the present conditions, provide for those conditions. The value of the middle class has not been appreciated. If there is one thing that is clear to me, one change that is noticeable, it is that, after independence, the middle class are ignored or their existence completely neglected (Hear, hear) (renewed cheers.) That is what independence has brought about (Applause). It is tragedy as I said of the fisrt magnitude. Other countries have realised the value of the middle class.

I know that every-thing is a question of finance. But I know also that crores and crores of rupees have been poured down the bottomless pit, in various directions (applause) by State Governments and Central Government: non-withstanding the very censorious activities of Members of Parliment, notwithstanding the Estimate Committees and Public Accounts Committee and not-withstanding the various agencies that have been created, these wastages are going on to-day. I shall not describe any one of them, because in this audience, and from this platform, I am not to criticise any Government. I am only trying to point out that there are resources in the Government, which can be more usefully given effect to, so that the nation will be really strong.

There is one aspect of a civil servant's life which you, Sir. Somehow or other, have not touched upon. I refer to the question of retrenchment of the Civil servants, and the throwing out of employment of hundreds of thousands of people, who have put in 10 or 12 or 15 years of service in the State or Central Governments. When you look at labour conditions, when you read the speeches of the leaders of labour, when you read the Govt. reports and Members of Parliment, regarding retrenchment you realise that Government is not prepared to allow retrenchment of workers in any of the private employment agencies, or in any industrial concern. They are to plead their justification for it to satisfy the Government, that certain things will be done for the retrenched. Even if labour is surplus, the Labour Commissioner comes in and says "we

shall not allow retrenchment" I agree. A man who has been working cannot be thrown on the street; his family cannot be left to find for itself without his earnings, being available to them. I agree, therefore, that any proposals regarding retrenchment of workers in future be examined and some kind of gratuity be paid. But the Governments, both centre and States which are so conscientious in this matter, which decline to retrench employees and force private employers to keep them on, even if they are not wanted, what is their attitude to their own civil servents, I ask you? (applanse). Notices offering one mouth's salary in lieu are given to perons who have put in 10 or 12 or 15 years service. Why should the Government's attitude be so incousistent with regard to two matters, in one of which, it has no financial or administrative responsibilities and has both in the other. This was not contemplated or made possible even in earlier days. I remember, a very few occasions when such retrenchment was thought of. I remember, when I was in the Government of India, there was retrenchment in 1945 in the supplies Department thousands of people came and surrounded my house. I pleaded with the Secretaries of various departments to absorb practically all of them. I was not allowed to attend the U. N. O till the problem was solved.





# இனியொரு விதி செய்வோம்

எபபேசர் பொதுச் செயலாளர்

நம்மை பல்லாண்டு காலமாக ஆண்டு "கொண்டிருந்த" வெள்ளைக்காரர்களுடைய அரசியல் சட்டதைப் பின்பற்றியே இந்தியாவின் அரசியல் சட்டமும் அமைக்கப்பட்டது. எனவே நமது அரசியல சட்டத்தில், முதலாளிதுவத்தின் மிச்ச சொச்சங்களும், ஏகாதிபத்திய அம்சங்களும் மலிந்திருந்தன. அவை ஒரு சோஷலிச பாதையில் முன்னேற விடாமல் நாட்டின் முன்னேற்றத்தையே தடுத்துக்கொண்டிருந்தன. எப்போதெல்லாம் அந்த சட்டம் நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறுக்கே நின்றதோ அப்போதெல்லாம் பாராளுமன்றம் அதைதிருத்தியது ஏறத்தாழ 30 தடவைகள் அரசியல் சட்டம் திருத்தப் பட்டது.

நம்முடைய சங்கம் 1920ல் பிறந்தது. இந்த 60 ஆண்டு காலத்தில், குறிப்பாக நாடு விடுதலை அடைந்தற்குப் பிறகு பல முறை சட்டதிட்ட விதிகள் திருத்தப்பட்டுள்ளன. ஒரே ஒரு சட்டதிட்ட விதி புத்தகத்தை மாநில தலைவர் சட்டைப்பையில் வைத்துக் கொண்டு மாநில மாநாட்டில் பிரச்சனைகள் எழும்போதுமட்டும் அதை எடுத்துப் படித்துக் காட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். இன்றோ, சட்டதிட்ட விதிகளை புத்தக வடிவில் அச்சடித்து ஒரு ரூபாய்க்கு கேட்டவர்களுக்கெல்லாம் விற்றுக் கொண்டிருக்கிறோம்.

மேற்கு வங்கத்தில் வெள்ளைக்காரன் காலத்து ஒழுங்கு விதிகள் கிழித்தெரியப்பட்டு, ஜனநாயக முறையில் புதிய விதி முறைக்ள் வகுக்கப்பட்டன. கேரளத்திலும், அரசு ஊழியர்களுக்கு தொழிற்சங்க ரீதியில் ஒழுங்கு விதிகள் மாற்றப்பட்டன. மத்திய அரசாங்க ஊழியர்களைப்போல மேற்கு வங்கம், கேரளம் முதலிய மாநிலங்களைப் போல சம்பள விகிதங்களையும், இதர சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று நாம் கேட்டு வருகிறோம்.

அதே நேரத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கைகள் வெற்றிபெற பின்பற்றிய வழி முறைகளையும் பின்பற்ற வேண்டும் என்று 1958 முதல் நம்முடைய தோழர்கள் குரல் கொடுத்து வந்தனர் அந்த வழிகளை பின்பற்றிய முன்பெல்லாம் அறைவட்டிற்குள்ளேயே ஆடிக்கொண்டு இருந்த நாம் அம்பலத்திற்கு வந்தோம். தீர்மானங்கள் மட்டும் பேசுவதைவிட்டு செயலில் இறங்கினோம். கோரிக்கைகளுக்காக வெள்ளிக்கிழமை தோறும் சாமிகும்பிட வேண்டும் என்று தீர்மானித்த காலம் போய் கோட்டை நோக்கி ஊர்வலம் செல்லுகிறோம், தர்ணா செய்கிறோம், தடையை மீறுகிறோம் சிறை செல்கிறோம்.

இந்நிலையில் மத்திய அரசாங்க ஊழியர்களும் மேற்கு வங்கம், கேரளம் முதலிய இதர மாநில அரசு ஊழியர்களும் சங்கங்களை எப்படிக் கட்டி வளர்க்கிறார்கள். எல்லா பிரிவினரையும் ஒன்று சேர்க்கும் அளவுக்கு போட்டா போட்டிகளும், கசப்புணர்ச்சியும் குறைய அவர்கள் சட்ட திட்ட விதிகளை எப்படி ஜனநாயக தொழிற்சங்க வழிகளில் மாற்றியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

அனைத்திந்திய மாநில அரசு ஊழியர்களின் கூட்டமைப்பில் நான் அடிக்கடி கலந்து கொள்ள வாய்ப்புக்கிடைத்ததால் பிற மாநிலஅலுவலர்கள் சங்கத்தின்சட்டதிட்டவிதிகளை படிக்க முடிந்தது. ஒருசில அம்சங்களை மட்டும் உங்கள் முன் வைக்கிறேன்.

ஒரிசாவில் மாநில சங்கம் நிர்வாகப் பொருப்பில் ஒரு செயலகம் இருக்கிறது. அதற்கு ஒரு தலைவர் நான்கு துணைத் தலைவர்கள் ஒரு பொதுச்செயலாளர், ஆறு செயலாளர்கள் என மாநில நிர்வாகிகள் 12 பேர்.

தேர்தல் மாநில மாநாட்டில் நடைபெறும் மாநாட்டுக்குப் பிரதி நிதிகள் எத்தனை பேர் என்பதையும் எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு உள்ள மாநிலக்குழு தீர்மானிக்கும்.

## மேற்கு வங்கத்தில் :

சங்கத்தின் மாநில நிர்வாகப் பொறுபபில் ஒரு தலைவர் இரண்டு துணைத் தலைவர்கள் ஒரு செயலாளர் ஒரு இணைப்புச் செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு கணக்கர் (அக்கௌன்டண்ட்) என 7 பேர்கள் உளர்.

நிர்வாகிகள் மத்திய செயற்குழு உறுப்பினர்களினின்றும், மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவர். பொருளாளரும், கணக்கரும் மட்டும் மத்திய செயற்குழுவிலேயே தேர்ந்தெடுக்கப்படுவர்.

## தேர்தல் முறை :

மாநில சங்கத்தில் பல இணைப்பு சங்கங்கள் உள. மாவட்ட இணைப்பு குழுக்களும் உண்டு. ஒவ்வொரு இணைப்பு சங்கமும் மாநில மாநாட்டிற்கு 7 பிரதிநிதிகளை அனுப்புகிறது. மாவட்ட இணைப்பு குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனைக் கோட்டங்கள் உளவோ அந்த எண்ணிக்கையுடன் கூடுதலாக இரண்டு பேரை பிரதிநிதிகளாக அனுப்புகிறது. இந்தப் பிரதிநிதிகள்தாம் மாநாட்டில் நிர்வாகிகளை தேர்தெடுக்கின்றனர். மாநாட்டில் பிரதிநிதிக்ளுக்கு சட்டதிட்ட விதிகளை திருத்தும் உரிமையும் உண்டு.

பதவி காலம் முடிந்து விலகும் மத்திய குழு உறுப்பினர்கள, பதவி தழிப்பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வர்.

## தந்தி இன்ஜினீரிங் ஊழியர் சங்கம் (மத்திய அரசு) NUTEE III

ஓய்வு பெற்றவர்களும் உறுப்பினர்களாக இருக்கலாம்.

எந்த உறுப்பினரும் 3 மாதங்கள் தொடர்ந்து உறுப்பினராக இல்லாதிருந்தால், உறுப்பினராகக் கருதப்படமாட்டார். ஒருவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ந்து உறுப்பினராக இருந்தால்தான், நிர்வாகிகள் தேர்தல் போட்டியிடலாம்.

## ஓட்டுரிமை

கிளைகளினின்றும் விகிதாச்சார சந்தா எத்தனை பேருக்கு வந்திருக்கிறதோ அந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரதிநிதிகள் எண்ணிக்கை இருக்கும். அவர்கள் மட்டுமே மாநாட்டில் வாக்களிப்பர்.

## சங்க உடைமைகள்

சங்க சொத்துகள், ஆவணங்கள், கணக்குகள் இவற்றை புதிய நிர்வாகிகளுக்கு பழைய நிர்வாகிகள் ஒப்படைக்காவிட்டால், அவர்கள் பணிபுரியும் துறைத்தலைவருக்கு எழுதி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## வாக்கெடுப்பு

பொதுவாக கை. உயர்த்துவதன் மூலமே இருக்கும். உறுப்பினர்கள் வற்புறுத்தினால் இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும்.

## தேர்தல் :

கூட்டமைப்பின் தேர்தல் அனைத்திந்திய மாநாட்டில் நடைபெறும், சட்டதிட்ட விதிகளைத் திருத்தும் அதிகாரமும் இம்மாநாட்டிற்கே உண்டு.

## தந்தி தபால் ஊழியர் சங்கம் : NFPTE (மத்திய அச்சகம்)

C.H.Q. மத்திய தலைமை நிலையத்துக்கு நிர்வாகிகளாக, ஒரு தலைவர், 4 துணைத்தலைவர்கள் (அவர்களில் ஒருவர் மகளிர்) ஒரு பொதுச் செயலாளர், 3 உதவி பொதுச் செயலாளர்கள். ஒரு பொருளாளர், ஒரு உதவிப் பொருளாளர் என 11 பேர்.

## வாக்குரிமை :

சந்தா பாக்கி இல்லாதவர்களுக்கு மட்டுமே உண்டு.

## தேர்தல் :

அனைத்திந்திய மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரப்படி பிரதிநிதிகள் கூடி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். எத்தனை பேருக்கு எத்தனை பிரதிநிதி என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

## கேரள மாநிலத்தில் :

தமிழகத்தைப் போலவே மாவட்ட வட்ட அலகுகள் இருக்கின்றன. வட்டக் கிளைகள் 50க்கு 1 என்ற விகிதத்தில் ஒரு மாவட்ட பெருங்குழு (District Council) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும்.

இந்த மாவட்ட பெருங்குழு உறுப்பினர்கள் 150-க்கு ஒருவர் என்ற கணக்கில் மாநில பெருங்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்

## மாநில நிர்வாகத்தை :

ஒரு செயலகம் கவனித்துக்கொள்ளும். மாநில பெருங்குழு உறுப்பினர்கள் கூடி ஒரு மாநிலக்குழுவை (தேர்த்தெடுக்கும். இதற்கு ஒரு தலைவர், 2 துணைத் தலைவர்கள், ஒரு பொதுச் செயலர், 2 இணைச் செயலர்கள். ஒரு பொருளாளர் மற்றும் மாநிலப் பெருங்குழுவின் முதற்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் 36 உறுப்பினர்களும் உண்டு.

மாநிலக் குழுவினின்றும் தேர்ந்தெடுக்கப்படும் 8 பேர்களையும் மேலே கூறியபடி தேர்த்தெடுக்கப்பட்ட 7 மாநில நிர்வாகிகளையும் சேர்த்து ஒரு (செக்கரட்டெரியேட்) செயலகம் இயங்குகிறது.

நம்முடைய சட்டதிட்ட விதிகளை ஜனநாயக-தொழிற் சங்க வழிகளில் மாற்றி அமைக்க வேண்டும் என்ற பெருவாரியான தோழர்களின் எண்ணங்களை மதித்து மத்திய செயற்குழு ஒரு குழுவை நியமித்தது. அதில் நானும் துணைத்தலைவர் திரு. வீரா. பழனியாண்டியும், சேலம் மாவட்டச் செயலர், இஸ்மாயிலும், செங்கை மதுரை மாவட்டத்தலைவர்கள் நாராயணனும் சிவனடியானும் உறுப்பினர்கள். இரண்டு முறை உட்குழு கூடி சில மாநிலங்களின் சட்டதிட்ட விதிகளை ஆராய்ந்துள்ளது.

முற்போக்குத் தன்மையுள்ள மகாராஷ்டிரம் போன்ற சில மாநிலங்களின் சட்டதிட்ட விதிகளையும், கர்நாடக சட்டதிட்டவிதிகளையும் ஆராய வேண்டும்,

இந்தப் பணி அநேகமாக பிப்ரவரியில் முடிந்துவிடும். இது சம்பந்தமாக கேரள மாநில என். ஜி. ஓ. சங்கத்தலைவர் திரு பத்மநாபன் எனக்கு எழுதிய கடிதத்தில் "நீங்கள் உங்கள் சங்க சட்டதிட்ட விதிகளை திருத்தும்போது, கூட்டுத் தலைமை உருவாகும்படியும் வகுப்பீர்கள்" என்று நம்புகிறேன் என்று எழுதியிருந்தார். நமது சங்கத்தில் மத்திய செயற்குழு, மாநில நிர்வாகிகளுக்கு எந்த முடிவையும் எடுக்க முழு அதிகாரத்தையும் சில சமயங்களில் கொடுத்துவிடுவதே வழக்கமாக இருந்து வருகிறது.

இதையெல்லாம் மனதிற்கொண்டு மத்திய செயற்குழுவிற்கும் குறைந்த எண்ணிக்கையுடைய ஒரு செயலகத்தை உருவாக்கி (செக்கரட்டெரியேட்) முக்கிய கட்டங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தை அந்த செயலகத்துக்கு வழங்கலாமா என்பதையும்கூட ஆராய்ந்து முடிவெடுக்கலாம்,

இனியொரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்.
ஆம். நல்ல விதிமுறைகளைச் செய்து முடிப்போம். நம்பிக்கையோடு இருங்கள்.

சங்கங்களை - நல்ல

சங்கங்களை அந்தச் சட்டதிட்டங்களை

மூச்சனவே காக்க' என்ற புரட்சிக் கவிஞர் வாக்கிற்கிணங்க_நல்ல சங்கத்தின் நல்ல சட்ட திட்டதிட்டங்களை நல்ல முறையில் உருவாக்குவோம். உருவாக்கிய சட்ட திட்டங்களை மூச்செனக் காப்போம்!



# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை-5.

(7—2—81)

## பிரதிநிதிகள் மாநாடு

தலைவர் உரை :

வீரா. பழனியாண்டி, பி.ஏ.,
மாநிலத் துணைத்தலைவர்.

அன்பார்ந்த நண்பர்களே—பெரியோர்களே! தாய்மார்களே!!

இன்றைய தினம் ஈரோடும் சிறப்போடும் நடைபெறுகிற 48-வது மாநில மாநாட்டில் பிரதிநிதிகள் மாநாட்டிற்கு தலைமை தாங்க பணித்த மாநிலத் தலைவர் அவர்கட்கு எனது உளம்கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

20 தலைப்புகளுக்குமேல் இங்கு பேசப்படவிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து இதில் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்திருக்கிறீர்கள். எனவே கருத்து மழை—கோரிக்கை மழை இங்கு பொழியவிருக்கிறது கேட்டு பயனடைய அன்புடன் வேண்டுகிறேன்

நீண்டகாலமாக கேட்டு வருகின்ற தொழிற்சங்க உரிமை, அரசியல் உரிமை. ஓய்வு பெறுகிறவர்களுக்கு ரூபாய் 10,000/- தேர்வு நிலைக்கு ஒரு ஆண்டு ஊதிய உயர்வு, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் போனஸ், தேசிய ஊதியக் கொள்கை இவைகளைப்பற்றியெல்லாம் கருத்துரை வழங்க இருக்கிறார்கள் நமது நண்பர்கள்.

நானும் ஒரு சில கருத்துக்களை எடுத்துவைப்பது எனது கடமை எனக் கருதுகிறேன். மருத்துவத் துறையில் அமைச்சுப் பணியாளர்களுக்கு பல ஆண்டுகளாகப் பதவி உயர்வே இல்லை என்கிற நிலைமை. நமது சங்க முயற்சியால் O & M Cell பரிந்துரைகளின்பேரில், வேலை நிறுத்தப் போராட்டத்திற்குப் பிறகு சில பதவிகள். உருவாக்கப்பட்டன. அது கண்காணிப்பாளர் பதவிவரைதான். நிர்வாக அலுவலர் பதவிகள், துணை இயக்குநர் (நிர்வாகம்) ஆகியப் பதவிகளை வேறு துறையினர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதைக் கண்டித்து தமிழ் நாடு சிவில் சர்வீஸ் ஜாயிண்ட் கவுன்சிலில் பல ஆண்டுகள் போராடினோம். இனி துறையிலுள்ளவர்களுக்கே வாய்ப்பு அளிக்கப்படும் என உறுதி அளித்தனர். ஆனால் இன்றுவரை அமைச்சுப் பணியாளர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே வேறு துறையினரை வெளியேற்ற வேண்டும். இதனை தமிழக அரசு மருத்துவத்துறை அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி உடனே செய்யவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கல்வித் துறையில் A பிரிவினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. A பிரிவில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்கள் நலன் காக்கப்படவேண்டும் என்பதில் நமது சங்கம் விழிப்பாக இருக்கிறது. அவர்களது கோரிக்கை, முதுநிலை பட்டியலில் அவர்களுக்கு கொடுக்கப்படும், சரியான இடம் ஆகியவை குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வரவேண்டும்.

மருத்துவத் துறையில் பணியாற்றும் செவிலிய உதவியாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகள், சமையல் பணியாளர்களின் கோரிக்கைகள் உடனடியாக தீர்க்கப்பட அரசு முன்வரவேண்டும்.

தமிழ்நாடு போக்குவரத்துப் பணியாளர்கள் நீண்ட நாட்களாகக் கீழ்க்கண்ட கோரிக்கையை வைத்துள்ளனர் போக்குவரத்துத் துறையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (Regional Transport Officer) பதவி உயர்வுக்கான விகிதாச்சாரம் முன்பு அலுவலகக் கண்காணிப்பாளர்களுக்கும், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கும் சரிசமமாக இருந்தது. கடந்த இருபது ஆண்டுகளுக்குமேல் இருந்துவந்த நிலைமையை அரசு ஆணை எண்: 1461, உள்துறை நாள் 26—6—78ல் அலுவலகக் கண்காணிப்பாளர்களுக்கு ஒன்றும், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு நான்கும் என்று மாற்றி விகிதாச்சாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் இரு பிரிவினர்களுக்கும் சரிசமமாக பதவி உயர்வு கிடைக்க ஆவன செய்ய அரசு முன்வரவேண்டும். 1461 அரசு ஆணையைத் திரும்பப்பெற வேண்டும் என தமிழக அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடித்தளத்தில் பணியாற்றுகின்ற பதிவறை எழுத்தர்களுக்கு பதவி உயர்வு இல்லை. அவர்கள் சம்பளமோ மிகமிகக் குறைவு. இந்த அவலநிலையைப் போக்க பதிவறை எழுத்தர்கள் 5 ஆண்டு பணி முடித்தவுடன் இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்படவேண்டும். பதிவறை எழுத்தர்களுக்கு பதவி உயர்வு கொடுத்ததுபோக மீதம் உள்ள இடத்தில்தான் இளநிலை உதவியாளர்களை நேரடி நியமனத்தில் நியமிக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசை அன்புடன் வேண்டுகிறேன்.


10 ஆண்டுகளுக்குப் பிறகே பல துறைகளில் உதவியாளர் பதவிக்கு இளநிலை உதவியாளர்கள் உயர்த்தப்படுகிறார்கள். உதவியாளர்களாகப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றிய பிறகும் பல துறைகளில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பில்லை. எனவே உதவியாளர்கள் அடிப்படைச் சம்பளத்தை ரூ. 450/- ஆக உயர்த்த வேண்டும். தேர்வுநிலை பெறும் உதவியாளர்களுக்கு ரூ 525/- அடிப்படை சம்பளம் வழங்கப் படவேண்டும் எனவும் அல்லது 15 ஆண்டுகள் உதவியாளர்களாகப் பணியாற்றிய அனைத்து உதவியாளர்களையும் அடுத்தப் பதவியான கண்காணிப்பாளர் பதவிக்கு மேலுயர்த்தம் செய்ய வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு மானியம் பெறுகின்ற மாவட்ட குடும்பநலத் திட்டச் செயலகங்களில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு வேலை மிகமிக அதிகம். அங்கு நான்கே உதவியாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஒரு இளநிலை உதவியாளர்கூட கிடையாது. சுமார் 700 பேர்கள் ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகிறார்கள். எனவே அதிக அமைச்சுப் பணியாளர்கள் நியமிக்க O & M Cell பரிந்துரைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மறுவாழ்வு இல்லங்களில் உள்ள நிர்வாக அலுவலர்கள் பதவிகளில் வேறு துறையினர் பணியாற்றி வருகின்றனர். அவர்களை உடனடியாக விடுவித்து மருத்துவத் துறையிலுள்ள நிர்வாகச் செயலாளர்களை அப்பதவிக்கு நியமிக்க வேண்டுகிறேன். அதேபோல மாவட்ட குடும்பநலச் செயலகங்களில் உள்ள நிர்வாக அலுவலர்கள் பதவிக்கு மருத்துவ துறையிலுள்ள நிர்வாகச் செயலாளர்களை நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்,

சேந்தன் பிரிண்டர்ஸ், சென்னை-5.



**7—2—81 அன்று பெரியார் திடலில் நடைபெற்ற 48 வது மாநில மாநாட்டு பிரதிநிதிகள் மாநாட்டிற்கு வருகை தந்த பிரதிநிதிகளுக்கு**

**ப. கண்ணப்பன் ஆற்றிய**

# வரவேற்புரை

அன்புள்ள பிரதிநிதிகள் மாநாட்டு தலைவர் அவர்களே!
எங்கள் இதய தெய்வமாம் மாநிலத் தலைவர் அவர்களே!

மாநில நிர்வாகிகளே! மாவட்ட நிர்வாகிகளே! வட்டக்கிளை பொறுப்பாளர்களே! இணைப்பு சங்க நிர்வாகிகளே! தோழமை சங்கப் பொறுப்பாளர்களே! அன்பார்ந்த அரசு ஊழியர் சகோதர, சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகிறேன். நடைபெறுகின்ற 48-வது மாநில மாநாட்டிற்கு வருகைவந்த அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்; 1968-ம் ஆண்டு இதே திடலில் நம்முடைய 44-வது மாநில மாநாட்டை எண்ணி பார்க்கிறேன். அன்றைய முதல்வர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் பங்கேற்பதாகக் கூறி வருகை தராமல் போவதை நம் தலைவர்கள் எவ்வளவு கண்டித்து பேசினர்கள எண்ணி பார்க்கிறேன். ஆனால் அன்றைய சிறு சேமிப்பு துறைத்தலைவராக இருந்த மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரையையும் இன்று எண்ணி பார்க்கிறேன். 1968-ற்கும் 1981-க்கும் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள், வளர்ந்திருக்கிற வர்க்க உணர்வுகளை, நினைவு கூறுகிறேன். தலைவர் திரு. சிவ. இளங்கோ அவர்கள் தலைமைப் பொறுப்பு ஏற்ற பிறகு மாநிலம் முழுதும் முன்னை அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை போக்குகின்ற விதம் இயக்கங்களை நடத்திச் செல்கின்ற பாங்கு, தோழமை சங்கங்களுடன் நம்முடைய ஒற்றுமையை வளர்திருக்கும் தன்மை, இதர மாநில அரசு ஊழியர்களுடன் நாம் கொண்டிருக்கும் நட்பு இவைகள் எல்லாம், 1971-க்குப் பிறகு தான் என்று கூறுவதில் பெருமையடைகிறேன், பொது கோரிக்கைகளுக்கு நாம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை, பெற்று இருக்கின்ற வெற்றிகளையும் நினைவு கூறுவதில் பெருமையடைகிறேன்.

1978 மார்ச் மாதம், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படல் வேண்டும். 30 ஆண்டு காலத்திற்கு பிறகு மாபெரும் வேலை நிறுத்த போராட்டத்தை நடத்தி, வெள்ளைச் சட்டை தொழிலாளர்களாகிய நாம் நம்முடையவர்கள் உணர்வை இந்த நாட்டிற்கு எடுத்துக் காட்டினோம். காரணம் அன்றைய தினம் நம்மிடத்தில்

இருந்த இன துரோகிகளின் தொல்லைகள் ஒரு பக்கம், நம்மைக் காட்டிக் கொடுத்து கொண்டு இருந்தாலும். அரசு ஊழியர்கள் வாழ்வு மலர வேண்டும், ஓரளவுக்கு நிம்மதியாக வாழ வேண்டும். என்ற அடிப்படையில்தான் நாம் நம்முடைய கோரிக்கைகளைப் பெறுவதற்கு கடந்த காலங்கள் நம்முடைய குரலை உரக்க கூறவேண்டிய நேரத்தில் குரல் கொடுத்தும் போராட வேண்டிய நேரங்களில், போராடியும், வருகிறோம், இன்று தமிழகத்தில் பொறுப்பேற்றிருக்கிற ஆட்சியாளர் இடத்தில் நம்முடைய கோரிக்கைகள் பற்றி பலமுறை விண்ணப்பங்கள் கொடுத்து வருகிறோம், குறிப்பாக பதிவுரு எழுத்தர்கள் நிலை இன்று மிக மோசமாக உள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கிறபோது, சுமார் 100 ரூபாய்க்கு மேல் வித்தியாசம் உள்ளது. பதவி உயர்வு அளிப்பதின் முன்பு தகுதிபெற்ற அனைவருக்கும் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது பத்து விழுக்காடுகள் தான்என்கிற உத்தரவு பதிவறை எழுத்தர்களை மேலும் வேதனைக்கு உள்ளாக்கி உள்ளது. அது போல் அரசாணை 621, 1941-ம் ஆண்டில், பதிவறை எழுத்தர் 40 வயது முடித்தாலும் பதவி உயர்வு அளிக்கலாம் என்று இருந்தது. அது தற்பொழுது மறுக்கப்பட்டு வருகிறது. அதுபோல் பாலசேவிகா அங்கன்வாடி சகோதரிகள் சமுதாயத்தில் உள்ள ஏழை குழந்தைகளை, தாய்மார்களை பேணி காத்தும், முதியோர் கல்வி, குழந்தைகளை பாதுகாப்பது போன்ற மிக அத்தியாவசிய பணிகளை கிராமங்களில் செய்து நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் சேவை புரிந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் பெறும் ஊதியம் ரூபாய் 90 மற்றும் 120 மற்றும் 175 தான். இவைகள் எல்லாம் மாற்றியமைக்க வேண்டும். துணைச்செவிலியர்கள் நிலை துயரம் நிறைந்ததாக இருக்கிறது. அவர்களில் பெரும்பாலோருக்கு இன்னும் தேர்வு நிலையே வழங்கவில்லை. ரேஷன் அலவன்ஸ், சலவைக்கூலி கூட வழங்காத அவல நிலையைத் தமிழக அரசு உடன் போக்கியாக வேண்டும். மற்றும் மருத்துவ படி வழங்க வேண்டும்; என்று கடந்த 14 ஆண்டுகளாக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அறிஞரும் அண்ணா அவர்கள்முதல்வராக இருந்தபோது மருத்துவப்படி வழங்க வேண்டும் என்று கோப்புகளில் எழுதியதாக கூறப்படுகிறது; இதுபோல் தற்போது பல மாநிலங்களில் மருத்துவ படி வழங்கப்படுகிறது; குறிப்பாக ஒரிசாவில் அரசு ஊழியர்களுக்கு மருந்துவ படியாக மாதம் ரூபாய் 20 ஆக வழங்கப்படுகிறது. அத்துடன் விலையுயர்த்த மருந்துகளை பெறுதல் அதற்குரிய பணத்தை திரும்ப பெறலாம் என்ற ஆணையுள்ளது. அதுபோல வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிற மாநாடுதான் இது என்பதை நான் உங்களுக்கு கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். விடுப்பு கால பயண சலுகை. இச்சலுகைகளை மத்திய அரசு ஊழியர்களும், கர்நாடக, ஆந்திரம், மகாராட்டிரம், ஒரிசா போன்ற பல்வேறு மாநிலங்கள்' ஊழியர்களும் தற்போது அனுபவித்து வருகிறார்கள். ஏன் இங்குள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் இச்சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள். இந்த சலுகையை நமக்கும் அளிக்க வேண்டும். என்று இரண்டாவது ஊதியக்குழு பரிந்துரை செய்தும் கூட அதுவரை நமக்கு கிடைக்கவில்லை. ஆகவே இதுபோல பல்வேறு கோரிக்கை பெறுவதற்காக வாதாடுகிற மாநாடுதான், நம் கோரிக்கைகளை நிறைவேற்றுபவர்களும் நிறைவேற்றுவதற்காக வாதாடுகிற வழக்கறிஞர்களும், நம் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள். இன்று நாம் வாங்குகிற ஊதியம் நம வாழ்க்கை செலவுகளை சரிசெய்ய முடியாத நிலை இருப்பதால்தான் நாம் நமக்குரிய சலுகைகளை பெற அரசிடம் பலமுறை விண்ணப்பங்கள் கொடுத்தும் வாதாடியும் பயனளிக்காத போதுதான் நாம்போராட்டம் என்றாலும் இறுதி கட்டத்திற்கு நாம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, அரசுதான் நம்மை போராட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது என்று கூறினாலும் மிகையாகாது. ஏறி இருக்கிற விலைவாசி ஒருபுறம் பெருகி இருக்கிற வேலைப் பளு மறுபுறம். அண்டை மாநில அரசு ஊழியர்கள் பெறும் ஊதிய விகிதங்கள் வித்தியாசம் எல். ஐ. சி. ஊழியர்கள் வங்கி ஊழியர்கள், கம்பெனிகளில் பணியாற்றும் ஊழியர்கள் பெறும் ஊதிய விகிதம் சலுகைகள் இவைகளை எல்லாம் நான் எண்ணி பார்க்கிற மாநாடுதான். நம்முடைய 48வது மாநில மாநாடு. தமிழ் மக்களை பகுத்தறிவு பாதைக்கு அழைத்து சென்ற பெரியார் பெயரில் அமைந்த இந்த திடலில் நடைபெறுவது எவ்வளவு பொருத்தமானது. அதேபோல் அரசு ஊழியர்களில் உள்ள சில இன உணர்வற்றவர்கள் இனி பகுத்தறிவு பெறுவார்கள் என்றும் என்னுகிறேன்,

அரசு ஊழியர்கள் என்றால் இன்றைய சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருப்பதை கண்டு நாம் மிகவும் வேதனையடைகிறோம்; காரணம் அரசு ஊழியருக்குள்ள ஊதியம்; அத்தியாவசிய உணவு பண்டங்களின் விலைவாசி மிக வேகமாக உயர்ந்து வருவது ஒருபுறம். பணத்தின் மதிப்பு குறைந்து வருவது மறுபுறம். இதனால் வாங்கும் சக்தி அரசு ஊழியர்கள் இழந்து வருவது உண்மை. இதைத்தான் நாம் அரசிடம் வற்புறுத்தி வருகிறோம். தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற்றாக வேண்டும், அதுபோல் ஒருவர் அரசு அலுவலகத்தில் வந்தால், அவர் குறைந்தது மூன்று உயர் பதவிகளையாவது பெறவேண்டும். அதுபோல் அடித்தளத்தில் உள்ள அரசு ஊழியர்கள் நிலைமைகளை உயர்த்த வேண்டியது நம்முடைய ஒன்றியத்தின் கடமையாகும், பிற மாநில அரசு ஊழியர்கள் பெறும ஊதிய விகிதங்களை நாம் பெறுவதற்கு நாம் எத்துணை தியாகங்களையும் செய்வதற்கும், ஊழியர்களும் தயாராக இருக்க வேண்டும். இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷனில் பணியாற்றும் ஒரு அடிப்படை ஊழியர் ரூ 650/- ஊதியம் பெறுகிறார் ரிசர்வ் வங்கியில் பணியாற்றும் ஒரு காவலாளி ரூ 600/- ஊதியம் பெறுகிற போது, ஆனால் மாநில அரசு ஊழியர்களில் பதிவறை எழுத்தர் பெறும் ஊதியம் ரூ 265/- இளநிலை உதவியாளர் பெறும் ஊதியம் 350/- தான் என்று எண்ணிப் பார்க்கிறபோது இது போன்ற நிலைமைகள் மாற்றியமைக்க வேண்டும் பதிவறை எழுத்தருக்கு குறைந்தது ரூ 500/- ஊதியம் பெற வேண்டும். ஆந்திரம், கேரளம், திரிபுரா, மேற்குவங்கம் போன்ற மாநில அரசு ஊழியர்கள் பெறுகின்ற போனஸ் போன்ற சலுகைகள், இலவச பணம், இது போன்று பெறுவதற்கு நம சட்டத்தில் இடம் இல்லை என்று அரசு கூறினாலும் இதர மாநிலங்கள் கொடுப்பது போன்ற 'எக்ஸ்கிரேஷியா' பேமெண்ட்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலாவது நாம் பெற வேண்டும். நம் கோரிக்கைகள் பெறுவதற்கு எல்லா இயக்கங்களும போராடினால் தான் பெற முடியும் என்ற முடிவான கருத்து வந்துள்ளது. நாம் தொழிற்சங்க உரிமையை நாமாகவே எடுத்துக்கொண்டு, இன்று பல போராட்டங்களை நடத்தி வருகிறோம். இன்று அறிவிக்கப்படுகிற புள்ளி விவரங்கள் அடிப்படையில் எவ்வளவு மோசடி நடைபெறுகிறது என்று நாம் அறிவோம். எட்டு புள்ளி உயர்ந்தால்தான் ஒரு அகவிலைப்படி உயர்வு கிடைக்கிறது. ஆனால் மத்திய அரசு ஊழியருக்கு ஒரு அகவிலைப்படி உயருகிறபோது ஒரு மாநில அரசு ஊழியருக்கு விலைவாசி உயருகிறது. மாநில அரசு அகவிலைப்படி உயர்த்துகிறபோது மேலும் ஒரு முறை விலைவாசி உயரும்போது மாநில அரசு ஊழியர்கள் எவ்வளவு அவதிக்குள்ளாகிறாகள் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது மிகவும் வேதனையாய் இருக்கிறது. இந்த நிலைமைகள் மாற வேண்டும். தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம் நிம்மதியான வாழ்க்கை, பிற மாநிலங்களில் அரசு ஊழியர்கள் பெறும் சலுகைகள் வங்கி ஊழியர்கள், எல். ஐ. சி ஊழியர்கள், தனியார் கம்பெனி ஊழியர்கள் பெரும் ஊதியம் நாமும் பெரும் காலம் என்றோ? என்ற கேள்விக்குறிக்கு விடை காணததான் பிரதிநிதிகளாகிய நீங்கள் கூடி இருக்கிறீர்கள் அமைச்சுப்பணியாளர்களுக்கு முறையான 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி உயர்வு, இவைகள் எல்லாம் நடக்க. ஒற்றுமையுடன், கட்டுப்பாடுடன், நம்பிக்கையுடன் இயக்கத்தை வளர்க்கும் வகையில் நம் விவாதம் அமைய வேண்டும். நம் உரிமைகளை பெறுவதற்கு கோரிக்கைகளை அடைவதற்கு வர்க்க உணர்வுகள் உண்டாக்குவதற்கு நாம் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு 48வது மாநாட்டிற்கு வருகை தந்த அனைவரையும் மீண்டும் வருக, வருக என வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



## தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின்

48-வது மாநில மாநாட்டில்.

7—8—81 அன்று நடைபெற்ற

கருத்தரங்கு நிகழ்ச்சியில்

திரு கே. ஆர். பூபதி அவர்கள்

# நிகழ்த்திய வரவேற்புரை

அன்பார்ந்த கருத்தரங்குநிகழ்ச்சியின் தலைவரும் ஒன்றியத்தின் மாநில பிரச்சார செயலாளருமாகிய மதிப்பிற்குறிய திரு, கண்ணன் அவர்களே, கருத்தரங்கிலே பங்கேற்று கருத்துக்களை வழங்கிட வருகைதந்துள்ள, பெரியோர்களே, சான்ருேர்களே. மாநிலநிர்வாகிகளே, மாவட்ட நிர்வாகிகளே, வட்டக்கிளை நிர்வாகிகளே, பல மாவட்டங் களிலே இருந்து வருகை தந்துள்ள அன்பு உடன்பிறப்புகளே உங்கள் அனைவரையும் ஒன்றியத்தின்சார்பில் வரவேற்கின்றேன்,

இறந்தால் ஆயிரம் பத்து
இன்னல் களையப்பெற்ருேம்
ஓய்வுக்காயிரம் பத்து
ஓயாமல் நாம் கேட்கின்ருேம்
ஓயாதிந்தப் பட்டாளம்
ஓரணியில் நின்ருளும்
எம். எல், ஏ, க்கள் பலபேரும்
எம். எல். சி, க்கள் பலபேரும்
எம். பிக், கள் உடன்சேர்ந்து
எம்மை வாழவைப்பீரே!

நித்தம் நித்தம் பட்டினியால்
நிதமும் நிதமும் வேதனையால்
செத்தும் பிழைத்தும் வாழ்கின்ருேம்
பத்தும் எட்டும் எங்களுக்கு
படியாய் தந்தால் போதாது
துடியாய் நாங்கள் துடிக்கின்ருேம்
வீட்டுக் கொருவர் நாட்டைக்காக்க
வீறுகொண்டு வாராய் என்று
ஏட்டில படித்த எங்களுக்கு
நாட்டை காக்கும் பொறுப்புண்டு

வீட்டுக்கொருவர் வேலையென்று
நாட்டையாள்வோர் அறிவித்தால்
வீட்டை நோக்கிச் செல்லும் போது
கோட்டை நாயகன் வாழ்க வென்று
கேட்டா நாங்கள் வாழ்த்திடுவோம்

தேவைக்கேற்ற ஊதியத்தை
சேவைக்குத்தான் கேட்கின்ருேம்
நாவை நீங்கள் அசைத்திட்டால்
கோவைப்பழமென தித்திக்கும்

பாங்கு ஊழியர் பலபேரும்
பகட்டாய் வாழ்க்கை நடத்தையிலே
எங்கும் இந்தப்பட்டாளம்
பாங்காய் வாழ்வதெப்போது

போனஸ் கேட்டுப் போராட்டம்
போன திங்களில் ஆந்திராவில்
யானை பலத்துடன் நடத்திட்டே
தேனைப்போன்று தித்திக்கும்
ஆணைப்பெற்று வந்திங்கோ
அமர்ந்திருக்கும் அடலேறே

இலக்கியச் செல்வர் இன்றிங்கே
இடிமுழக்கம் செய்திட்டால்
இன்னல்களையும் எளிபதிலே
இம்மியளவும் ஐயமில்லை

இன்றவர் பல்பேர் வர்தாட
இருக்கையில் உள்ள காட்சிதனை
இளங்கோ தலைவர் பார்க்கின்ருர்
இதமாம் திட்டம் தீட்டிடுவார்
பதமாய் சலுகைகள் பெற்றிடுவார்

இன்முகத்தோடு வந்திருக்கும்
இனிய தலைவ சான்ருேர்களே
வருக எனவே வரவேற்கின்றேன்
இனிவரும் கால கட்டத்தில்
இணைந்து எங்களை வழிகாட்டி
இனியதோர் வாழ்வு பெற்றிடவே
இட்டுச்செல்வீர் எங்களையென
தொட்டு வரவேற் றமர்கின்றேன்

**கொ. ரா. பூபதி,**
சென்னை மாவட்ட துணைத் தலைவர்.

# வரவு எட்டணு, செலவு பத்து அணு--
# அரசு அலுவலர் அவதி சொல்லொணு

**கி. சரவணபவாநந்தம்**
செயலாளர்.
தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்,
மன்னார்குடி வட்டக்கிளை.

அஞ்சு ரூபா நோட்டை கொஞ்ச முன்னே மாத்தி
காசு மிச்சமில்லை.

கையிலே வாங்கிய சம்பளம்
பையிலே போடு முன்னே பறக்குது!

காய்கறிகள் விலையை கேட்டா
கதி கலங்கி போவுது!

எண்ணெய்விலையை.கேட்டா,
எங்கோ போய் நிக்குது!

அரைக்காசு உத்தியோகம் என்ருலும்
அரசாங்க உத்தியோகம் மேல்

ஏழைக்கு ஏது இன்பம்
பணம் இல்லேண்ணு வாழ்க்கையே துன்பம்
இவையெல்லாம் பழைய பாட்டுகள்
ஆனுல் இன்றைய அரசு அலுவலர்களின் அவதிப்பட்டுகள்
''ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை
போகாறு அகலாக்கடை''-என்பது வள்ளுவம்
இதன் பொருள் வரவுக்குள் செலவு அடங்கில்தீதில்லை.
வருமானம் Rigid வாழ்க்கைக்கானச் செலவு
Elastic முதல் தேதி வருமானம் 30-ம் தேதி வரை வருமா?
இன்றைய விலைவாசியில் 4 முழம் வேட்டி 12 ரூபாய்
2 கெஜம் காடா கூட ரூ.5. 50 வீதம் ரூபாய் 11
துண்டு 1-க்கு ரூ. 5/- தையல் கூலி ரூ.4
வீட்டு வாடகை என்னவென்ருல், விலையை சொல்கிருன்.
பால் விலையை கேட்டால், பகீர் என்கிறது.
4 இட்டிலி ஒரு கப் காப்பி ரூ. 1. 30 ஒரு வேளை
அளவு சாப்பாடு ரூ. 2-25 க்கு
மாலை காப்பி ரூ. 1-50 இரவு சாப்பாடு ரூ. 2-25 ஆக
ஒரு நாளைக்கு ரூ. 7.30. 30 நாளைக்கு ரூ. 219-00

இதைத்தவிர ரூம் வாடகை சவரம் எண்ணெய் முழுக்கு இச்சில்லினம் திருமணமாகா ஒரு அரசு அலுவலரின் தனிப்பட்டச் செலவு. அவர் தம் குடும்பத்தின் செலவு என்றுவது. அரசு அலுவலர்கள், திருமணமாகியும், அடிக்கடி மாற்றமும் வீடு கிடைக்கும் பிரச்சனையும் சேர்ந்து பிரம்மச்சரியமாகவே வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை இருக்கிறது. பிரம்மச்சாரியின் செலவு இவ்வாறாக இருக்கும்போது ஒரு அரசு அலுவலரின் ஐந்து நபர் அடங்கியவர்களின் குடும்பமாதாந்திர செலவினைப்பாரீர்

## உண்ண உணவு:-

| | | |
|---|---|---|
| 1. | மளிகை சாமான்கள் (டீத்தூள் காப்பித்தூள் உள்பட மாதம் ஒன்றுக்கு குறைந்தது. | 75/- |
| 2. | அரிசி 100 கிலோவுக்கு ஒரு கிலோ ரூ. 2 விதம் | 200/- |
| 3. | காய்கறி நாள் ஒன்றுக்கு ரூ. 2/- விதம் (தேங்காய உள்பட) | 80/- |
| 4. | விறகு ஒரு கிலோவுக்கு 50 பைசா விதம் 80 கிலோ | 400 |
| 5. | **எண்ணெய் வகையறுக்கள்** | |
| | ந. எண்ணெய் 2 லிட்டர் ரூ: 12.30 விதம் | 24.60 |
| | க. எண்ணெய் 2 லிட்டர் ரூ. 11/90 விதம் | 23,80 |
| | தே. எண்ணெய் ½ லிட்டர் ரூ. 18.80 விதம் | 9,40 |
| | ம. எண்ணெய் 5 லிட்டர் ரூ 1.80 விதம் | 9.00 |
| 6. | குடும்பகார்டில் மூலம் 3 கிலோ சீனி 3,50 விதம் (அ) போதாமல் வெளி மார்கட்டில் 2 கிலோ ரூ. 7.50 விதம் | 15.00 |
| 7. | பால் தயிர் மோர் லிட்டர் பால் ரூ. 2.40 விதம் 30 லிட்டர். | 79.20 |

## இருக்க இடம்

| | |
|---|---|
| வீட்டின் வாடகை மின் கட்டணம் உட்பட மாதம் | 70.00 |

## குழந்தைகளுக்கு கல்வி வசதி

| | |
|---|---|
| ஆண்டு ஒன்றுக்கு சராசரி (1000) மாதம் ஒன்றுக்கு | 85.00 |

## உடுக்க உடை :-

| | |
|---|---|
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 600 விதம் மாதம் ஒன்றுக்கு | 50 00 |
| இதர சில்லறை செலவினங்கள் நாள் ஒன்றுக்கு ரூ 2.50 விதம் | 75.00 |

இதைத்தவிர மருத்துவச் செலவு (சில மருந்துகளுக்கு மட்டும் செலவுத்தொகை அரசினரால் வழங்கப்பட்டு வருகிறது) விருந்தினர் செலவு திருமணம் மற்ற காரியங்களுக்குமான செலவினங்கள். இந்நிலையில் ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களின் வாழ்க்கை செலவினை சொல்லத் தேவையில்லை. தாங்க முடியாத நிலை. மத்திய, மாநில அரசுகள் விலைவாசியை கட்டுப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்று, 33 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. நல்லபல தலைவர்களை நாடு பெற்றிருந்தும் ஏறி வரும் விலைவாசியை கட்டுப்படுத்த இயலாத நிலையில் இன்றும் நாம் காண்கிறோம்: சீனநாட்டில் 1952லிருந்து விலைவாசியில் ஏற்றமில்லை என்று அண்மையில் சுற்றுப்பயணம் செய்த சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் திரு. நாகநாதன் அவர்கள் தனது சுற்றுப்பயண கட்டுரையில் தெரிவித்துள்ளார்கள். இது ஆச்சரியமான செய்தியாக நமக்கு தோன்றுகிறதல்லவா? (1) இந்நிலையில்

## குறிப்பாக :

| | | |
|---|---|---|
| 1 | கடைநிலை ஊழியரின் அடிப்படை சம்பளம் | ரூ. 250/- |
| | பஞ்சப்படி | ரூ: 38/- |
| | வீட்டு வாடகைப்படி | ரூ. 15/- |
| | கூடுதல் | ரூ. 303/- |
| 2 | பதிவறை எழுத்தரின் அடிப்படை சம்பளம் | ரூ. 265/- |
| | பஞ்சப்படி | ரூ. 40/ |
| | வீட்டு வாடகைப்படி | ரூ. 15/- |
| | கூடுதல் | ரூ. 320/- |
| 3 | இளநிலை உதவியாளர் அடிப்படை ஊதியம் | ரூ350/- |
| | பஞ்சப்படி | ரூ. 53/- |
| | வீட்டு வாடகைப்படி | ரூ 25/- |
| | கூடுதல் | ரூ. 428/- |
| 4 | உதவியாளரின் அடிப்படை சம்பளம் | ரூ. 400/- |
| | பஞ்சப்படி | ரூ. 68/ |
| | வீட்டு வாடகைப்படி | ரூ. 25/ |
| | கூடுதல் | ரூ. 493/. |

ஆனால் குடும்ப மாதாந்திர செலவு ரூ. 851.50 வழங்கப்படுகின்ற ஊதியத்திற்கும் ஆகின்ற குறைந்தபட்ச செலவிற்கும் சரிக்கட்ட முடியாத நிலையில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் அரசு அலுவலர்களே! ஒன்றுபடுங்கள் என்று விண்ணப்பித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை இல்லையேல் அனைவருக்கும் தாழ்வே" என்று பாரதியின் பாடலை நினைவு கூர்ந்து நம் கோரிக்கைகள் வெற்றிபெற மாநிலத்தலைவர் திரு. சிவ. இளங்கோ அவர்களின் தலைமையில் அணிவகுப்போம் வாரீர்! வாரீர்!!

84370

*❀*